## அத்தியாயம் 5

# புது சிருஷ்டியின் அமைப்பு

*ஆவிக்குரிய ஆலயத்தின் ''ஜீவனுள்ள கற்கள்''–உண்மையான புது சிருஷ்டிக்கும் பெயரளவான புது சிருஷ்டிக்கும் இடையே உள்ள வித்தியாசம்– ''தேவ இரகசியமும்'' ''அக்கிரமத்தின் இரகசியமும்'' – அந்திக் கிறிஸ்துவின் மாபெரும் அமைப்பு–வேத வாக்கியங்கள் நம்பத்தகுந்தவை – உலகத்துக்கும் ஆலயம் செல்வோருக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள சுயாதீனம் – குழப்பத்தில் ஓர் ஒழுங்கு– ''குறித்தகாலத்தில்'' – ''யுகங்களின் முடிவு'' – பிதாவினால் நடப்பட்ட திராட்சை செடி – ''ஆட்டுக்குட்டி யானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்''–யூதாசின் இடத்துக்கு வந்த பவுல் – அப்போஸ்தலரின் எண்ணிக்கை பன்னிரெண்டுதான் – அப்போஸ்தல அதிகாரம் – அப்போஸ்தலரின் உறுதியான குணாதிசயங்கள் – அப்போஸ்தலர் பவுல், மற்ற அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் குறைவானவர் அல்ல – பன்னிருவரின் ஊக்கம்– அப்போஸ்தலர்கள் எழுதியவைகளின் மேல் தெய்வீக கண்காணிப்பு – ''இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'' – சுவிசேஷங்களின் இசைவு – அதிகாரத்தின் திறவுகோல் – அப்போஸ்தலரின் தவறாமை – எதிர்ப்புகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன – ''கிறிஸ்து ஒருவரே உங்கள் குருவாயிருக்கிறார்'' – ''தேவனுடைய மந்தையே'' உண்மையான சபை – அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், ஊழியக்காரர்கள், போதகர்கள் – தேவனின் அமைப்பாகிய புது சிருஷ்டி முழுமையாக நிறைவடைந்தது – அதன் மேற்பார்வையாளரும் அவரே–ஆவியின் வரங்கள் அதன் தேவைக்குப் பிறகு நின்று போனது – ''பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தின்'' ஐக்கியம் – சக்திகளின் ஐக்கியம், கிறிஸ்தவனுக்கு எதிரானவர்கள் – பிஷப்புகள், மூப்பர்கள், உதவிக்காரர்கள் – ''தீர்க்கதரிசி'' என்ற வார்த்தையின்*

விசேஷித்த பொருள் – மனத்தாழ்மை மூப்பருக்கு அத்தியாவசியமானது – மற்றத் தேவையான தகுதிகள்– உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள் – சபையில் போதகர்கள் – அநேகர் போதிக்க சாமர்த்தியம் உள்ளவர்களா யிருக்க வேண்டும் – ‘‘சகோதரரே, உங்களில் அநேகர் போதகர்களா காதிருப்பீர்களாக’’ – ‘‘ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை’’ – ‘‘போதிக்கிறவனும் போதிக்கப் படுகிறவனும்’’ – சபையில் ஸ்திரீகளின் பங்கு – ஸ்திரீகள் உடன் வேலையாட்களாக – ‘‘அவள் தலையை முக்காடிட்டுக் கொள்ளக்கடவள்.’’

முதலாம் உயிர்த்தெழுதல் வரை புது சிருஷ்டியானது அதன் பூரணத்தையும் நிறைவு பெறுதலையும் அடையாததுபோன்று, அதன் அமைப்பும் அப்பொழுதுதான் முடிவு பெறும். ஆவிக்கேற்ற மாளிகை இதை விளக்குகிறது: இப்பொழுது ஜீவனுள்ள கற்களாக நாம் மகிமையான ஆலயத்தில் உள்ள இடங்களுக்கு வரும்படி அழைக்கப் பட்டுள்ளோம். மேலும் அப்போஸ்தலர் விளக்கமாகக் கூறுகிறபடி (1பேது. 2:5) நாம் பிதாவின் பிரதிநிதியான இயேசுவினிடத்தில் வருகிறோம், தேவனும் உலகமும் சந்திக்கிற இடமாகிய வருங்காலத்து மகிமையான ஆலயத்தில் நாம் இடம் பெறுவதற்காக உருவம் கொடுக்கிறார், செதுக்குகிறார், பொருத்துகிறார், மெருகூட்டுகிறார். சாலொமோனால் கட்டப்பட்ட முன்மாதிரியாயிருக்கிற ஆலயத்தில் ஒவ்வொரு கல்லும் வெட்டியெடுக்கப்படும் இடத்தில், ஆலயத்தில் அதன் இடத்தில் பொருத்தமாக இருக்கும்படி நன்கு வடிவமைக்கப்பட்டது. அப்படியாகத்தான் நம்மோடும் இருக்கிறது– எல்லாவிதத்திலும் பொருத்தமாயிருப்பதற்கான ஆயத்தமும் தற்கால வாழ்க்கையில் நடக்கிறது. மாதிரியில் உள்ளதுபோல எல்லா வடிவமைக்கப்பட்ட கல்லும் அதனதன் இடத்திற்கு சுத்தியின் சத்தமில்லாமல் வைக்கப்பட்டது. அதுபோல உண்மைப்பொருளில், ஆண்டவர் ஆயத்தம்பண்ணும்படி சந்தோஷமாக இப்போது சமர்ப்பிக்கின்ற ஜீவனுள்ள கற்கள் குழப்பமில்லாமல், மேற்கொண்டு ஆயத்தம்பண்ணவும், ஒழுங்கு பண்ணவும் தேவையின்றி, திரைக்கு அப்பால் அவரோடு இணைக்கப்படும்போது, அவர் மூலைக்கல்லாக, அவருக்குக் கீழாகவே முற்றுமாக அமைக்கப்படும்.





எனினும், ஜீவனுள்ள கற்கள் ஆயத்தம்பண்ணப்படும் காலத்தில் இந்த ஜீவனுள்ள கற்களிடையே ஒருமைப்பாடு அல்லது உறவுமுறை இருப்பதை வேதம் அறிவிக்கிறது. சொல்லப்போனால் அவைகள் ஒருபடி மேலே செல்கின்றன. மேலும் தற்காலிக அமைப்பு ஒன்று இருப்பதை அறிவிக்கிறது. ‘‘மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் உறுதிப்படுத்தும்’’ வேலையில் நம்முடைய முன்மாதிரியான நம்முடைய ஆண்டவர் இயேசுவோடு இசைவான குணாதிசயங்களை உருவாக்குதில் ஒருவருக்கொருவர் உதவி செய்து, பெரிய போதகரும் கட்டிட நிபுணருமான அவருடைய பங்குதாரராக இருக்க வரப்போகிற இராஜ்யத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் இது அனுமதிக்கிறது. தற்போதைய காலத்துக்குரிய திவ்விய ஒழுங்குகளை வெகு கவனமாக சோதித்துப் பார்க்க முயலும்போது, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் எவ்வளவு சுயாதீனத்தை ஆண்டவர் கொடுத்திருக் கிறார் என்பதைக் காண்பது அநேகருக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால் சகோதரருக்காக தங்கள் ஜீவனைக் கொடுக்கும்படியாகவும், அவரோடு உடன் வேலையாட்களாக இருக்கும்படியாகவும், ஆண்டவர் மேல் உள்ள அன்பினாலும், நீதியின் குறிக்கோளுக்காகவும் உந்தப்பட்டு அவரை மனதார ஆராதிக்கிறவர்களை, மனதார பலியாக செலுத்துகிறவர்களை அவர் தேடிக்கொண்டிருக்கிறார் என்ற உண்மையை அறியும்போது, அதிக சுயாதீனத்தை அளிக்கும்படியான தேவனுடைய திட்டம் நல்ல திட்டம் என்பது தெளிவாகிறது. இந்தத் திட்டம் நிச்சயமாகவே இருதயத்தின் விசுவாசத்தை, நன்றாக வளர்ச்சியுற்ற குணாதிசயத்தைச் சோதித்து, ஒருவரோடு ஒருவர் அன்பின் பிரமாணத்தைப் பின்பற்றவும், தனக்கு ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்றிருப்பதை மற்றவருக்குச் செய்ய ஒவ்வொருவர் கொண்டுள்ள ஆர்வத்தையும் நிரூபித்துக் காட்டுகிறது.

இப்படியான ஒரு சுயாதீனம் அல்லது அதற்கு இணையான சுதந்திரம், தற்போதைய காலத்தில் ஆண்டவரின் நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது, எப்படியெனில் சிறுமந்தையைத் தெரிந்து கொண்டு, அவர்களைக் குணாதிசயத்தில் பூரணப்படுத்தி, எதிர்காலத்தின் இராஜரீக ஆசாரியத்துவத்தைக் கற்றுக்கொடுப்பதற்குப் பொருத்தமா யிருக்கிறது. ஆனால் உலகம் மனம் திரும்புவதற்கு, அவர் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்று பொதுவாக எண்ணப்படுகிறது; ஆனுல் அதற்கு அது அப்பாற் பட்டதாயும் போதுமானதாக இல்லாததாகவும் இருக்கும். உலகத்தை வெல்லும்படியாகவும், எல்லாவற்றையும் அவருக்கென கீழ்ப்படுத்தும்படியாகவும் தற்போதைய யுகத்தில் தேவன் சபையை

நியமித்திருக்கிறார் என்ற யூகத்தின் அடிப்படையில் வந்த தவறான உபதேசத்தால், நன்றாக நியாயமாக சிந்திக்கக் கூடிய அநேக மனிதர்கள், ஆண்டவராலும் அப்போஸ்தலராலும் சபை எளிமையாக அமைக்கப் பட்டிருப்பதைக் குறித்து வியந்திருக்கிறார்கள். உலகத்தை மனம் மாற்றம் செய்வதற்கு இப்படியான ஓர் ஒழுங்கு போதாது என்று கண்ட மனிதர்கள் அமைப்பை விரிவாக்க எடுத்த பெரும் முயற்சிகளை, கிறிஸ்தவ சபை ஸ்தாபனங்களில் காண்கிறோம். இவைகளில் ஒன்று கற்பனை செய்து பார்க்கக்கூடிய அளவிற்கு, அதிகமாக, தந்திரமும், வல்லமையும் உள்ள அமைப்பாகக் காணப்படுவது போப்பாண்டவரின் அமைப்பாகும். மெதடிஸ்ட் எபிஸ்கோப்பல் (Methodist Episcopal) முறையானதாகவும் திறமையுள்ளதாகவும் ஒரு வித்தியாசமான வகுப்பினரைக் கட்டுப்படுத்து வதாயும் உள்ளது. ஆனால் சற்று உயர்வான ஸ்தானத்தில் உள்ளது. இந்த இரண்டு பெரிய முறைகளின் திறமையான அமைப்புகள்தான் ''கிறிஸ்தவ உலகில்'' அவர்களுக்கு வெற்றியையும் பலத்தையும் கொடுத்தன. நாம் மேற்கொண்டு பார்க்கும்போது இவைகளும் எல்லா மனித ''சபைகளும்'' அவர்களுடைய அமைப்புக்குள் உள்ளன என்றும், ஆண்டவர் ஏற்படுத்தின சபை முற்றிலும் வித்தியாசமானது என்றும் காணலாம். அவர்களுடைய வழிகள் அவருடைய வழிகளல்ல, அவர்களுடைய நினைவுகள் அவருடைய நினைவுகள் அல்ல, அதுபோல் பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே ஆண்டவருடைய வழிகளும், நினைவுகளும் மனிதனுடையவைகளைக் காட்டிலும் உயர்ந்திருக்கிறது. (ஏசா. 55:8,9) காலம் கடந்து போவதற்கு முன்னர், உண்மையான இருதயம் உள்ளவர்கள் கிறிஸ்துவின் எளிமையை விட்டுவிட்ட பெரிய தவறையும், அவர்கள் தங்களுடைய கிரியையைச் செயல்படுத்துவதில் தேவனைக்காட்டிலும் ஞானமுள்ளவர்களாக இருக்க முயற்சிப்பதையும் காண்பார்கள். இதனால் உண்டான விளைவுகள் அவருடைய ஞானத்தையும் மனிதருடைய முட்டாள் தனத்தையும் காட்டும்.

## பெயரளவான புது சிருஷ்டியும் உண்மையான புது சிருஷ்டியும்

இஸ்ரயேலர் எல்லாரும் முன்மாதிரியாக இருக்கிற ஜனங்களைப் போல் பெயரளவில் இருந்தாலும், ''உண்மையான இஸ்ரயேலர்கள்'' அவர்களோடு ஒப்பிடப்படும்போது மிகக் குறைவாகவே இருந்தார்கள்.





ஆகவே உண்மைப்பொருளில் கூட பெயரளவுக்கு உள்ள ஒரு சபையையும் உண்மையான ஒரு சபையையும், பெயரளவுக்கு உள்ள ஒரு புது சிருஷ்டியும், ஓர் உண்மையான புது சிருஷ்டியும் இருப்பதைப்பார்த்து நாம் ஆச்சரியப்படக் கூடாது. கிறிஸ்தவம் ஓரளவுக்குப் பிரபலமான காலத்திலிருந்தே ''களைகள்,'' ''போலியான கோதுமை'' போன்றவை உண்மையான கோதுமையைப் போன்று கோதுமை– நிலத்தை நிரப்பியிருக்கிறது. இருதயத்தை அறிய முடியாத மனிதனுக்கு, பொய்யிலிருந்து உண்மையை கண்டுபிடிப்பது எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், ஆண்டவர் கோதுமையை களைகளினின்று அறிகிறார், அவர் இருதயத்தை அறிகிறார், ''அவர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார்'' என்று நமக்கு நிச்சயப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவர், நாம் உண்மையிலேயே உண்மையான ஆடுகளையும் ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டிருக்கிற ஓநாய்களையும், உண்மையான கனிகொடுக்கும் திராட்சைச் செடியையும் உண்மையான செடியைப்போன்று தோற்றமளிக்கும் முட்களையும் நெறிஞ்சில்களையும் கண்டு பிடித்து, அதற்கிடையில் உள்ள வித்தியாசத்தை அறிய வேண்டும் என்று எதிர் பார்க்கிறார். ஆனால் பொதுவான கணிப்பைத் தாண்டி, வெளிப்புற குணாதிசயத்தைப் பொதுவாக ஆராய்ந்து பார்ப்பதற்கு மேலாக அவருடைய ஜனங்கள் சொல்வதை அவர் அனுமதிப்பதில்லை; அவர் ''காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்'' என்கிறார். திராட்சைச் செடியில் உண்மையான கொடிகள் என்று நீங்கள் அறியும் போது, பழுத்த கனிகளைக் கொடுக்கும்படி எவ்வளவு காலம் அவைகளுக்கு அளிக்கப்படல் வேண்டும் என்று தீர்மானிக்க முயற்சிக்க வேண்டாம். அதை நாம் தோட்டக்காரருக்கு விட்டுவிட வேண்டும். அவர் ஒவ்வொரு கொடியையும் சுத்தம் செய்து, இறுதியில் ''கனி கொடுக்காத'' ஒவ்வொரு கொடியையும் அல்லது அங்கத்தினரையும் நீக்கிப் போடுவார்; அவரே நடுதலையும் தண்ணீர் பாய்ச்சுதலையும் செய்தார் என்பதையும், உண்மையான செடியில் ஒவ்வொரு கொடியையும் அவரே முளைத் தெழுப்பப் பண்ணினார் என்பதையும் அறிந்து, கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த உண்மையான அர்ப்பணம் செய்து கொண்ட ஒவ்வொரு அங்கத்தினரையும் சீர்திருத்துவது, மற்றும் நீக்கிப்போடுவது போன்ற, கொடியை சுத்தம் செய்யும் வேலையைத் தோட்டக்காரருக்கே நாம் விட்டுவிட வேண்டும். செடியில் இருப்பதினால் உள்ள குணங்கள் ஓர்

அளவிற்கு ஒவ்வொரு கொடியிலும் அல்லது அங்கத்தினரிலும் உணரப்படல் வேண்டும்; மேலும் ஒவ்வொன்றும் அது வளரும்படியாக உற்சாகப்படுத்தப்படவும், உதவி செய்யப்படவும் வேண்டும்; இந்தக் கொடிகள் அனைத்திற்கும் இடையில் அன்பே சட்டமாக இருக்க வேண்டும்; திவ்விய வார்த்தை சொல்வதற்குமேல், அது அனுமதிக்காததை, எந்த ஒரு கொடியையும் கேலி செய்யவோ, கண்டிக்கவோ அல்லது சுத்தம் செய்யவோ இன்னொரு கொடிக்கு இம்மியளவுகூட உரிமை கிடையாது; இதற்கு மாறாக அன்பு இயல்பாகவே, மாபெரும் தோட்டக்காரர் அனுமதிக்கக் கூடிய அளவு இரக்கமாய், பட்சமாய், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் இருக்கத் தூண்டுகிறது. இவைகள் நாம் ஏற்கெனவே பார்த்தபடி விசாலமாயும், தாராளமாகவும் இருப்பதுடன், இவைகள் ஒவ்வொரு கொடியிலும் நற்குணங்களை விருத்தியடையச் செய்யும்படியாக அமைக்கப் பட்டுள்ளன.

திவ்விய திட்டத்தில் உள்ள எளிமையைப் பார்க்காததினால் அல்லது விட்டுவிட்டதினால், மனிஷீக ஸ்தாபனங்களில் இவைகள் பல்வேறு விதமாக வித்தியாசப்படுகின்றன. யாரெல்லாம் அங்கத்தினர்களாக அல்லது செடியின் கொடிகளாக ஏற்று கொள்ளப்பட முடியும், யாரெல்லாம் முழு ஐக்கியத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதைக் குறித்ததான தன்னிச்சையான சட்டதிட்டங்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; வேதம் சொல்லாத பல நிர்ப்பந்தங்களையும், பல்வேறு சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; அவர்கள் வேதம் விதிக்காத அநேக கோட்பாடுகளையும் விசுவாச அறிக்கைகளையும் விதித்திருக்கிறார்கள்; வேதம் விதிக்காத பல்வேறு தண்டனைகளையும் இவைகளுக்கென ஏற்படுத்தியிருக்கிறார்கள்; மேலும் ஐக்கியம் கொள்ளாமல் தடுக்க, புறம்பாக்குதல் (excommunication) போன்றவைகளுக்கு விதிமுறைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிற உண்மையான சபைக்கு, உண்மையான திராட்சைச் செடியாகிய புது சிருஷ்டிக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கு மாறாக இருக்கிறது.

வேதாகமத்தில் கிறிஸ்துவின் சபையானது ‘‘தேவனின் இரகசியம்’’ என்று அழைக்கப்படுவது குறித்த உண்மையை ஏற்கெனவே கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஏனெனில் எதிர்பார்ப்புக்கு





மாறாக, சபையானது மேசியாவின் சரீரமாக இருந்து, அதன் அபிஷேகம் பண்ணப்பட்ட தலைவரான இயேசுவுக்குக் கீழ் உலகத்தை ஆளுகை செய்து, ஆசீர்வதிக்கும். கடந்த யுகங்களுக்கும், நியமங்களுக்கும் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த இரகசியம் அல்லது பரம இரகசியம் இப்பொழுது பரிசுத்த வான்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே. 3:3–6) இந்த இரகசியமானது சீக்கிரத்தில் இந்த சுவிசேஷ யுகம் முற்றுப்பெறும்போது, புது சிருஷ்டி பூர்த்தியாகும்போது முடிந்துவிடும். பாபிலோனை ஒரு போலியான ஒழுங்கு முறை (தாயும் குமாரத்திகளும் –சிலர் அதிகமாக, சிலர் குறைவாக மோசமானவர்கள், சிலர் அதிகமாக, சிலர் குறைந்த பட்சம் போலியானவர்கள்) என வேதம் குறிப்பிடுவதை ஏற்கனவே நாம் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். அதுதான் ‘‘அக்கிரமத்தின் இரகசியம்’’ எனப்பட்டது. இந்த போலியான ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவர்கள் ஒரு நோக்கத்துடன் அல்லது வேண்டுமென்றே தேவனுடைய ஜனங்களை தவறாக வழி நடத்துவதற்கு ஏற்படுத்தினார்கள் என்று நாம அர்த்தப்படுத்தித் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. அதற்குப் பதிலாக, இந்த விஷயத்தில் சாத்தான் தான், தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும் கூறி, இருளை வெளிச்சமாகவும், வெளிச்சத்தை இருளாகவும் காட்டி ‘‘முழு உலகத்தையும் வஞ்சித்தான்’’ என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சாத்தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கு ஒத்துழைப்பது போன்று பாசாங்கு செய்து ‘‘இப்பொழுது கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிறான்.’’ (ஏசா. 5:20; எபே. 2:2) கிறிஸ்துவின் வழியிலிருந்து திசைமாறப்பண்ண ஏதுவான கிறிஸ்தவர்கள் அனைவரோடும் அவன் ஒத்துழைப்பதில் மகிழ்ச்சியடைகிறான்; பூலோகத்திலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்படியாக, தன்னையே தியாகம் செய்வது, தன்னைத்தான் வெறுப்பது போன்ற பிதாவின் வழிகளைக் காட்டிலும் மேலான வழிகள் உண்டு என்று ஆண்டவரை இணங்கச்செய்ய முயற்சித்தது போல, இந்த சுவிசேஷ யுகத்திலும் அவன் பிதாவினுடைய திட்டங்களுக்கும் வழிமுறைகளுக்கும், உண்மையாகப் பிரதிஷ்டை செய்துகொண்ட ஆண்டவருடைய சகோதரர்கள் அதிக கவனம் செலுத்தக் கூடாது என்ற அவனுடைய திட்டத்திற்கு அவர்கள் இசையும்படி முயற்சித்துக் கொண்டிருக்கிறான். வேதாகமம் சுட்டிக்காட்டுகிறவை களைக் காட்டிலும் வேறு வழிகளில் ஆண்டவருக்கு ஊழியம் செய்யமுடியும்

என்று நினைக்கும்படி அதிக ஞானம் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்று அவன் விரும்புவான். மனுஷீக முறைகளின் மீதும், அவர்கள் செய்யும் வேலையின் மீதும், அவர்கள் ஆரம்பித்துள்ள ஸ்தாபனங்கள் மீதும், வைராக்கியமும், பெருமையும் கொள்ளும்படியான உணர்வுகளால் அவர்களை நிரப்புவான். ஆண்டவரிடம் சத்துருவுக்கு வெற்றி கிட்டவில்லை, ஏனெனில் எப்பொழுதுமே அவருடைய மாறாத பதில் ''எழுதியிருக்கிறதே'' என்பதாகும். ஆனால் அவரைப் பின்பற்றுகிறவர்களோடு அப்படியிருந்ததில்லை. ஆனால் ஏராளமானோர் எழுதப்பட்டிருக்கிறதை அலட்சியப்படுத்துகிறார்கள்; ஆண்டவரின் உதாரணத்தையும் வார்த்தைகளையும் அலட்சியப்படுத்துகிறார்கள்; அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும் உதாரணத்தையும் அலட்சியப்படுத்துகிறார்கள்; அவர் அனுமதிக்கிறார் என்று அவர்கள் நம்புகின்ற, அவருக்குத் துதிகளைப் பெருகப்பண்ணும் என்று விசுவாசிக்கிற ஒரு திட்டத்தை தேவனுக்கென்று செயல்படுத்துவதில் மும்முரமாயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள், தேவன் ஆரம்பத்தில் திட்டமிட்டபடியே தேவனுடைய ராஜ்யம் வருவதையும், அவரது முறையின்படியே எல்லாம் நடந்தேறுகிறது என்பதையும் அவர்கள் காணும்போது, எவ்வளவு தவறாகப் புரிந்து கொண்டோம் என்று அவர்கள் உணர்வார்கள் அல்லவா! அதன் பின்னர், அவருக்குக் கற்றுக்கொடுக்க முயற்சிப்பதைக் காட்டிலும் தேவனால் கற்றுக்கொடுக்கப்படுவதற்காக எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும், அவர் அங்கீகரிக்காத வேலையை அவருக்குச் செய்யாமல், அவருடைய வழியில் அவருடைய வேலையைச் செய்வது நல்லது என்றும் கண்டு கொள்வார்கள். இந்த மனுஷீக திட்டங்களில் உள்ள வெற்றி, ரோமன் கத்தோலிக்க சபை, மெதடிஸ்ட் சபைகளில் உள்ள அளவுக்கு மற்ற சபைகளிலும் காணப்படும்போது, இம்மாதிரியான முறைகள் ''மிகவும் மாய்மாலம்'' உள்ளதாக தோற்றமளிக்கின்றன.

இந்த சுவிசேஷ யுகத்தின்போது கோதுமை நிலத்தில் களைகள் வளருவதை ஆண்டவர் தடை பண்ணவோ, அதில் தலையிடவோ இல்லை. அதற்கு மாறாக அவைகள் இரண்டும் ''அறுவடை'' காலம் வரை ஒன்றாக வளரும்படியாக எதிர் நோக்கியிருக்க வேண்டும் என்று தன்னுடைய ஜனங்களுக்குப் போதித்தார். அந்த நேரத்தில் அவரே அங்கு இருந்து,





அவைகள் பிரிக்கப்படுவதை மேற்பார்வையிட்டு, கோதுமையை அவருடைய களஞ்சியத்தில் (மகிமையடைந்த நிலையில்) சேர்ந்து, உபத்திரவத்தின் காலத்திற்கென களைகள் மொத்தமாகக் கட்டப்படும்படியாகப் பார்ப்பார், இதோடு யுகமும் முடியும்._அப்போது அவைகளை மனிதர்களை அழிப்பதுபோன்று அழிக்காமல் அவைகளைக் ''களைகளாக'' அல்லது போலியான புது சிருஷ்டிகளாக அழிப்பார். உண்மையிலேயே களைகளில் அநேகர், மதிப்பிற்குரியவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக, உலகம் அழைக்கின்ற விதமாக ''நல்ல ஜனங்கள்'' என்றிருப்பார்கள். ஆகவே எல்லா புறஜாதியாரின் மதங்களிலும் கூட நல்லவர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்கள் உண்டு. ஆனாலும் களைகளைக் காட்டிலும் குறைவானவர்களாகவே இருப்பார்கள். இந்தக் களைகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் உண்மையான ''கோதுமையோடு'' கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினால் எல்லா விதத்திலும் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், அனுகூலம் பெற்றவர்களாகவும், கோதுமையில் உள்ள ஆண்டவரின் ஆவியை ஓரளவுக்குப் பகுத்தறிந்தவர் களாகவும் இருக்கிறார்கள்.

பவுல் அறிவிக்கின்ற அக்கிரமத்தின் இரகசியம் (''பாபிலோன்,'' குழப்பம், கிறிஸ்தவ மண்டலம்) அவருடைய நாட்களிலேயே ஆண்டவருடைய ஜனங்கள் மத்தியில் கிரியை செய்ய ஆரம்பித்திருந்தது; ஆனாலும் பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் மரணமடைந்த பின்னர் இருப்பது லேசாகக் காணப்பட்டது. அப்போஸ்தலர்கள் சபையோடு இருக்கும் போதே, சத்துருவானவன் சில கள்ளப் போதகர்கள் மூலமாக, விசுவாசிகளின் விசுவாசத்தை மட்டுப்படுத்தவும், விசுவாசிகளை சுவிசேஷத்தின் எளிமையான தன்மையிலிருந்தும் நம்பிக்கையிலிருந்தும், வாக்குத்தத்தங்களிலிருந்தும் திசை திருப்பும்படியாகவும் கேட்டுக் கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணுவதைக் கண்டு, அப்படிப்பட்ட கள்ள போதகர்களை அவர்களால் சுட்டிக்காட்ட முடிந்தது. (2பேது. 2:1) அக்கிரமத்தின் கிரியைகளை ஆரம்பித்தவர்கள் என்று சிலரைக்குறித்து அப்போஸ்தலர் பொதுவாகக் கூறுகிறார். ஆனால் தனிப்பட்ட முறையில் இமநேயும், பிலேத்தும் சத்தியத்தை விட்டு விலகி சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள் என்று கூறுகிறார். (2 தீமோ. 2:17) இவ்விதமான கள்ளபோதகர்களைக் குறித்தும், அவர்களுடைய தவறுகளைக் குறித்தும் எபேசு சபையில் உள்ள மூப்பர்கள் மூலமாக, அவருடைய மரணத்திற்குப் பின்னர் இப்படியானவர்கள்,

மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் என்று மறுபடியும் சபையை அவர் எச்சரித்தார். (அப். 20:29) கடைசியாகச் சொல்லப்பட்ட இது குறிப்பிடத்தக்கவிதமாய் நம்முடைய ஆண்டவர் உவமையில் முன்கூட்டியே சொன்னதிற்கு இசைவாக இருக்கிறது. (மத். 13:25,29) இந்தக் கள்ள போதகர்களும் இவர்களுடைய கள்ள உபதேசங்களுமே, ஆண்டவரும் அப்போஸ்தலரும் நாட்டின கோதுமைக்குள் களைகளை விதைத்த சத்துருவின் கையாட்கள் என்பதை ஆண்டவர் தெளிவாகக் காட்டுகிறார். அவர் சொல்கிறதாவது: ''மனுஷர் (விசேஷ ஊழியக்காரர், அப்போஸ்தலர்கள்) நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து களைகளை விதைத்தான்.''

அப்போஸ்தலர்கள் நித்திரை அடைந்து வெகு காலம் ஆவதற்கு முன்னரே, சத்துரு, விரோத உணர்வு வரும்வரை, போப்பு மார்க்கம் என்ற ஒரு பெரிய அந்தி கிறிஸ்துவின் முறைமை உருவாகும் வரை படிப்படியாக வழி நடத்தினான் என்று நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். அந்த அமைப்பு நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி (தொகுதி 2, அத்தி. 9) உடனடியாக உண்டாக்கப்படவில்லை. அது நான்காம் நூற்றாண்டு அளவில் ஆரம்பித்து தொடர்ந்து படிப்படியாக அதன் பலத்தைப் பெற்றுக்கொள்ளத் துவங்கியது. மாபெரும் அந்திக்கிறிஸ்து என்ற அமைப்பு அவ்வளவு வெற்றிகரமாக விருத்தியடைந்தபடியால் அந்த காலத்திலிருந்து ''சீர்திருத்தம்'' காலம் வரை எழுதப்பட்ட சரித்திரங்கள் எல்லாம், அந்தி கிறிஸ்து முறைமைக்கு உடன்படாத அல்லது எந்த ஒரு விதத்திலாவது அதை ஆதரிக்காத ஒவ்வொரு கிறிஸ்தவனையும், கிறிஸ்தவ வகுப்பாரையும், அவர்களது உரிமைகளையும் புறக்கணித்து, அவர்களைப் புராதன முறைகளைக் கடைபிப்பவர்கள், அல்லது விசுவாசமுள்ளவர்கள் என்று கணிக்காமல் ஒதுக்கி வைத்தன. மற்றவர்கள் இரகசியமாகவும், தடைகளோடும் ஜீவிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களைக்குறித்து குறிப்பு இருக்குமென்றால், அவைகள் அழிக்கப்பட்டன. ஒரு வேளை, இன்று தற்கால சத்திய வெளிச்சத்தில் நடப்பவர்களைப்போன்று அந்த காலத்தில் விசுவாசிகள் எண்ணிக்கையிலும், செல்வாக்கு செலுத்துவதிலும் விகிதாச்சாரப்படி அவ்வளவு சொற்பமானவர்களாக இருந்தபடியால் அவர்கள் எதிர்க்க முயற்சி செய்கின்ற மாபெரும் வெற்றிகரமான முறைமையோடு ஒப்பிடுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று அவர்களை ஒருவரும் எண்ணியிருக்க மாட்டார்கள். மேலும் அந்த முறைமை இம்மைக்குரிய



ஆவிக்குரிய காரியங்களில் செல்வாக்குள்ள, பலமுள்ள இடத்திற்குத் துரிதமாக முன்னேறியது.

''சீர்திருத்த காலத்திலிருந்து'' (சத்தியத்தை அடையும்படியான) ஒவ்வொரு புது முயற்சியையும் இன்னொரு அந்திக் கிறிஸ்துவுக் குள்ளாகும்படி அமைப்பதில், சத்துருவானவன் மறுபடியும் தன்னுடைய தந்திரத்தைக் காட்டியுள்ளான்; ஆகவே இன்றைக்கு நம் மத்தியில் ''வேசிகளின் தாய்'' மட்டுமல்ல, அவளுடைய அனேக ''குமாரத்திகளும்'' உண்டு. இந்த உண்மைகளினிமித்தம், புதிய ஏற்பாட்டில் நாம் காண்பதைத் தவிர உண்மையான சபையின் சரித்திரத்தை தேடமாட்டோம்; இடையில் செருகப்பட்ட யோவான் 21: 25; 1யோவா.5:7 போன்ற சில வசனங்களை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்து, புதிய ஏற்பாட்டில் உள்ள இவைகள் நமக்காக மிகவும் பரிசுத்தமாக, உண்மையுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், சுருக்கமாக சில உண்மைகளைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்; இவைகள் வேதம் ஒப்பிடும் அளவிற்கு உண்மையுடன் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதை நிரூபிப்பது மாத்திரமல்ல, அதே நேரத்தில் ஆண்டவராலும், அப்போஸ்தலர் களினாலும் ஏற்பட்டதாகக் கூறப்படும் முறைகள், அவைகள் (அந்திக்கிறிஸ்து முறைமை) ஏற்படுத்தினவைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதையும் உறுதிப்பட கூறுகின்றன; இவைகளைப்பற்றி நமக்கு புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

(1) புராதன சபை, போப்பு சபை அல்லது இன்றைக்கு உள்ள மற்ற சபைகளைப் போன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்குமென்றால் அதைப் பற்றிய குறிப்புகள் இன்றைக்கு இருப்பதைக்காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்கும். நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர் களை ஏற்படுத்திய போது அது ஒரு வைபவமாக அமைத்தார் என்பதைப் பற்றிய சில குறிப்புகள் நமக்கு கிடைத்திருக்கும்; அவரே ஒரு போப்பைப் போன்று ஆடம்பரமாக எங்கேயோ ஒரு இடத்தில் அமர்ந்து, அப்போஸ்தலர்களை இரத்தாம்பர அலங்கார அங்கிகள் அணிந்தவர்களாக, கார்டினால்களைப் (cardinals) போல வரவேற்பது போன்ற காரியங்களை செய்து கொண்டு இருந்திருப்பார்; வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் உண்ணக்கூடாது என்பது போன்ற சட்டதிட்டங்கள் நமக்கு இருந்திருக்கும்; மேலும் ''பரிசுத்த ஜலத்தை'' (தீர்த்தம்) அப்போஸ்தலர்கள் அல்லது ஜனங்கள் மேல் தெளிப்பது

போன்றவைகளைக் குறித்தும், சிலுவை அடையாளம் போடுவதைக் குறித்தும் சட்ட திட்டங்கள் நமக்கு இருந்திருக்கும்; நம்முடைய ஆண்டவருடைய தாயாகிய மரியாள் மறக்கப்பட்டிருக்கமாட்டார்; அவருடைய தாய் அற்புதமாக அவதரித்தார் என்று சொல்லப்படும் கூற்றைக் குறித்தும் ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கும்; மேலும் அவருடைய தாய் ''தேவ மாதா'' என்று அறிவிப்பு வெளியாக்கப் பட்டிருக்கும்; மேலும் இயேசுவே அவருக்கு ஒரு விசேஷ மரியாதை செய்வது போன்று அர்த்தப் படுத்தப்பட்டிருக்கும்; அப்போஸ்தலர்களைக் கூட தாயார் மூலம் தன்னிடம் வரும்படியாக அவர் சொல்வதாக அர்த்தப்படுத்தப்பட்டிருக்கும்; ''பரிசுத்த மெழுகுவர்த்திகளைக்'' குறித்தும், அவைகளை எப்பொழுது, எங்கே, எப்படி உபயோகிக்கப்படல் வேண்டும் என்பதைக் குறித்தும் சில கட்டளைகள் கொடுக்கப் பட்டிருக்கும்; பரிசுத்தவான்களின் ஜெபத்தை மதிப்பதைக் குறித்த போதனைகள், ''திருப்பலி பூஜை''யைப் பற்றிய போதனைகள்,பேதுரு மற்ற சீஷர்களை சந்திப்பதும், அதனால் போப் என்று அவர் குறிப்பிடப்படுவதைக் குறித்தும், அவர் முன்பாக அவர்கள் எப்படி தாழ விழுந்து வணங்கினார்கள் என்பதைக் குறித்தும், அவர்களுக்காக அவர் எப்படி திருப்பலி பூஜை நடத்தினார் என்பதைக் குறித்தும், அப்பத்தில் மறுபடியும் கிறிஸ்துவை உண்டு பண்ணி, தனிப்பட்ட மீறுதலுக்காக அவரை இன்னொரு முறை பலியாகச் செலுத்தவும் அவருக்கு வல்லமை உண்டு என்பதைக் குறித்தும் சில போதனைகள் கொடுக்கப்பட்டிருக்கும்; மேலும் ஸ்தேவான் அடக்கம் பண்ணப்பட்டதைக் குறித்தும், ''பிரதிஷ்டை செய்யப்பட்ட கல்லறையில்'' ஸ்தேவான் அடக்கம் பண்ணும்படியாக, பேதுரு அல்லது மற்றவர்கள் எப்படி ஒரு கல்லறையை அவருக்கென ''பிரதிஷ்டை செய்திருப்பார்கள்'' என்பதைக் குறித்தும், அவருக்கென சில ஜெபங்களை சொன்ன சமயத்தில் ஒரு ''பரிசுத்த மெழுகு வர்த்தியை'' எப்படி அவரது கரத்தில் வைத்தார்கள் என்பதைக் குறித்தும் நமக்கு சொல்லப்பட்டிருக்கும்; பல்வேறு வகுப்பைச் சார்ந்த மத குருமார்களைக் குறித்தும், பாமர மக்கள் அவர்களுக்குச் சகோதரர்களே அல்ல, ஆனால் அவர்களுக்கு கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் குறித்தும் நமக்கு சட்டதிட்டங்கள் இருந்திருக்கும்; மத குருமார்களிடையே, உயர்ந்தவர், தாழ்ந்தவர், மதிப்பைப் பெற்றவர், நன்மதிப்பைப் பெற்றவர், மிக நன்மதிப்பைப் பெற்றவர், பிஷப், ஆர்ச் பிஷப், கார்டினால்கள், போப்புகள் என்று பிரிவுகளும் உண்டு என்றும் நமக்குக் கூறப்பட்டிருக்கும்; மேலும் எப்படி ஒருவரிடமிருந்து ஒருவர்





கனத்தைதேடி, ஒவ்வொருவரும் அவர்களுடைய நிலையை அடைய வேண்டும் என்பதைக் குறித்தும், யார் பெரியவராக இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும் குறிப்பாக சொல்லப் பட்டிருக்கும்.

மேலே சொல்லப்பட்டவைகள் அப்போஸ்தலர்களால் மறைமுக மாகக் கூடச் சொல்லப்படவில்லை என்பது, சபை பகுதியாகவோ, அல்லது முழுமையாகவோ இப்படிப்பட்ட பிரிவுகளைக் கொண்டிருந்தது என்று சொல்லிக்கொள்கிற ஒழுங்குகள், இப்படியான அதிகார வர்க்கங்கள், இப்படியான பதவிகள், அப்போஸ்தலர்களால் அல்லது அவர்களுடைய யோசனையின்படி ஏற்படுத்தப்பட்டது அல்லது அப்போஸ்தலர்களை நியமித்து, அவர்களுடைய வேலையை அங்கீகரித்த ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டது என்று கூறமுடியாதபடி நல்ல ஆதாரத்துடன் இருக்கிறது. *(யோவா. 15 :16; அப். 1:2; வெளி. 21:14)*

*(2)* மேலும் வேதாகமம், இந்த ஞானமான அமைப்பாளர்களால் உண்டுபண்ணப் படவில்லை என்றும் நிரூபிக்கிறது. அவர்கள் போலியான தொன்றை உண்டுபண்ணி யிருப்பார்கள் என்றால் நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளவேண்டும், எப்படியெனில் மேலே சொல்லப்பட்டவைகளுக் கேற்றவாறு, நாம் மேற்கோள் காட்டியபடி, அநேக குறிப்புகளை அதில் கொடுத்திருப்பார்கள்.

*(3)* இன்றைக்கு காணப்படுகின்ற ''தாய் மற்றும் எண்ணற்ற குமாரத்தி'' முறைகள் ஆண்டவரால், அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்பதற்கு அநேக அதிகாரப் பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகள் அவர்களுடைய எளிமையான போதனைகளின் தப்பறைகளினால் நிகழ்ந்தன. ஆகவே அவைகள் மனிதனால் ஏற்படுத்தப் பட்டவைகள்தான், திவ்விய வேலையைச் செய்வதில் தேவனைக் காட்டிலும் ஞானவான்களாக இருக்க முயற்சித்ததால் வந்தவைகளாகும். ஆகவே நாம் இந்த விஷயத்தைக் குறித்தும், மற்ற எல்லா விஷயங்களைக் குறித்தும் நமக்கு முன்பாக அது வைக்கின்ற மிகச் சிறிய குறிப்புகளுக்கும் கூட நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த காலம் வரையான கடந்த 6000 வருட உலக சரித்திரத்தின் போது, மனுக்குலமானது, பொதுவாக வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதில் தங்களால் முடிந்தவரை செய்து கொள்ளுமாறு

தேவன் அனுமதித்திருக்கிறார். இயற்கையாகவே மனிதன் தன்னுடைய சிருஷ்டிகரைக் கனப்படுத்தவும், ஆராதிக்கவும் மனதுடையவனாய் சிருஷ்டிக்கப்பட்டான். இப்படிப்பட்ட நிலைமை மனிதன் விழுந்து போனதினால் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. ''முற்றிலுமாக சீரழிதல்'' என்பது பொதுவாக மனுக்குலத்தைப் பொறுத்த அளவில் உண்மையல்ல. மனிதர்கள் தாங்கள் தெரிந்து கொள்ளுகிறபடி தங்களுடைய மற்ற குணாதிசயங்களை உபயோகப்படுத்தும்படி தேவன் அனுமதிக்கிற படியால், தங்கள் விருப்பப்படியே அவர்களுடைய ஒழுக்கமும், மதத்தைப்பற்றிய விசேஷ குணங்களை உபயோகப் படுத்தும்படி அனுமதித்திருக்கிறார். மாம்சீக இஸ்ராயேல், ஆவிக்குரிய இஸ்ராயேல் ஒரு பக்கமிருக்க, இவைகளிலிருந்து உலகத்திற்குச் சென்றிருக்கிற அவைகளுடைய ஈர்ப்புகளை நாம் பார்க்கும் போது, உலகமானது தனது சுய அபிவிருத்தி போன்றவற்றை தன்னால் முடிந்தவரை நலமானதைச் செய்யயட்டும் என்று தேவன் உலகத்தைத் தனியே விட்டுவிட்டார். மனிதன் அநேகமாக தன்னுடைய அறியாமையினாலும், குருட்டாட்டத்தினாலும், சாத்தான் மற்றும் விழுந்து போன தூதர்களின் தந்திரங்களுக்கு இரையாகி விட்டான். இவைகள் பல்வேறு விதமான மூடநம்பிக்கைகள், பொய்யான மதங்கள், மாயா ஜாலங்கள் போன்றவைகளின் மூலம் ஜனக்கூட்டத்தை சத்தியத்தைவிட்டு விலகும்படியாகச் செய்திருக்கிறான். அப்போஸ்தலர் இதைக் குறித்துச் சொல்லும்போது, இது இப்படியாயிருக்கிறது: ''ஏனெனில் மனிதர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரி யாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது,'' தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவர்களுக்கு இஷ்டமான வழியில் செல்லும்படியாக அனுமதித்தார், எதற்கெனில் அவர்களுடைய சொந்த சீரழிவைக்குறித்ததான பாடங்களைக் கற்றுக் கொள்ளவும், அதிகதிகமான பாவநிலையினால், அவர்கள் விழுகின்ற சீரழிவை வெளிப்படுத்தவும், அவர்களுடைய சிருஷ்டிகரின் ஆலோசனையைத் தவிர வேறு எந்த ஆலோசனைக்கும் செவிகொடுக்கிற ஞானமற்ற செயலை வெளிப்படுத்தவும் அப்படியாக அனுமதித்தார்.

நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி, ஆண்டவர் மனுக்குலத்தை இப்படியான பெலகீனமான, விழுந்துபோன நிலையில் விட்டுவிட நோக்கம் கொண்டவரல்ல. ஆனால் புது சிருஷ்டியின் மூலம், அவருடைய





குறித்த வேளையில், கர்த்தரை அறிகிற அறிவு, சத்தியத்தை அறியும்படியாக முழு தருணத்தோடும் மீட்பின் மூலமாக வந்த எல்லா ஆசீர்வாதங்களோடும் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சென்று அடையும். ஆனால் இங்கு நாங்கள் விசேஷமாகச் சொல்ல விரும்புகிற குறிப்பு என்னவெனில், தேவன் இப்படியாக புறஜாதி தேசங்களை அவர்களே பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிட்டது போன்று, ''கிறிஸ்தவ மண்டலம்'' என்று அழைக்கப்படுவதையும் அதற்கென விட்டு விட்டார். சில திவ்விய வெளிப்பாட்டின் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்ட மனிதர்களை அவர்கள் விருப்பப்படி உபயோகிக்கவும், மனித முறைமைகள் போன்றவைகளை ஒழுங்கு பண்ணவும், திவ்விய திட்டத்தில் அபிவிருத்தி பண்ணும்படி அவர்கள் முயற்சி பண்ணவும் அவர் மனிதர்களை அனுமதிக்கிறார். இவைகளிலெல்லாம், அவர் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லையென்றோ, கிறிஸ்துவை மையமாகக் கொண்டிராத சபை, மற்றும் மனுஷீக ஸ்தாபனங்கள் வைத்திருக்கும் பல்வேறுவிதமான முரண்பாடுள்ள, கிட்டத்தட்ட தீமை விளைவிக்கக் கூடிய முறைகளை ஆதரிக்கிறார் என்றோ பொருள்படாது. இந்த அனுபவங்கள் இன்னொரு பாடமாக அமையும். இது, அவர்கள் காலம் செல்லச் செல்ல, தேவன் மனிதனுடைய திட்டங்களையும், முறைகளையும் முற்றிலுமாகப் புறக்கணித்து விட்டு, அவருடைய காரியங்களை சில வேளைகளில், ஒரு சிலவற்றை மனிதர்கள் மூலமாகவும், சில வேளைகளில் முற்றிலும் மாறுபட்ட விதத்திலும் தேவன் தொடர்ந்து கிரியை நடப்பித்து திவ்விய திட்டதின் மூலம் வந்த உன்னதமான காரியங்களை அவர்கள் அறிந்து கொள்ளும்போது அனேகரை அது குற்றப்படுத்தும். யூத யுகம் முடியும் தருவாயில் அந்த ஜாதியினர் சிலரை ஆண்டவரையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் உபத்திரவப் படுத்தவும், சிலுவையில் அறையும்படியான அவருடைய திட்டத்தைச் செய்து முடிக்கவும் அனுமதித்தலைப் போன்று இருக்கும். அவர்களில் சிலர் ''உண்மையான இஸ்ரயேலராக'' இருந்தபடியால், படிப்படியாக அவருடைய மகிமையில் பங்குள்ளவர்களாகும்படி, உயர்த்தப்பட்டு, கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்குள்ளவர்களாக்கப் பட்டார்கள். ஆகவே இப்பொழுது, ஒருவேளை ஆவிக்குரிய ''உண்மையான இஸ்ரயேலர்கள்'' பவுலைப் போன்று சத்துருவின் கண்ணிகளிலிருந்து மீட்கப்படுவார்கள்.

இன்னொரு குறிப்பு கவனத்திற்குரியது: ஆண்டவர் அவருடைய இராஜ்யம் ஆரம்பிக்கப்படுவதற்கென ஒரு விசேஷ காலத்தை

வைத்திருக்கிறார். ஆகவே அந்த விசேஷ காலத்தில் அவரது தெரிந்து கொள்ளப்பட்ட புது சிருஷ்டி, அபிவிருத்தி செய்யப்பட்டு அவருடைய ஊழியத்திற்கென ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும். ஆகவேதான் விசேஷமான ஒளி இந்த காலத்தின் ஆரம்பத்திலும் இந்த காலம் முற்றுப்பெறும்போதும் பிரகாசிக்க வேண்டும் என்பது அவருடைய திட்டத்தின் ஒரு பகுதியாயிருந்தது தெரிகிறது. ‘‘உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு’’ என்று நம்மைப்பற்றிக் குறிப்பிடும்போது அப்போஸ்தலனாகிய பவுல் இதைக் தெரிவிக்கிறார். (1கொரி. 10:11) யூதயுகமும் சுவிசேஷ யுகமும் கலந்திருந்த காலத்தில் வழியும், சத்தியமும், ஜீவனும் முதலில் வெளிப்படுத்தப்பட்டன. ‘‘இருண்ட யுகங்கள்’’ இடையில் வந்தது. இப்போது சுவிசேஷ யுகமும் ஆயிரவருட யுகமும் கலந்திருக்கும்போது ‘‘புதியவைகள் மேலும் பழையவைகள் மேலும்’’ இதற்கு முன்பு என்றும் இருந்திராத அளவுக்கு வெளிச்சம் பிரகாசிக்கிறது. யுகத்தின் ஆரம்பத்தில் ஆண்டவரோடு ஒரு மனதாய் காணப் பட்டவர்களுக்கு விசேஷமான ஒளி வழங்கப்பட்டது என்றும் நாம் அறியும்போது, அப்படிப்பட்டவர்கள் இப்போது, யுகத்தின் முடிவில், அவர்கள் பரிசுத்தமாக்கப்படும் பொருட்டு தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெறுவார்கள். இடையில் வந்த நூற்றாண்டின்போது பரிசுத்தமாக்கப்படுதலுக்கு அதே அளவு வெளிச்சம் தேவைப்பட்டது என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. இடையில் வந்த காலங்களில் சில ‘‘இருண்ட யுகங்கள்’’ என்று அழைக்கப்படுகின்றன. இந்த காலத்தில் சரித்திரம் அவர்களைக் (விசுவாசிகளை) கண்டு கொள்ளவில்லை, ஆகையால் ஆண்டவருக்கென சாட்சிகள் இல்லாமல் எப்போதும் விட்டுவிட்டார் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்களில் சிலர் இந்த கிறிஸ்தவ முறைகளில் உள்ளவர்களாக இருந்த போதிலும், அவர்கள் கண்டு கொள்ளப்படாமல் போனதின் காரணம், அவர்கள் அதிகமாக பிரபல மாகாததும், கிறிஸ்தவ முறைகளுக்கு அனுதாபம் காட்டுகிறவர் களாக இல்லாமல் இருந்ததும், அந்த முறைகளோடு சம்பந்தம் இல்லாதவர்களாக இருந்ததுமே என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே ஆண்டவருடைய அழைப்பு இப்போது பொருத்தமாயிருக்கிறது. இது தெளிவாகக் காட்டுவது என்னவெனில் ஆண்டவரின் ஜனங்களில் அநேகர் பிரிவினைகளைக்குறித்து குழப்பமும், வனாந்திர நிலையில் உள்ளவர்களாக பாபிலோனில் இருக்க நாம் எதிர்பார்க்க வேண்டும்





என்பதே. ‘‘மகா பாபிலோன் விழுந்தது, என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்.’’ (வெளி. 18: 2,4)

சபையைக்குறித்தும், அதனுடைய ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கான சரித்திரத்தையும் இப்படியாக துரிதமாகக் கண்டு, மிகவும் குறிப்பாக நம்முடைய ஆண்டவரால் ஆதியில் ஏற்படுத்தப்பட்ட சபையைக் குறித்து ஓர் ஆய்வு செய்வோம். ஆண்டவருடைய ஒரே ஆவி உண்டு, அதை அவருடையவர்களாயிருக்கிறவர்கள் எல்லாரும் பெற்றுக்கொள்ள வேண்டும்; அப்படியே ஒரே தலையாகவும் சபையின் மையமாகவும் இருப்பவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. இருந்த போதிலும், நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், அவருடைய கிரியைகள் எல்லாவற்றிலும் பிதாவானவர் எல்லாவிதத்திலும் அங்கீகரிக்கப்பட்டார்; அவருடைய சொந்த வாக்கின்படி அவருடைய கிரியை பிதாவின் நாமத்தில் செய்யப்பட்டது, பிதாவின் அதிகாரத்தினால் செய்யப்பட்டது. ‘‘என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேறோடே பிடுங்கப்படும்.’’ (மத்.15:13) உண்மையான சபை, புது சிருஷ்டி பிதாவினால் நடப்பட்டதாகும். நம்முடைய ஆண்டவர் சொல்லுகிறார், நானே மெய்யான திராட்சை செடி, நீங்களெல்லாரும் கொடிகள், என்பிதா தோட்டக்காரர். அதன் பின்பு அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், ‘‘பூமியில் ஒரு திராட்சை செடியுண்டு,’’ அது பேர் சபை, பொய்யான சபை, அது பிதாவினால் நடப்படவில்லை, அவைகள் எல்லாம் பிடுங்கி எறியப்படும். உண்மையான திராட்சை செடியின் கனியானது அன்பாகும், அது பிதாவுக்கு அருமையானது. ஆனால் பூமியின் திராட்சை செடியின் கனியானது பல்வேறு கோணங்களில் காணப்படும் தன்னலமாகும். அவைகளெல்லாம் இறுதியில் தேவனுடைய கோபாக்கினை என்னும் பெரிய ஆலையில் போடப்படும், அத்துடன் இந்த யுகம் முடிவடையும். (யோவா. 15:1–6; வெளி.14:19)

நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலரும் சபையில் பிரிவினையை ஆதரிக்கவில்லை; மேலும் அபிப்பிராய பேதங்கள், கருத்திலும் பெயரிலும் காணப்பட்டவைகளை ஒதுக்கித் தள்ளினர் என்பதை ஒவ்வொரு வேத மாணவனுகு நிச்சயமாகவே கவனித் திருப்பார். ஒரே விசுவாசம், ஒரே கர்த்தர், ஒரே ஞானஸ்நானம் என்பது

போன்று அவர்களுக்கு சபையும் ஒன்றாகப் பிரிக்க முடியாததாக இருந்தது. இந்த நிலையிலிருந்து சபையானது, தேவசபை யென்றும், ஜீவனுள்ள தேவனுடைய சபைமுயன்றும், கிறிஸ்துவின் சபையென்றும், முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையென்றும் அழைக்கப் படுகிறது. அதிலுள்ள தனிப்பட்ட நபர்கள் ''சகோதரர்களென்றும்,'' ''சீஷர்களென்றும்,'' ''கிறிஸ்தவர்களென்றும்'' அழைக்கப்பட்டனர். இந்த பெயர்களெல்லாம் சபையைப் பொருத்த வரையில், சிறு கூட்டமாயிருந்தாலும், தனிப்பட்ட நபர்களாயிருந்தாலும், எருசலேமிலும் சரி, அந்தியோகியாவிலும் சரி, வேறு எங்கேயாகிலும் சரி சாதாரணமாக உபயோகிக்கப்படுகிறது. இப்படியாக பலவிதமான பெயர்களும், அவைகள் பொதுவாக உபயோகிக்கப்படுதலும், தெளிவாகக் காட்டுவதென்னவெனில், அவைகளில் ஒன்றுமே சரியான பெயர்கள் இல்லை என்பதாகும். சபை (எக்கிலீசியா, சரீரம், கூட்டம்), ஆண்டவரைப் பின்பற்றின சபையானது அவரால் ''தெரிந்தெடுக்கப்பட்டவர் களுடையது.'' அவர்கள் அவருடைய சிலுவையில் பங்கடையவும், இப்பொழுது தேவையான பாடங்களைக் கற்றுக்கொள்ளவும், படிப்படியாக அவருடைய மகிமையில் அவரோடு இணைந்திருக்கவும் வேண்டும் என்ற பெரிய உண்மையை விளக்குவதே நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் தொடர்ந்து முன்பாக வைத்துக்கொண்டிருந்த முக்கியமான காரியமாகும்.

இந்த பழக்கம் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆனால் இருண்ட யுகத்தின் போது மாற்றப்பட்டது. தப்பறைகள் அதிகரித்தபோது பிரிவினையின் ஆவி அதோடுகூட வந்தது. அதைத் தொடர்ந்து விசித்திரமான பெயர்களும் வந்தன – ரோம சபை, பேப்டிஸ்ட் சபை, லுத்தரன் சபை, இங்கிலாந்து சபை, பரிசுத்த கத்தோலிக்க சபை, வெஸ்லி சபை, கிறிஸ்தவ சபை, பிரஸ்பிட்டேரியன் சபை போன்றவைகளாகும். இவைகள் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறபடி (1 கொரி. 3 :3,4) மாம்சத்தின் அறிகுறிகளாகும். இவ்வளவு நாட்களாக உலகை மூடியிருந்த அந்தகார இருளிலிருந்து புது சிருஷ்டி வெளியே வரும்போது இந்த விஷயத்தைக் குறித்தும் அது தெளிவைப் பெற்றுக்கொள்கிறது; மேலும் தப்பறைகளையும், தப்பறைகள் போல காட்சியளிப்பவைகளையும் கவனித்து, சபைப் பிரிவுகளிலிருந்து வெளியே வருகிறது; அது மட்டுமல்ல, வேதத்திற்குப் புறம்பான பெயர்களால் அறியப்பட மறுப்பதுடன், வேதத்தின்படியான எந்த பெயரையும், அல்லது எல்லா பெயர்களையும், ஏற்றுக்கொள்ள வாஞ்சையாயிருக்கிறது.





இப்போது நம் ஆண்டவர் ஏற்படுத்திய ஒரே சபையின் அஸ்திபாரங்களைப் பார்ப்போம்:–

## ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்

போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த அஸ்திபாரத்தின் மேல், நம்முடைய ஆண்டவர் பிதாவின் பிரதிநிதியாக தன்னுடைய சபையை வளர்க்க ஆரம்பித்தார். அப்படிச் செய்யும் போது அவர் பன்னிரண்டு அப்போஸ் தலர்களை அழைத்தார், தற்செயலாக அல்ல; ஆனால் அவருடைய திட்டத்தின்படியாக அழைத்தார்; இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் (பன்னிரண்டு தற்செயலாக அல்ல) திவ்விய திட்டத்தின்படி அழைக்கப்பட்டதுபோல, அப்போஸ்தலர்களை அழைத்தார். அந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு மேலாக அந்த ஸ்தானத்திற்கு அவர் யாரையும் தெரிந்து கொள்ள வில்லை என்பது மாத்திரமல்ல, அதற்கு மேல் யாருக்கும் அதிகாரமும் அளிக்கவில்லை. பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து அந்த ஸ்தானத்திற்கு அருகதையற்றவன் என்று நிரூபித்து அவனுடைய ஸ்தானத்திலிருந்து விழுந்தான், அப்போது அப்போஸ்தலர் பவுல் அந்த ஸ்தானத்திற்கு வந்தார்.

ஆண்டவர் எவ்வளவு பரிவோடு அப்போஸ்தலர்களைக் கவனித்தார் என்பதைக் காண்கிறோம்– பேதுரு மேல் அவர் கொண்டிருந்த பரிவு, அவனுடைய சோதனையில் அவனுக்காக அவர் ஜெபித்தது, பின்னர் அவருடைய ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்கும்படியாக அவர் வேண்டுகோள் விடுத்தது, சந்தேகப்பட்ட தோமாவின் மேல் அவர் கொண்டிருந்த பரிவு, அவர் உயிர்த்தெழுந்த உண்மையை தோமாவுக்குப் பரிபூரணமாக விளக்கிக்காட்ட அவர் கொண்டிருந்த வாஞ்சை ஆகியவைகளைக் கவனிக்கிறோம். பன்னிருவரில் கேட்டின் மகனைத் தவிர யாரையும் அவர் இழக்கவில்லை. அவனுடைய விழுகை ஏற்கெனவே ஆண்டவருக்குத் தெரிந்திருந்தது; வேதத்தில் முன்கூட்டியே சொல்லப்பட்டிருந்தது. அப்போஸ்தலரின் நடபடிகளில் சொல்லப்பட்ட மத்தியாவின் தெரிந்தெடுக்கப்படுதலை வசனத்தின்படி ஆண்டவருடைய

தெரிவு என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. நிச்சயமாகவே அவன் நல்ல மனிதனாக இருந்தான், ஆனால் அதிகாரம் கொடுக்கப்படாமல் பதினொரு பேரால் தெரிந்துகொள்ளப்பட்டான். அவர்கள் எருசலேமில் காத்திரும்கும்படியாக, பெந்தகொஸ்தே நாளில் உன்னதத்திலிருந்து வரும் பெலனாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கட்டளைப் பெற்றிருந்தார்கள். இந்த வல்லமையினால் நிரப்பப்படுவதற்கு முன்னால், இந்த காத்திருப்பு நாட்களில் தானே அவர்கள் தவறுதலாக சீட்டுப்போட்டு யூதாஸின் இடத்தில் மத்தியாவைத் தெரிந்தெடுத்தார்கள். ஆண்டவர் அவரது ஒழுங்கு முறையில், இந்த திட்டமிடப்பட்டிராத தலையீட்டினிமித்தம் அவர்களைக் கடிந்து கொள்ளவில்லை. ஆனால் அப்படியே அவர்கள் தெரிந்து கொண்டதைப் புறக்கணித்தார். ஆனால் அவருடைய குறித்த காலத்தில் அப்போஸ்தலனாகிய பவுலைக் கொண்டு வந்து, ''நான் தெரிந்துகொண்ட பாத்திரம் என அறிவித்தார்;'' மேலும், அவன் விசேஷ ஊழியக்காரனாயிருக்கும்படி தன் தாயின் கர்ப்பத்தில் தெரிந்துகொள்ளப்பட்டான் என்ற அப்போஸ்தலரின் அறிவிப்பையும், மேற்கொண்டு மகா பிரதான அப்போஸ்தலரிலும் தான் ஒன்றிலும் குறைவுள்ளவன் அல்ல என்று அவர் கூறுவதையும் நாம் காண்கிறோம். (அப். 9:15; கலா. 1:15; 2கொரி. 11:5)

இதிலிருந்து நாம் காணக்கூடியது என்ன வெனில், போப்பு மார்க்கம், புராட்டஸ் டண்ட் எடிகோப்பல் சபை ( Protestant Episcopal Church), கத்தோலிக்க–அப்போஸ்தல சபை (Catholic- Apostolic chruch), மொர்மோன் சபை (Mormons) ஆகியவைகளில் அப்போஸ்தலரின் எண்ணிக்கை பன்னிரண்டோடே நின்று விடவில்லை, அவர்கள் நாட்களிலிருந்து அவர்களைத் தொடர்ந்து மேலும் அதிகமானோர் உண்டு என்றும், அவர்கள் ஆதி அப்போஸ்தலர்களைப் போன்றே சரிசமமான அதிகாரத்துடன் பேசினார்கள், எழுதினார்கள் என்றும் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே. நாங்கள் இதை மறுக்கிறோம். இப்படியாகத் தெரிந்துகொள்ளப்படுதலுக்கு, சம்பந்தமாக, பரிசுத்தமான விஷயங்களில் பன்னிரண்டு என்ற எண்ணிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டு, ஆண்டவர் எப்படி குறிப்பாக அந்த பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டார் என்பதைக் கவனியுங்கள் என்று ஆதாரமாக எடுத்துரைக்கிறோம்; இதற்கு மையக் கருத்தாக வெளிப்படுத்தின விசேஷம் 21ம் அதிகாரத்தில் மகிமையடைந்த சபை அடையாள வரைப்படமாக காட்டப்பட்டிருப்பதை சுட்டிக்



காட்டுகிறோம்; அங்கே சபையானது ஆயிரம் வருட ஆட்சியின் அடையாளமான புதிய எருசலேம் எனவும், ஆண்டவரோடு இணைக்கப்பட்ட அவருடைய மணவாட்டி எனவும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அந்த வரை படத்தில் நகரத்தின் மதிலுக்கு விலையேறப் பெற்ற பன்னிரண்டு அஸ்திபார கற்கள் இருந்தன என்றும், அவைகளின் மேல் ''ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலரின்'' பன்னிரண்டு நாமங்களும் (இதைக்காட்டிலும் கூடவோ, குறைவோ அல்ல) பதிந்திருந்தன என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் காட்டிலும் மேலும் அதிகமானோர் இருந்ததில்லை என்பதற்கு இதைக் காட்டிலும் மேலான எந்த ஆதாரம் நமக்கு வேண்டும். மேலும் இதற்கு மேலாக இருந்தவர்கள், அப்போஸ்தலர் பவுல் கூறுகிறபடி ''கள்ள அப்போஸ்தலர்களாயிருந்தார்கள்.'' (2கொரி. 11:13).

இதைக்காட்டிலும் அதிகமான அப்போஸ்தலர்களுக்கு எந்தத் தேவையும் இல்லை. ஏனெனில் அந்தப் பன்னிரண்டு பேரும் நம்மோடு இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுடைய ஊழியத்தின் நாட்களில் அவரோடு இருந்தவர்களுக்கு தெரிந்ததைக் காட்டிலும், அவர்களுடைய சாட்சியும், அவர்களுயை பிரயாசத்தின் பலன்களும் இன்றும் அதிகமான வசதியான முறையில் நமக்குத் தெரிகின்றது. அவர்கள் எழுதி வைத்த ஆண்டவரின் வார்த்தைகள், அற்புதங்கள், மற்றும் அவர்களது ஊழியங்களின் குறிப்புகளும் நம்மோடு இருக்கின்றன. கிறிஸ்தவ உபதேசங்களைக் குறித்து பல்வேறு தலைப்புகளில் சொல்லப்பட்ட அவர்களுடைய நிருபங்களில் உள்ள சொற்பொழிவுகள் இன்றைக்கும் திருப்திகரமான முறையில் நம்முடைய கரங்களில் உள்ளன. அப்போஸ்தலர் விளக்கமாகக் கூறுகிறபடி ''தேவனுடைய மனுஷன் தேறினவனாக இருக்க'' இவை ''போதுமானதாக'' இருக்கின்றன. இதைக்குறித்து மேலும் அப்போஸ்தலர் கூறும்போது, ''தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்கவில்லை'' என்கிறார். இதற்கு அதிகமாக என்ன வேண்டும்? (2 தீமோ. 3: 17; அப். 20:27)

நம்முடைய ஆண்டவர் நாற்பது நாட்கள் வனாந்திரத்தில் உபவாசம் இருந்த பின்னர் சத்துருவினால் சோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக சரியான வழியைத் தீர்மானித்து, வரவிருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவரைப் பின்பற்றும்படி அழைப்பு

விடுக்கவும் ஆரம்பித்தார். இப்படி அவரைப் பின்பற்றினவர்கள் தான் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்படிப் பின்பற்றினவர் களிலிருந்துதான் இறுதியில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்தார். (லூக். 6: 13–16) அவர்கள் அனைவரும் வாழ்க்கையில் மிகவும் எளிமையான நிலைமையில் உள்ளவர்கள் ஆவர். அவர்களில் அநேகர் மீன்பிடிக்கிறவர் களாக இருந்தார்கள். அவர்களைக் குறித்து மறுப்பு சொல்ல முடியாத அளவுக்கு ''அவர்கள் படிப்பறியாதவர்கள்'' என்று அதிகாரிகளால் கணிக்கப்பட்டவர்கள். (அப். 4:13) தங்கள் அன்றாட வேலையை விட்டுவிடாமல் ஆண்டவருடைய கருத்தை ஆதரித்த, பொதுவாகப் பின்பற்றினவர்களிலிருந்து அல்லது ''சீஷர்களிலிருந்து'' இந்த பன்னிருவர்கள் அழைக்கப்பட்டார்கள். பன்னிருவரும் சுவிசேஷ ஊழியத்தில் பங்கு பெறும்படியாக அழைக்கப்பட்டார்கள். மேலும் அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. (மத். 4:17–22; மாற். 1:16–20; 3:13–19; லூக். 5:9–11) பின்னர் அமர்த்தப்பட்ட ''எழுபது பேர்'' ஒருபோதும் அப்போஸ் தலர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. பன்னிருவரைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் நம்முடைய ஆண்டவர் ஜெபத்திற்காக, நிச்சயமாக பிதாவிற்கு அவரது வேலையைக் குறித்தும் அவருடைய உடன் வேலையாட்களைப் பற்றியும் ஆலோசனை பெறுவதற்காக மலையின் மேல் ஏறி தனித்திருந்தார் என்று லூக்கா ஒரு குறிப்பிட்ட காரியத்தை நமக்குத் தெரியப்படுத்துகிறார். அவர் முழு இரவும் ஜெபத்திலே தனித்திருந்தார். பொழுது விடிந்தபோது அவருடைய சீஷர்களை அவர்களண்டை அழைத்தார். (சீஷர்கள் என்ற பதத்திற்கு கிரேக்க மொழியில் '' mathetes "என்ற பதம் ஆகும்– இதன் பொருள் ''கற்பவர்கள்'' அல்லது ''மாணாக்கர்'' ஆகும்.) அவர்களில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பெயரிட்டார். (கிரேக்க மொழியில் ''apostolos'' என்ற இந்த பதத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் என்று பொருள்) இப்படியாக பன்னிருவரும் பிரித்தெடுக்கப்பட்டவர்கள், சீஷர்களிலிருந்து வித்தியாசமானவர்கள் என்று குறிக்கப்பட்டார்கள். (லூக். 6:12,13,17)

இப்படியாக அப்போஸ்தலராக தெரிந்து கொள்ளப்படாத மற்ற சீஷர்களும் ஆண்டவருக்குப் பிரியமானவர்களாய் இருந்தார்கள். அவர்கள் பொதுவாக வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தது நிமித்தமாக, சந்தேகமில்லாமல், அவர் பன்னிருவரைத் தெரிந்து கொண்டதை



ஆதரித்தார்கள். எந்த அடிப்படையில் ஆண்டவர் தன்னுடைய தெரிந்து கொள்ளுதலை மேற்கொண்டார் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அவருடைய சொந்த ஜெபம், ''அவர்கள் உம்முடையவர்களா யிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர்'' என்றும், மறுபடியும், ''நீர் எனக்கு தந்தவர்களில் கேட்டின் மகனைத் (யூதாஸ்) தவிர வேறு யாரையும் நான் இழந்து போகவில்லை'' என்பதாயிருந்தது. எந்த நோக்கத்தில் அல்லது எந்த கோணத்தில் பன்னிருவரைப் பிதா தெரிந்தெடுத்தார் என்பது நமக்குரியதல்ல. சந்தேகத்திற்கு இடமில்லாதவாறு, அவர்களிடத்தில் இருந்த ஒரு தகுதி தாழ்மையாகும். நிச்சயமாகவே அவர்களுடைய எளிமையான தொழில், அவர்கள் வாழ்க்கையில் கொண்டிருந்த முன் அனுபவங்கள், அவர்களைத் தாழ்மையான மனிதர்களாக மாற்ற முயற்சித்தது; அது மாத்திரமின்றி இன்னும் அதிகமான வலிமையுள்ள குணாதிசயம், உறுதி, விடாமுயற்சி போன்றவைகளுக்கும் வழி நடத்தியது. இந்த அளவிற்கு வேறு எந்த தொழிலும் வழி நடத்தியிருக்காது. பெந்தெகொஸ்தே நாள் (சபை உருவான நாள்) வரை காத்திராமல் பன்னிருவர் அதற்கு முன்னமே தெரிந்து கொள்ளப்பட்டதற்கு காரணம் என்னவெனில், அதிகதிகமாக இந்த பன்னிருவரும் விசேஷமாக ஆண்டவரோடு இருக்கவும், அவருடைய கிரியைகளைக் காணவும் அவருடைய உபதேசத்தை கேட்கவும், இப்படியாக அவர்கள் ஏற்ற காலத்தில் நமக்கும், ஆண்டவருடைய எல்லா ஜனங்களுக்கும் தேவனுடைய அற்புதங்களை நேரில் கண்டவர்களாக, சாட்சியாக அறிவிக்கும்படிக்கும், இயேசுவின் மூலம் வெளிப்பட்ட ஜீவனுள்ள வார்த்தைகளை அறிவிக்கும்படியாகவுமே. (லூக். 24:44–48; அப். 10:39–42)

## அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட நியமனம்

அப்போஸ்தலருக்கோ, அல்லது அவர்களைக் குறித்தோ, வேதத்தில் எந்த இடத்திலும் அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் மேல் அதிகாரம் செலுத்தவோ, தாங்கள் மற்ற விசுவாசிகளைக் காட்டிலும் வித்தியாசமானவர்கள் என்று கருதவோ, திவ்விய சட்டம் செயல் முறைகளிலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்றோ, அல்லது விசேஷமானவர்கள் என்றோ அல்லது அவர்களுடைய உரிமைகளைப் பொருத்த வரையில், அது நித்திய காலத்திற்கு பத்திரமாய் இருக்கும் என்றோ சிறிதளவு கூட சொல்லப்படவில்லை. ''நீங்கள் எல்லாரும்

சகோதரர்கள்,'' ''கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்'' என்பதை அவர்கள் தொடர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர்; அவர்களுடைய அழைப்பையும்,தெரிந்து கொள்ளுதலையும் அவர்கள் உறுதியாக்கிக் கொள்ளுவது அவசியம் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; மேலும் அவர்கள் அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாவிட்டால், சிறு குழந்தைகளைப் போன்று எளிமையானவர்களாகாவிட்டால், அவர்கள் ஒருபோதும் ''இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டார்கள்.'' அவர்களுக்கு அதிகாரப் பூர்வமான பட்டங்களோ, விசேஷமான ஆடைகளை அணிய வேண்டும் அல்லது விசித்திரமான முறையில் பழக வேண்டும் என்றோ போதிக்கப்படவில்லை; ஆனால் அவர்கள் இவைகள் எல்லாவற்றிலும் மந்தைக்கு உதாரணமாகக் காணப்பட வேண்டும் என்றுதான் போதிக்கப்பட்டார்கள். ஏனெனில் அவர்களுடைய நற்கிரியைகளைக் காண்பவர்கள் பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். மற்றவர்கள் இவர்களது அடிச்சுவட்டின்படி நடந்து, இப்படியாக ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். இறுதியில் திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக, அதே புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக அதே மகிமையை, கனத்தை, அழியாமையைப் பெற வேண்டும்.

அவர்கள் நியமிக்கப்பட்டது ஊழியம் செய்வதற்கென்றே; அவர்கள் ஒருவருக் கொருவர் ஊழியம் செய்யவும், ஆண்டவருக்கு ஊழியம் செய்யவும், சகோதரருக்கென தங்கள் ஜீவனைக் கொடுப்பதற்குமே அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த ஊழியம் விசேஷமாக சுவிசேஷத்தை பிரகடனப்படுத்துவது சம்பந்தமாகவே. அவர்களுடைய ஆண்டவர்மேல் ஏற்கெனவே வந்த முந்திய அபிஷேகத்தில், எல்லா புது சிருஷ்டிக்கும் உள்ளதான அதே அபிஷேகத்தில், எல்லா இராஜரீக ஆசாரியத்துவத்திற்கும் உள்ளதான அபிஷேகத்தில் அவர்கள் பங்குள்ளவர்களாக இருந்தார்கள். தீர்க்கதரிசி இதைப்பற்றி விபரமாகக் கூறுகையில், ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொருங்குண்டவர்களுக்குக் காயம் கட்டவும்...'' என்கிறார். (ஏசா. 61:1,2 ; லூக். 4:17–21; மத். 5–8; மாற்கு 3:14,15; லூக். 10:1–17)





பெந்தெகொஸ்தே வரை இந்த அபிஷேகம் அவர்கள்மேல் நேரடியாக வரா விட்டாலும், அவர் அவர்களை பிரசங்கிக்கும்படி அனுப்பிய போது, ஆண்டவர் ஓர் அளவிற்கு அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமை போன்றவைகளை அவர்கள் மேல் அனுப்பி யிருந்தபடியால், அதை ஏற்கெனவே அவர்கள் ருசிபார்த்திருந்தார்கள். ஆனால் இதிலும்கூட, பின்னதாக மற்ற எழுபது பேரை, அவருடைய நாமத்தில் அற்புதங்களைச் செய்யும்படியாக வல்லமைப்படுத்தி அனுப்பிய போது, பெருமைக்கான விசேஷ தருணம் நீக்கப்பட்டது. ஆகவே சொல்லப்போனால், அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளின்போது பரிசுத்த ஆவியைப் பெரும்வரை அவர்களுடைய உண்மையான வேலை தொடங்கவில்லை. அங்கே அவர்கள் மேல் திவ்விய வல்லமையின் வெளிப்பாடு அவர்கள் மேல் அமர்ந்தது. பரிசுத்த ஆவியும் அதன் வரங்களும் மாத்திரமல்ல, ஆனாலும் , விசேஷமாக இந்த வரங்களை மற்றவர்கள் மேல் பொழியப்பண்ணும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. அதிலிருந்து கடைசியில் குறிப்பிடப்பட்ட வல்லமையினால் சபையிலுள்ள மற்றவர்களிலிருந்து தனித்துக் காணப்பட்டார்கள். மற்ற விசுவாசிகள் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாக எண்ணப்பட்டு, அவருடைய ஆவியில் பங்குள்ளவர்களாக, அந்த ஆவியினால் புது ஜீவனுக்குள் பிறத்தல் என்பவைகளுக்குப் பங்குள்ளவர்களாக்கப் பட்டார்கள். ஆனால் இந்த அப்போஸ்தலர்கள் மூலமாக அளிக்கப் பட்டாலன்றி ஒருவரும் ஒரு வரத்தையோ அல்லது ஒரு விசேஷமான வெளிப்படையான அனுபவத்தையோ பெற்றுக்கொள்ளவில்லை. இந்த அற்புதங்களைச் செய்யும் வரங்களை, அந்நிய பாஷைகளைப் பேசுதல், அன்னிய பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் போன்றவைகள் ஒரு விதத்திலும் பரிசுத்த ஆவியின் கனிகளின் இடத்தை எடுத்துக் கொள்ளவோ, இடையூறு பண்ணவோ இல்லை என்பதை நாம் எப்படியாவது மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அவைகள் விசுவாசிகள் ஒவ்வொருவரும், கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்த போது திவ்விய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், வளர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அல்லது அபிவிருத்தி செய்யப்படவேண்டும். இந்த வரங்களை ஒரு மனிதன் பெற்றும்கூட அவன் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருக்கக்கூடுமென்று அப்போஸ்தலர் குறிப்பிட்டார்; இருந்தபோதிலும் சபை கட்டப்படுவதில் ஆண்டவருடைய விசேஷ

ஊழியக்காரர்களாக, அல்லது பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். (1கொரி. 12:7–10;13:1–3)

நம்முடைய ஆண்டவர் இந்த அப்போஸ்தலர்களை தேர்வு செய்யும் போதும், அவர்களுக்குப் போதித்தபோதும், யுகம் முடியும் வரைக்கும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு உள்ள ஆசீர்வாதத்தையும், போதனையையும் கருத்தில் வைத்திருந்தார். இது அவருடைய ஊழியம் முற்றுப்பெறும்போது அவர் ஏறெடுத்த ஜெபத்திலிருந்து விளங்குகிறது. அதில் அப்போஸ்தலர்களைக் குறித்து அவர் ''நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு (அப்போஸ்தலர்கள்) உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர் களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர். அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயின என்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை (உபதேசங்களை) அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு..... நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல் நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக் கிறார்களே.'' ''நான் இவர்களுக்காக (அப்போஸ்தலர்கள்) வேண்டிக் கொள்கிறது மல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் (முழு சுவிசேஷ சபை) வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், (நோக்கத்திலும் அன்பிலும்) பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன். (அதன் பின்பு, அப்போஸ்தலர்களும் புது சிருஷ்டி முழுவதும் தெரிந்து கொள்ளப்பட்டதின் நோக்கத்தை சுட்டிக்காட்டி, அவர் மேலும் கூறியதாவது) உலகம் (பாவிகளாயிருக்கையில் தேவனால் நேசிக்கப்பட்டு, விலையேறப்பட்ட இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள்) தான் மீட்கப்பட்டு இரட்சிக்கப்படத் தக்கதாக நீர் என்னை அனுப்பினதை அது விசுவாசிக்கட்டும்.'' (யோவா. 17:6–9,20,21)

அப்போஸ்தலர்கள், கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்த போதிலும் நல்ல குணாதிசயம் உள்ளவர்களாக இருந்தார்கள் என்று





தெரிகிறது. ஆண்டவரின் போதனையால் அவர்களிடத்தில் காணப்பட்ட உலக ஞானமும், கல்வியறிவும், ''தெளிந்த புத்தியுள்ள ஆவியினால்'' நிறைவு செய்யப்பட்டது. ஆகவே இந்த மனிதர்கள் எல்லாருமே ஆதி சபையினால் ஆண்டவருடைய வழிகளுக்கு வழிகாட்டிகள் என்றும், விசேஷமாக நியமிக்கப்பட்ட போதனையாளர்கள் என்றும், ''சபையின் தூண்கள்'' என்றும், ஆண்டவருக்கு அடுத்தபடியாக இவர்கள் தான் அதிகாரம் பெற்றவர்கள் என்றும் அறிந்துகொள்ளப் பட்டார்கள். இந்த நிலைக்கு ஆண்டவர் அவர்களைப் பல்வேறு வழிகளில் தயார் பண்ணினார்:

அவர்கள் அவரோடு தொடர்ந்து இருந்தபடியால், அவருடைய ஊழியங்களைக் குறித்ததான காரியங்கள், அவருடைய போதனைகள், அவருடைய அற்புதங்கள், அவருடைய ஜெபங்கள், அவருடைய இரக்கம், அவருடைய பரிசுத்தம், மரணபரியந்தம் தன்னையே தியாகம் செய்தது ஆகிய எல்லாவற்றிற்கும் சாட்சியாகவும், கடைசியாக அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாகவும் இருக்க முடிந்தது. இந்த சாட்சிகள் எல்லாம் ஆதி சபைக்கு மட்டுமல்ல, ஆண்டவரால் அப்பொழுது அழைக்கப்பட்டு புதுசிருஷ்டிக்கென்று அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் எல்லாருக்கும், அடைக்கலம் என்று ஓடினவர்களுக்கும், அவருடைய குணாதிசயத்தின் மையமாக அமைந்திருக்கும் மகிமையான நம்பிக்கைகளில் விசுவாசம் வைத்திருப்பவர்களுக்கும், அவருடைய தியாக மரணத்திலும், அவர் உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டதிலும், அவர் நிறைவேற்ற இருக்கிற தேவனுடைய திட்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கும், இப்படியாக அவர்கள் உறுதியான விசுவாசம் உடையவர்களாகவும் ஆறுதல் உள்ளவர்களாய் இருக்கும்படியாகவும் இந்தக் காரியங்கள் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் இப்படியான தனிப்பட்ட சொந்த சாட்சி தேவைப்பட்டது.

அவருடைய பிரசன்னத்தை எடுத்துரைக்கும்படியாகவும், யூத யுகத்தின் அறுவடைக்காகவும், ஆண்டவரால் பின்னர் மற்ற எழுபது சீஷர்கள் அனுப்பப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய வேலை அநேக விதங்களில் பன்னிருவருடைய வேலையைக் காட்டிலும் வித்தியாசமாக இருந்தது. சபையோடு கூட நாமும், அவர்களில் முழு நம்பிக்கை வைக்கும்படியாக, ஆண்டவர் ஒவ்வொரு வகையிலும்

அப்போஸ்தலர்களைத் தனியாகப் பிரிப்பது போன்று தோன்றியது. இவர்கள் மாத்திரமே அவருடைய இராப்போஜனத்திலும், அவருடைய மரணத்தை நினைவுகூறும்படி அவர் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையிலும் பங்குள்ளவர்களாயிருந்தார்கள். இவர்கள் மாத்திரமே அவருடனே கெத்சமனேயில் இருந்தார்கள். இவர்களுக்கு மாத்திரமே அவர் உயிர்த்தெழுந்த பிறகு விசேஷமாகக் காட்சியளித்தார். இவர்கள் மாத்திரமே பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் பேச்சாளர்களாக விசேஷமாக உபயோகப்படுத்தப்பட்டார்கள். பதினோரு பேருமே கலிலேயர்களாக இருந்தார்கள். அவர்கள் பேசுவதைக் கேட்டவர்கள் மூலம் ''இவர்கள் எல்லோரும் கலிலேயரல்லவா?'' என்று குறிப்பிடப்பட்டார்கள். *(அப். 2:7; லூக். 24;48–51; மத். 28:16–19)*

நம்முடைய ஆண்டவர் தன்னுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் ஏறத்தாழ ஐந்நூறு சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்தினாலும், அப்போஸ்தலர்களோடு விசேஷமாகத் தொடர்பு கொண்டதுடன் ''யூதருடைய தேசத்திலும், எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லா வற்றிற்கும் சாட்சிகளாக இருக்கும்படியாக அவர்களை ஏற்படுத்தினார். யூதர்கள் அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்........ ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்'' என்று குறிப்புகள் காட்டுகின்றன. *(அப். 10: 39–45; 13:31; 1கொரி. 15:3–8)*

அப்போஸ்தலனாகிய பவுல் பதினோரு பேரைப்போன்று ஒரு நேரடி சாட்சியாக இல்லாதிருந்த போதிலும், ஆண்டவரது மகிமையான நொடிப் பொழுது தரிசனம் கொடுக்கப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலுக்கு ஒரு சாட்சியாக ஏற்படுத்தப்பட்டார். இதைக்குறித்து பவுல் கூறுகிறதாவது: ''எல்லாருக்கும் பின்பு அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்.'' *(1 கொரி. 15:8,9)* ஆண்டவருடைய இரண்டாம் வருகையில் மீந்திருக்கிற அவருடைய விசுவாசிகள் அனைவரும் மறுரூபமடைந்து அவரைப் போன்று ஆவார்கள், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் காண்பார்கள். இவ்விதமாக சபை பார்ப்பதற்கு முன்னால் அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவரை மகிமையில் காண்பதற்கு உண்மையிலேயே தகுதி பெற்றிருக்கவில்லை. ஆனால் அப்போஸ்தலர் ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவருக்கு ஒரு





நொடிப்பொழுது தரிசனம் கிடைத்தது. மேலும் அவர்கள் எல்லாரைக் காட்டிலும் அதிகமான தரிசனங்களும் வெளிப்பாடுகளும் பவுலுக்குக் கொடுக்கப்பட்டன. அவர் இதற்கு முன்பாக ஆண்டவரோடு தனிப்பட்ட தொடர்பு இல்லாமல் இருந்ததற்குப் பரிகாரமாக ஒருவேளை இப்படிச் செய்யப் பட்டிருக்கலாம். அவருக்குக் கிடைத்த விசேஷ அனுபவங்கள் அவருடைய அனுகூலத்திற்கு என்று அல்ல, ஆனால் முக்கியமாக முழு சபையின் அனுகூலத்திற்காக என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். யூதாஸின் இடத்தை எடுத்துக்கொண்ட அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட வினோதமான அனுபவங்கள், தரிசனங்கள், வெளிப்பாடுகள் எல்லாம் நிச்சயமாகவே மற்ற அப்போஸ்தலருக்கு இருந்ததை விட அதிக உதவியாக இருந்தன.

அவருடைய அனுபவங்கள் ''தேவனுடைய ஆழமான காரியங்களை'' அறியவும், கிரகிக்கவும் அனுமதித்தது மாத்திரமல்ல, பேசப்படாததுமான *(2 கொரி. 12:4)* காரியங்களை அறியவும், கிரகிக்கவும் அனுமதித்தது. ஆனால் அப்போஸ்தலருடைய மனதிற்கு அவைகள் கொடுத்த பிரகாசம், அவருடைய எழுத்தின் மூலம் அவருடைய நாளிலிருந்து இன்றைய நாள் வரை சபைமேல் பிரதிபலித்துள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அந்த தரிசனங்களும் வெளிப்பாடுகளும் கொடுக்கப்பட்டபடியால் அவரால் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ளவும், புதிய யுகத்தை உணர்ந்துகொள்ளவும் முடிந்தது; மேலும் திவ்விய குணாதிசயத்தின் நீளம், அகலம், ஆழம், உயரத்தை அறியவும், தெளிவாகத் திட்டமிடவும் முடிந்தது. மேலும் அவராலேயே இவைகளைத் தெளிவாகக் கிரகிக்க முடிந்ததால், அவைகளை நிருபங்களில் போதனையாக யுகம் முழுவதும் விசுவாச வீட்டார் மேல் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்படியான விதத்தில் எடுத்துக்காட்ட முடிந்தது. உண்மையிலேயே இன்றும் கூட ஒன்று அல்லது மற்ற எல்லா அப்போஸ்தலருடைய சாட்சிகளையும் கூட இழந்து விட முடியும், ஆனால் அப். பவுலுடைய சாட்சியை இழக்க முடியாது. இருந்தபோதிலும், முழு சாட்சியம் இருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவைகளை முழுமையாக கிரகிக்க மகிழ்ச்சியாயிருக்கிறது; மாத்திரமல்ல பன்னிரண்டு அப்போஸ்தலரின் உயர்வான குணாதிசயங் களைக் கிரகிப்பதும் மகிழ்ச்சியைத் தருகிறது. அவருடைய அப்போஸ்தலத்துவத்தைக் குறிப்பிடுகிற சாட்சியைக் கவனியுங்கள். எல்லாவற்றிற்கும் முதன்மையாக ஆண்டவருடைய வார்த்தைகள்: ''அவன்

புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமா யிருக்கிறான்.'' (அப். 9:15) அப்போஸ்தலருடைய சொந்த வார்த்தை இப்படியாயிருக்கிறது: ''நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.'' (கலா. 1:11,12) மறுபடியும் அவர் கூறுகிறார்: ''விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனா யிருக்கும்படி பேதுருவை பலப்படுத்தினவர், புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனா யிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினார்.'' (கலா. 2:7) எந்த அப்போஸ்தலருக்கும் சமமான அந்தஸ்தில் இருப்பதற்கு அவருடைய தகுதிக்கு சாட்சியம் கூறுவது எவையென்றால், ஆண்டவர் மேலும் சகோதரர்கள்மேலும் அவர் கொண்டிருந்த வைராக்கியமும், சகோதரர்களுக்காகத் தன்னுடைய ஜீவனையே கொடுக்க ஆயத்தமான அவருடைய வாஞ்சையும், அவர்களுடைய ஆசீர்வாதத்திற்காக நேரத்தையும் சக்தியையும் செலவிடும் குணமுமேயாகும். ஆனால் சபையோடு உள்ள அவருடைய அப்போஸ்தல உறவுபற்றிச் சிலர் கேள்வி எழுப்பியபோது, இதை அவர் கபடமின்றி குறிப்பிட்டு, மேலும் அவருடைய வெளிப்பாடுகள், ஊழியங்கள் போன்றவைகளோடு சம்பந்தப்பட்ட ஆண்டவருடைய ஆசீர்வாதங்களையும் சுட்டிக்காட்டி, மற்றவர்களைக் காட்டிலும் அவர் ஒன்றிலும் குறைவுள்ளவன் அல்ல என்று நிரூபித்தார். (1கொரி. 9:1; 2கொரி. 11:5,23; 12:1–7,12; கலா. 2:8; 3:5)

யூதர்கள் மத்தியில் மாத்திரமே அப்போஸ்தலர்கள் ஒரு ஊழியம் செய்ய வேண்டும் என்பது ஆண்டவருடைய நோக்கமல்ல –குறிப்புகளில் காணப்படுவதற்கு எதிர்மாறாக உள்ளது. அவருடைய ஊழியமும் அவர்களுடைய தூதும் இறுதியில் எல்லா ஜனங்களுக்கும் உரியது என பதினோரு பேருக்கும் அவர் கட்டளையிட்டார். அவர்கள் வல்லமையினால் நிரப்பப்படும் வரை எருசலேமில் காத்திருக்க வேண்டியிருந்தாலும், அங்கே அவர்கள் சாட்சியைத் துவக்கும்படி அந்த இடத்தில் இருந்தார்கள். நம்முடைய ஆண்டவருடைய வார்த்தை, ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்பதாகும். (அப்.1:8) இந்த சாட்சியம் அப்போஸ்தலருடைய வாழ்நாளில் மாத்திரமல்ல, இன்றும் தொடர்கிறது. இன்றைக்கும் அவர்கள் நமக்குப் பிரசங்கித்துக்





கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் விசுவாசிகளுக்கு போதித்துக் கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் எச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் கடிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மரணம் அவர்களுடைய ஊழியத்தை நிறுத்தவில்லை. இன்னும் அவர்கள் பேசுகிறார்கள், சாட்சிகளாயிருக்கிறார்கள், ஆண்டவருடைய விசுவாசிகளுக்கு அவருடைய வாயாக இருக்கிறார்கள்.

## அப்போஸ்தலர்களுடைய ஊக்கம்

உண்மையான சாட்சிகளாகவும், சரித்திர ஆசிரியர்களாகவும் நாம் அப்போஸ் தலர்களில் நம்பிக்கை வைத்திருப்பது நல்லது. அவருடைய சாட்சிகளில் நேர்மை என்ற முத்திரை பதிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதில் அவர்கள் செல்வத்தையோ, மனிதர்களின் புகழ்ச்சியையோ நாடாமல் உயிர்த்தெழுந்து, மகிமையடைந்த ஆண்டவருக்காக, அவர்கள் தங்கள் உலகப்பிரகாரமான நலன்களைத் தியாகம் பண்ணும் படியான அவர்களுடைய வைராக்கியத்தைக் காண்கிறோம். இதைக்காட்டிலும் மேலான காரியங்கள் சொல்லப் படாவிட்டால் அவர்களுடைய சாட்சி பிரயோஜனமற்றதாகிவிடும். ஆனால் அவர்கள் ஆண்டவரால் ஏவப்பட்ட பிரதிநிதிகளாக உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று வேதம் போதிப்பதை நாம் காண்கிறோம். மேலும் அவர்கள் சபையில் உண்டான பழக்கங்கள், உபதேசங்கள், சாட்சியைக் குறித்ததான காரியங்கள் போன்றவைகளுக்கு ஆண்டவரால் வழி நடத்தப்பட்டார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் கேள்விப்பட்ட, கண்ட காரியங்களுக்காக மாத்திரம் சாட்சிகளாக இருக்கவில்லை, அதற்கு மேலாகப் பரிசுத்த ஆவியின் மூலம் அவர்கள் பெற்ற போதனைகளுக்கும் சாட்சிகளாயிருந்தார்கள். அதனிமித்தம் அவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள். '' எந்த மனுஷனும் எங்களை...... தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன் என்று எண்ணிக் கொள்ளக்கடவன்'' என்று பவுல் சொன்னார். (1கொரி. 4:1) ஆண்டவரும், பன்னிருவரைக் குறித்து ''நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்,'' என்றும் ''என் ஆடுகளை மேய்ப்பாயாக,'' ''என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக'' என்றும் சொல்லும்போது இதே சிந்தையை வெளிப்படுத்தினார். அப்போஸ்தலரும் முற்காலங்களில் மறைக்கப்பட்டிருந்த இரகசியம்

(கிறிஸ்துவைக் குறித்து புது சிருஷ்டிகளின் உன்னத அழைப்பிற்கான சுவிசேஷத்தின் ஆழமான சத்தியங்கள்) இப்போது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியினால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாட்டின் நோக்கம் இப்படியாகக் கூறப்பட்டுள்ளது: ''தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைக்கப்பட்டிருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் (புது சிருஷ்டியில் பங்கு பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்) இன்னதென்று எல்லாருக்கும் வெளிப் படையாகக் காண்பிக்கிறதற்கு.'' (எபே. 3:3–11) இயேசு கிறிஸ்துவை மூலைக் கல்லாகவும், அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் அஸ்திபாரமாகவும் கொண்டு சபை எப்படிக் கட்டப்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறும்போது அப்போஸ்தலர் சொல்கிறார்: ''இதனிமித்தம், (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டுவதற்கு) பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்ட வனாயிருக்கிறேன்.'' (எபே. 2:20,22; 3:1)

''எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவற்காக'' தேற்றரவாளன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டார். ''அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' (யோவா. 14:26; 16:13) சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இது முழு சபைக்கும் உரியதாகும்; ஆனால் விசேஷமாக அது அப்போஸ்தலருக்கு உரியதாக இருந்தது. உண்மையிலேயே, மிஞ்சியிருக்கிற சபைக்கு இப்பொழுதும் கூட அது அப்போஸ்தலர் மூலம் கிரியை செய்கிறது. இன்றைக்கும் அவர்களுடைய வார்த்தை நமக்குப் புதியதும், பழையதுமான காரியங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு வழிகளாக உள்ளன. இந்த வாக்குத்தத்தத்திற்கு இசைவாக அப்போஸ்தலருக்கான ஏவுதல் மூன்று விதமான குணாதிசயங்களைக் கொண்டது என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

1. ஞாபகத்திலுள்ளவைகள் புத்துணர்வு பெற்றபடியால் ஆண்டவருடைய தனிப்பட்ட போதனைகளை மறுபடியும் நினைப்பூட்டி மறுபடியும் சொல்ல வைத்தது.
2. யுகங்களின் தெய்வீகத் திட்டத்தைக்குறித்து சத்தியங்களை கிரகித்துக் கொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல்.
3. வரவிருக்கிற காரியங்களைக் குறித்து விசேஷ வெளிப்பாடு. ஆண்டவர் இதைக்குறித்து ''இன்றும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்போது தாங்கமாட்டீர்கள்'' என்று கூறினார். (யோவா.16:12)





அப்போஸ்தலர்களுடைய ஞாபகத்தில் உள்ளவைகள் புத்துணர்வு பெற்றன என்பது நம்முடைய ஆண்டவர் சொன்ன அதே சொற்றொடர், அல்லது ஆண்டவருடைய வார்த்தைகள் அவைகள் சொல்லப்பட்ட வரிசையின்பிரகாரம் மறுபடியும் வந்தது என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்போஸ்தல எழுத்துக்களும் இப்படி மறுபடியும் சொல்லப்பட்டதற்கான ஆதாரத்தைக் கொடுக்கவில்லை. ஆண்டவருடைய வாக்குத்தத்தமே எப்படியாயினும், அவர்களுடைய அறிக்கைகளின் உண்மைக்கு உத்திரவாதம் அளிக்கிறது. நான்கு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டவருடைய ஆரம்ப கால ஜீவியத்தைக் குறித்தும், ஊழியத்தைக் குறித்தும் உள்ள சரித்திரம் நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் ஒவ்வொன்றிலும் எழுதியவரின் தனித்தன்மை வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் அவர்களுக்கே உரித்தான நடையில் அவர்களுக்கு மிக முக்கியமாகத் தோன்றுகிறவைகளைக் குறிப்பிடுகிறார்கள். மேலும் ஆண்டவருடைய மேற்பார்வையின் கீழ் இந்த பலவித குறிப்புகள் மொத்தமாக சபையின் விசுவாசத்தை உறுதிப்படுத்தத் தேவையான ஒரு முழுச் சரித்திரத்தையும், தீர்க்கதரிசிகளின் மேசியாவாக இயேசுவை அடையாளம் காட்டவும், அவரைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதலைக் காட்டும்படியான, அவரது வாழ்க்கை சரித்திரத்தையும் அவருடைய போதனைகளையும் அளிக்கின்றன. ஏவப்பட்டது வாய் மூலம் வந்திருந்தால் (ஒவ்வொரு வார்த்தை வார்த்தையாக சொல்லுதல்) சொல்லப் பட்டவைகளை மறுபடியும் சொற்றொடரில் பல மனிதர்கள் கூற வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஒவ்வொரு தனி எழுத்தாளரும் அவர் தன்னுடைய தனிப்பட்ட தெரிவிக்கும் முறையில் உள்ள சுதந்திரத்தை உடையவராயிருந்து, குறிப்பிடும்படியான தகுதியும் மிக முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகளைத் தெரிந்து கொண்டவிதம் பாராட்டுக்குரியது. ஆண்டவர் தனது பரிசுத்த ஆவியின் மூலமாக அவ்வளவு மேற்பார்வையிட்டதால் முக்கியமானதொன்றும் விடப்படவில்லை, தேவையானவைகள் எல்லாம் தவறாமல் குறிக்கப்பட்டுள்ளன. ''தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக'' அவைகள் அருளப் பட்டுள்ளன. அப்போஸ்தலர் யோவானுடைய குறிப்புகள் மற்ற மூன்று

சுவிசேஷகர் களான மத்தேயு, மாற்கு, லூக்காவுக்கு அனுபந்தங்கள் போன்று இருப்பதைப் பார்ப்பது சுவாரசியமாக இருக்கிறது. அவர் முக்கியமாக மற்றவர்களால் விடப்பட்ட சூழ்நிலைகளையும் முக்கியம் பெற்ற சம்பவங்களையும் எடுத்துரைக்கிறார்.

ஆண்டவருடைய கூற்றுப்படி, அவர் பரிசுத்த ஆவியின் மூலம் அப்போஸ்தலர்களை வழி நடத்துவார் என்றும், அவர்கள் மூலமாக புதுச் சிருஷ்டியை ''எல்லா சத்தியத்திற் குள்ளும்'' வழி நடத்துவார் என்றும், வழிநடத்துதல் என்பது பொதுவானதென்றும், தனிப்பட்டவிதத்தில் எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவது என்றும் அர்த்தப்படும். இப்படியாக நடைபெறுவதை குறிப்புகளில் சொல்லப்பட்டதிலிருந்து காணலாம். பவுலைத்தவிர மற்ற அப்போஸ்தலர்கள் சதாரண கல்வியறிவில்லாத மனிதர்களாக இருந்தபோதிலும் அவர்கள் வேதத்தைப்பற்றிச் சொன்ன காரியங்கள் மிகவும் குறிப்பிடத் தக்கதாய் இருந்தது. அவர்களால் ''ஞானிகளை வெட்கப்படுத்த முடிந்தது.'' வேத வல்லுனர்களை அன்றும் இன்றும் வெட்கப்படுத்த முடிந்தது. தவறு எவ்வளவு திறமை யுள்ளதாயிருந்தாலும், அதனால் அவர்கள் பிரமாணத்திலிருந்து, தீர்க்கதரிசிகளிலிருந்து, ஆண்டவருடைய போதனைகளிலிருந்து எடுத்துச் சொல்லும்போது முன்னால் நிற்கமுடிய வில்லை. பிரமாணத்தில் வல்லுனர்களாயிருந்த யூதர்கள் இதைப்பற்றி குறிப்பிட் டுள்ளார்கள். நாம் வாசிக்கிறோம், ''அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள்.'' அதாவது அவர்கள் அவருடைய உபதேசத்தைக் கற்று அவருடைய ஆவியை பிரதிபலித்தார்கள். *(அப். 4:5,6,13)*

ஆண்டவருடைய வார்த்தைகளையும், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டவைகளையும் ஆதாரமாகக் கொண்டுள்ள அப்போஸ்தல நிருபங்கள், இப்படியான நியாயமான வாக்குவாதங்களை உடையனவாக இருக்கின்றன. இந்த சுவிசேஷ யுகத்தில் ஆண்டவர் தன்னுடைய ஜனங்கள் மூலமாக நமக்கு முன்பாக வைத்திருக்கிற வாக்கைப் பின்பற்றுவதன் மூலம் அதே ஆவியில் பங்கு பெற்றவர்கள் எல்லாரும் உண்மையான தீர்மானங்களுக்குள் வழி நடத்தப்படுகிறார்கள். ஆகவே நம்முடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் இருக்கிறது. *(1கொரி. 2:4,5)* இருந்தபோதிலும், இந்த போதனைகளிலும் அவர்கள் சரித்திரபிரகாரமாக





கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்தும் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லப்பட்டதற்கு நமக்கு ஆதாரம் கிடையாது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் செய்ததுபோல, இயந்திரம் செயல்படுவது போன்று பேசி, எழுதும்படி ஆண்டவரால் சொல்லப்பட்டவைகள் என்பதற்கும் நமக்கு ஆதாரம் கிடையாது. *(2பேது. 1:21)* இதைக்காட்டிலும் அப்போஸ்தலருடைய மனது பிரகாசிக்கப்பட்டதினால், அவர்களுக்குத் தெளிவான நோக்கம் கிடைத்ததினால் அவர்களால் திவ்விய நோக்கங்களைத் தெளிவாகக் காணவும் அவைகளை அறிந்து கொள்ளவும் உதவியாக இருந்தது. அதனால் அவைகளை தெளிவாக எடுத்துரைக்க முடிந்தது. இதன்படி, இக்காலத்திலிருந்து ஆண்டவருடைய ஜனங்கள் எல்லாரும், அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு கிருபையிலும், அறிவிலும், அன்பிலும், வளரும்படியாக உதவி செய்தது. அது மாத்திரமல்ல, ''சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறியவும்'' உதவிற்று. *(எபே. 3:18,19)*

இருந்தபோதிலும், அவர்களுடைய மற்ற போதனைகளும், அவர்களுடைய சரித்திரபிரகாரமான கூற்றுகளும், ஆண்டவரால் அவ்வளவாய் மேற்பார்வையிடப் பட்டதினால் தகுதியற்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட்டன, மேலும் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை விசுவாச வீட்டாருக்கு ''ஏற்ற காலத்தில் ஆகாரமாயிருக்கும்படியாக'' அமையக்கூடிய விதத்தில் சத்தியம் முன்பாக வைக்கப்பட்டது என்ற நம்பிக்கை வைப்பதில் நாங்கள் முழுமையாக நியாயப்படுத்தப் பட்டுள்ளோம். அப்போஸ்தலர்கள் திவ்விய மேற்பார்வைக் குட்டிருப்பார்கள் என்பதை ஆண்டவருடைய வார்த்தை முன்கூட்டியே பின் வருமாறு சுட்டிக்காட்டுகிறது: ''பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.'' *(மத்.18:18)* இது ஆண்டவர் தன்னுடைய உரிமையை விட்டுவிடுவார் என்பதையோ, அப்போஸ்தலர்கள் சொல்லுவதற்கெல்லாம் கீழ்ப்படிவார் என்பதையோ குறிக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்வோம். ஆனால், பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, சபையில் அவர்கள் எடுக்கும் தீர்மானங்களில் எந்த காரியங்கள் கட்டாயமாக செய்யப்படவேண்டும், எந்த காரியங்கள் விருப்பத்தின்படி செய்யப்படலாம் என்பதைக்

*குறித்ததான தீர்மானங்கள் சரியானவைகளாக இருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே மொத்தத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முடிவு எல்லாம் இறுதியாக ஆண்டவருடையதும் அப்போஸ்தலருடையதும் ஆகும் என்று சபையானது அறிந்துகொள்ளும்.*

## இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்

*இதற்கு ஒத்துப்போகும் வகையில், நம்முடைய ஆண்டவர்தான் மேசியா என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சாட்சி அளித்த பிறகு, ''இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்த வில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப் படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், (*petros- a stone, a rock*) இந்த கல்லின்மேல் (*petra- a mass of rock *– நீ இப்போது வெளிப்படுத்தின மாபெரும் அடிப்படைச் சத்தியம் எனும் கல்) என் சபையைக் கட்டுவேன்.'' ஆண்டவர் தாமே கட்டுகிறவர், அவரே அஸ்திபாரம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ''போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.'' (1கொரி. 3:11) அவரே பெரிய கல்லாயிருக்கிறார், ஆகவே அவரைப்பற்றிய பேதுருவின் அறிக்கையே ஒரு கல் போன்ற திடமான அறிக்கையாக இருக்கிறது, திவ்விய திட்டத்தை முக்கியப்படுத்துகின்ற அஸ்திபாரக் கொள்கையை அறிவிப்பதாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த விஷயத்தை அவ்வளவாய் புரிந்து கொண்டபடியால், தான் புரிந்து கொண்டதை வெளிப்படுத்தினார். (1பேது. 2:5,6) பிரதிஷ்டை செய்து கொண்ட விசுவாசிகள் எல்லாரும் ''ஜீவனுள்ள கற்கள்'' என்றும், கிறிஸ்து இயேசுவுடன் ஐக்கியம் கொள்வதினால், அஸ்திபாரமாயிருக்கிற அவர் மேல் பரிசுத்த ஆலயமாகக் கட்டப்படும்படியாகத் திவ்வியத் திட்டத்தின்படி பெரிய கல்லான கிறிஸ்து இயேசுவண்டை வருகிறவர்களாயிருக்கிறார்கள் என்றும் பேதுரு அறிவித்தார். ஆகவே பேதுரு, தானே அஸ்திபாரக்கல் என்று பாவனை செய்யாமல், பெட்ராஸ் (*petros*) கல்லானது லித்தோஸ் (* lithos*) என்பதைக் காட்டிலும் பெரிய கல் என்பதைக் குறிப்பிட்டாலும் சபையிலுள்ள மற்ற எல்லா ''ஜீவ கற்களோடும்'' சரியான முறையில் தன்னைக் கணித்தார். மேலும் திவ்விய திட்டத்தின்படி எல்லா*





*அப்போஸ்தலர்களும் ''அஸ்திபாரக் கற்களாய்'' இருப்பதோடு, வரிசையில் அவர்களுடைய சகோதரர்களைக் காட்டிலும் முக்கியத்துவம் உள்ளவர்களாக இருப்பார்கள். (வெளி. 21:14)*

## அதிகாரத்தின் திறவுகோல்

*இது சம்பந்தமாக ஆண்டவர் பேதுருவிடம் ''பரலோகத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்'' என்றார். அப்போஸ்தலருக்கு பொதுவாகக் கொடுக்கப்பட்ட அதே அதிகாரம் பேதுருவுக்கும் விசேஷமாகச் சொல்லப்பட்டது, அதோடுகூட திறவுகோல்கள் என்கிற உரிமை அல்லது சிலாக்கியம்– திறக்கும் வல்லமை அல்லது அதிகாரம் கொடுக்கப்பட்டது. எப்படி அப்போஸ்தலனாகிய பேதுரு, இராஜ்யத்தின் திறவுகோல்களை உபயோகித்தார் என்பதையும், அதன் மூலம் தேவனுடைய வேலையை, பெந்தெகொஸ்தே நாளில் முதலாவது யூதர்களுக்கும், பின்னர் கொர்நெலியு வீட்டில் புறஜாதியினருக்கும் ஆரம்பித்து வைத்தார் என்பதையும் நாம் நினைவில் வைத்திருக்கிறோம். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட போது, ''பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று'' முதலாவதாக ஆரம்பித்தார் என்று நாம் வாசிக்கிறோம். அவர் திறந்தார், மற்றவர்கள் பின்பற்றினார்கள். இவ்விதமாக யூதர்களுக்கு அழைப்பு திறந்துவிடப்பட்டது. கொர்நெலியுவின் விஷயத்தில், ஆண்டவர் பேதுருவினிடத்தில் தூதர்களை அனுப்பினார், மேலும் விசேஷமான விதத்தில் ஒரு தரிசனத்தின் மூலம் அவர்களுடைய அழைப்பை ஏற்குமாறு வழி நடத்தினார். இவ்விதமாக புறஜாதியினரும் கூட புது சிருஷ்டியின் உன்னத அழைப்புக்குள் வந்து அதன் சிலாக்கியத்தில் பங்கு பெறும்படியாக, விசேஷமாக புறஜாதியினருக்கு கிருபையின், விடுதலையின், சிலாக்கியத்தின் கதவைத் திறக்கும்படியாக பேதுருவைப் பயன்படுத்தினார். இந்த விஷயங்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொள்வதில் ஆண்டவரின் நோக்கங்களோடு முற்றுமாக ஒத்து இருப்பதை நாம் காண்கிறோம். புதிய வேலைக்கான விசேஷமான பிரதிநிதிகளாக இந்த பன்னிரண்டு பேரும் நியமிக்கப்பட்டார்கள் என்பதை மேலும் தெளிவாக ஆண்டவருடைய ஜனங்கள் புரிந்துகொள்கிறார்கள்; மேலும் அவர்களுடைய வார்த்தைகள்*

புது சிருஷ்டியைப் பற்றிய சத்தியத்துக்கு விசேஷமான வழிகளாக இருப்பதையும், அவர்களுடைய வார்த்தைகளை இன்னும் அதிகமாக ஏற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தப்படுத்தப்படுவார்கள் என்பதையும், மேலும் அவர்களுடைய போதனைகளுக்கு எதிரிடையாக வரும் மற்றவர்களுடைய போதனைகளை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர் களாய் இருப்பார்கள் என்பதையும் புரிந்து கொள்ளுகிறார்கள். ''இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.'' (ஏசா. 8:20)

நம்முடைய ஆண்டவரின் வாக்குத்தத்தத்தின் கடைசி நோக்கம் இப்படியாகக் காணப்படுகிறது. ''அவர் (பிதாவின் பரிசுத்த ஆவி) வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' இது அப்போஸ்தலரின் ஒரு விசேஷமான ஊக்கத்தைக் காட்டுகிறது, மேலும் அவர்களுடைய போதனைகளின் வாயிலாக ஆண்டவருடைய ஜனங்களுக்கு, இந்த யுகத்தின் இறுதிவரை உள்ள ஆசீர்வாதத்தையும், அறிவுப் பிரகாசத்தையும் குறிப்பிடுகிறது. இவ்விதமாக அவர்கள் பரிசுத்த அப்போஸ்தலர்களாக மட்டுமின்றி, தீர்க்கதரிசிகளாகவும், சபைக்கு, வரவிருக்கிற காலத்தின் காரியங்களை முன் கூட்டியே அறிவிக்கிறவர் களாகவும் இருந்தார்கள். இந்த விதமாக எல்லா ஊழியங்களிலுமோ, அல்லது ஏதாவது ஒன்றிலோ அப்போஸ்தலர்கள் அனைவருமே இந்த அளவுக்கு உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. உண்மை என்னவெனில், சிலர் அப்போஸ்தலர்களாக ஊழிய சிலாக்கியங்களில் அதிகமாகக் கனப்படுத்தப்பட்டார்கள் என்பதோடு கூட இன்னும் அதிகமாக வரவிருக்கிற காரியங்களை காட்டுகிறவர்களாக கனப்படுத்தப் பட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் வரவிருக்கிற பல்வேறு விஷயங்களைக் காட்டுகிறதாவது : சபையில் ஏற்படக்கூடிய பெரிய விசுவாச துரோகம், ''பாவ மனுஷன்'' வெளிப்படுதல், ஆண்டவருடைய இரண்டாம் வருகையைக் குறித்ததான இரகசியம், நாம் எல்லோரும் நித்திரை அடையாமல் ஆனாலும் எல்லோரும் மறுருபமாக்கப்படுதல், ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறை களுக்கும் மறைவாயிருந்த இரகசியமாகிய, புறஜாதிகளை உள்ளடக்கிய சபையானது, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கு உடன் சுதந்திரவாளிகளாக இருக்கப்போவது, ஆபிரகாமின் வித்து பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதித்தல் போன்றவைகளாகும். மேலும் அவர், கடைசி நாட்களில் சபையில் கொடிய காலங்கள்





வருமென்றும், மனுஷர்கள் தேவப்பிரியராயிராமல் சுகபோக பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர் களாயும், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களாயும் இருப்பார்கள் என்றும், ''கொடிய ஓநாய்கள்'' (அழிக்கும் தன்மையுள்ள வார்த்தைகளைப் பேசுவார்கள்) ஆண்டவருடைய மந்தையைத் தப்பவிட மாட்டார்கள் என்றும் கூறுகிறார். உண்மையிலேயே அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியவைகளெல்லாம், அவருடைய நாளில் வரவிருக்கின்ற காரியங்களை முன் கூட்டியே அறிவிக்கும் சிலாக்கியத்தை பெற்றவராக, அவருக்குக் கொடுக்கப்பட்ட தரிசனங்களாலும், வெளிப்பாடுகளினாலும் நிறைந்து புத்திக் கூர்மையுள்ளவைகளாக காணப்படுகின்றன. அவருடைய நாளில் அது எதிர்காலத்தைக் குறித்ததாக, முற்றுமாக விளக்கமாக சொல்லக்கூடாததாக இருந்தது. ஆனால் இப்போழுதோ பழைய ஏற்பாட்டின் மாதிரிகள், தீர்க்கதரிசனங்கள் மூலமாக பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இவைகள் இப்பொழுது புரிந்து கொள்ளக் கூடியவைகளாக உள்ளன. ஏனெனில் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளின்படி, அவைகள் புரிந்து கொள்ளும்படியாக ''ஏற்ற காலம்'' இப்போது வந்துள்ளது.

அப்போஸ்தலர் பேதுருவும் கூட வருங்காரியங்களை முன் கூட்டியே அறிவிப்பவராக, சபையில் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள், அவர்கள் கேட்டுக்கேதுவான வேதபுரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிப்பார்கள் என்று சுட்டிக் காட்டுகிறார். நம்முடைய நாளை அவர் கண்டு தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். ''கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து........அவர் (கிறிஸ்து) வருவார் என்று சொல்லுகின்ற வாக்குத்தத்தம் எங்கே?'' என்பது போன்றவைகளைக் கூறுவார்கள் என்கிறார். ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்'' என்பது போன்றவைகளை தீர்க்கதரிசனமாக உரைத்தார்.

அப்போஸ்தலனாகிய யாக்கோபும் இதே போன்று தீர்க்கதரிசனமாக உரைக்கிறார். ''ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்........ கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்'' என்பது போன்ற காரியங்களைக் கூறுகிறார்.

இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய யோவான் தான் எல்லா அப்போஸ்தலரைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கவராக வருங்காரியங்களை

முன்கூட்டியே அறிவிப்பவராக அல்லது தீர்க்கதரிசியாக இருந்தார். வெளிப்படுத்தின விசேஷத்தில் அவருடைய தரிசனங்கள் வரப்போகிற காரியங்களை மிகச் சிறப்பாக அறிவிக்கிறவைகளாக உள்ளன.

## அப்போஸ்தலரின் உறுதி

மேற்கூறியவைகளிலிருந்து அப்போஸ்தலர்கள் எவ்வளவாக பரிசுத்தாவியின் மூலமாக ஆண்டவரால் வழிநடத்தப்பட்டார்கள் என்றும், அவர்கள் வெளியரங்கமாய் பேசினவைகளெல்லாம், சபை கண்டித்து உணர்த்தப்படும்படியாக திவ்விய ஏவுதலினால் வந்தவை என்றும், கடந்த காலங்களில் தீர்க்கதரிசிகள் கூறியவைகள் உண்மையில் (பிழையற்ற தன்மையில்) குறைவுபடவில்லை என்றும் நாம் நம்புவது நியாயமானதே என்று உணருகிறோம். ஆனால் அவர்களுடைய சாட்சியைப் பொறுத்தவரை உண்மையானவைகள் என்றும், அவர்கள் சபைக்குக் கூறியவைகள் எல்லாம் திவ்விய ஒப்புதலை பெற்றிருந்தவைகளாக இருந்தன என்றும் நாம் நிச்சயத்திருந்தாலும், அப்போஸ்தலர் தங்களுடைய போதனைகளில் பிழை செய்யவில்லை என்ற கருத்துக்குப் பொதுவாக எதிர்மாறாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வித்தியாசமான சூழ்நிலைகளை நாம் கவனமாக ஆராய்ந்து பார்ப்பது நல்லது. நாம் அவைகளைத் தனித்தனியாக ஆராய்ந்து பார்ப்போம்.

(1) நம்முடைய ஆண்டவரை அவருடைய சிலுவை மரணத்துக்கு முன்பாக மறுதலித்தது. இங்கே பேதுரு ஒரு பெரிய தவற்றைச் செய்தார் என்பதை மறுக்க முடியாது, இதைக் குறித்து உண்மையாகவே மனம் வருந்தினார். ஆனாலும் இந்த மறுதலிப்பு அவர் அப்போஸ்தலராக தெரிந்து கொள்ளப்பட்ட பின்னர் ஏற்பட்டது என்ற போதிலும், அவர் பெந்தேகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்பதாக ஏற்பட்டதாகும். மொத்தத்தில் அவர் அப்போஸ்தலராக திவ்விய நியமனம் பெறுவதற்கு முன்பதாக ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மேலும், அப்போஸ்தலர்கள் பிழை செய்யாதவர் என்று நாம் கூறுவது, அவர்கள் வெளிப்படையாகக் கூறிய அவர்களுடைய போதனைகளுக்கும், அவர்கள் எழுதியவைகளுக்கும் உரித்தானதாகும், ஆனால் இவைகள் அவர்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் சின்னஞ் சிறிய காரியங்களைக் குறிப்பிடுவதாக இல்லை. ஏனெனில் இவைகள் சந்தேகத்துக்கிடமில்லாமல் மண்பாண்டங்களாக



இருந்தபோது ஏற்பட்ட கறைகள் மாத்திரமல்ல, ஆதாமின் பெரிய வீழ்ச்சியால் எல்லா பிள்ளைகளுமே பாதிக்கப்பட்டது போல அவர்களுக்கும் நடந்தது. ''இந்த பொக்கிஷத்தை மண்பாண்டத்தில் பெற்றிருக்கிறோம்'' என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகள், அவரையும் மற்ற அப்போஸ்தலர்களையும் குறிப்பது தெரிகிறது; மாத்திரமல்ல பரிசுத்த ஆவியைப் பெற்ற சபை அங்கத்தினர் அனைவரையும் குறிக்கிறது. நம்முடைய பங்கானது, நம்முடைய ஆண்டவரின் பெரிய மீட்பு வேலையில், புது சிருஷ்டியாயிருக்கிற நம்முடைய வாஞ்சைகளுக்கு எதிராயிருக்கிற மாம்சத்தின் கறைகளை மூடுகிறது.

ஆண்டவருக்கும், சபைக்கும் ஊழியம் செய்யும்படியான அப்போஸ்தல உத்தியோகம், மாம்சத்தின் பெலவீனங்களிலிருந்து தனித்து இருக்கிறது; அவர்கள் மனுஷீக பிரகாரம் பூரணமானவர்கள் என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல், அவர்கள் ஆமோதித்தபடியே, நம்மைப் போல ''பாடுள்ள மனுஷர்களாக'' இருந்தபடியால் அளிக்கப்பட்டது. (அப். 14:15) அவர்களுடைய உத்தியோகம் அவர்களை முன்னிலைக்குக் கொண்டு வரவில்லை, அவர்களுடைய அழிந்து போகிற சரீரங்களுக்கும் பூரணத்தைக் கொண்டு வரவில்லை; ஆனால், புதிய மனதையும், இவைகளை வழிநடத்தும்படியாக பரிசுத்த ஆவியையும் கொண்டு வந்தது. அது அவர்களுடைய சிந்தைகளையும், செயல்களையும் பூரணமாக்கவில்லை. ஆனால் அதற்கு மேலாக பன்னிருவரின் போதனைகள் ஆண்டவருடைய வார்த்தைகளை பிழையற்றவைகளாக இருக்கும்படியாக பார்த்துக்கொண்டது. போப்பாண்டவர்களுக்கும் இம்மாதிரியான பிழையற்ற தன்மை உண்டென்று உரிமை பாராட்டப்படுகிறது. போப்பாண்டவர் தனது பதவிக்கு அப்பால் அல்லது உத்தியோகப்பூர்வமாக பேசும்போது அது தேவனுக்கு மேற்பட்டது என்றும் அவர் பிழை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ''ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்'' என்ற வேதபோதனையை மறுதலித்து ஒதுக்கிவிட்டு, போப்பும் அப்போஸ்தலர் என்று உரிமை பாராட்டி, தவறு செய்யாதவர் என்று சொல்லப்படுகிறது.

(2) ஒரு முறை பேதுருவும் மாயம் பண்ணினார், இருபக்கமும் பேசுவது என்ற குற்றம் புரிந்தார். (கலா. 2 :11–14) இது அப்போஸ்தலர்கள்

தங்கள் நடத்தையில் பிழையற்றவர்களாக இருக்கவில்லை என்பதற்கு ஓர் ஆதாரம் என்று சுட்டிக்காட்டப் படுகிறது. இதை அப்போஸ்தலர்களும் ஒத்துக்கொண்டார்கள் என்று நாம் நினைக்கிறோம். (அப். 14:15) ஆனாலும் மறுபடியும் சொல்லுகிறோம், அவர்கள் அப்போஸ்தலர்களாக பயன்படுவதற்கோ அல்லது அவர்களுடைய வேலையை தடை செய்யவோ இந்த மாம்ச பலவீனங்கள் அனுமதிக்கும்படியாக விடப்படவில்லை, அவர்கள் ''பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை'' பிரசங்கித்தார்கள். (1பேது. 1:12; கலா. 1:11,12) அதை அவர்கள் மனுஷீக ஞானத்தினால் பிரசங்கியாமல், தேவ ஞானத்தினால் பிரசங்கித்தார்கள். (1கொரி. 2: 5–16) பேதுருவின் இந்த பிழையை தேவன் அப்போஸ்தலராகிய பவுல் மூலம் உடனடியாக சரி செய்தார். பவுல் அன்புடன், ஆனால் உறுதியுடன், பேதுருவின் மேல் குற்றம் சுமத்தினதினால் முகமுமாய் எதிர்த்தார். பேதுருவும் இதை நல்மனதுடன் ஏற்றுக்கொண்டார். அவர் யூதருக்கு பட்சமாய் காணப்பட்ட அவருடைய பலகீனத்தை அவர் நல்ல முறையில் மேற்கொண்டார் என்று அவருடைய இரண்டு நிருபங்கள் மூலமாக வெகு தெளிவாகத் தெரிகிறது. எப்படியெனில் இந்த நிருபங்களில் இந்த விஷயத்தைக் குறித்து மனதளவில் எந்தத் தடுமாற்றமும் இல்லை யென்பதோடு, ஆண்டவரோடு ஒத்துப்போவதிலும், அறிக்கை செய்வதிலும் எந்தக் குறையும் தென்படவில்லை.

(3) அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய வருகை வெகு சீக்கிரத்தில், ஒருவேளை அவர்களுடைய ஜீவிய நாட்களிலேயே இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள் என்றும், இவ்விஷயத்தில் அவர்கள் உபதேச கோணத்தில் பார்க்கும்போது பிழை செய்தார்கள் என்றும், ஆகவே அவர்களுடைய உபதேசங்கள் நம்பப்படத்தக்கவைகள் அல்லவென்றும் கூறப்படுகிறது. ஆண்டவர் தனது இரண்டாம் வருகையைக் குறித்தும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்தும் நிச்சயமற்ற நிலையில் அவர்களை விட்டதை ஆண்டவர் அறிவித்தார் என்று நாம் பதில் கூறுகிறோம். பொதுவாக உலகம் இந்த விஷயத்தைக்குறித்து இருக்கிற வண்ணமாக, இருளில் இராமல் இது எப்போது நடக்கும் என்று அறியும்படியாக அவர்கள் கவனித்துப்பார்க்க வேண்டும் என்றுதான் ஆண்டவர் கூறினார். ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் இந்த விஷயத்தைக் குறித்து அவர்கள் கேட்டபோது, ''பிதாவானவர் தம்முடைய





ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல'' என்ற பதில் வந்தது. ஆகவே, ஒரு காலம் வரும் வரை இது ஒரு திவ்விய இரகசியமாக இருக்கும் என்று ஆண்டவர் அறிவித்ததற்கு அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தலாமா? நிச்சயமாக இல்லை. இருந்தபோதிலும், ''வர விருக்கிற காரியங்களைக்'' குறித்து ஆவியின் வழிநடத்துதலின்படி அப்போஸ்தலர்கள் இரண்டாம் வருகையைக்குறித்து அறிவிப்பதில் மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள், அதைத் தங்களுடைய ஜீவிய காலத்திலேயே எதிர்பார்த்தார்கள் என்பதற்கு எதிர்மாறாக அவர்களுடைய வார்த்தைகள் இருந்தது என்று காண்கிறோம்.

உதாரணமாக, பேதுரு, தான் மரித்த பின்பு அவருடைய சாட்சியங்கள் சபையோடு கூட இருக்கும் என்ற எண்ணத்துடன் தன்னுடைய நிருபங்களை எழுதினார் என்று தெளிவாகக் கூறுகிறார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்வரை அவர் ஜீவிக்கும்படி எதிர்பார்க்க வில்லை என்பதற்கு இது ஒரு தெளிவான உதாணமாயிருக்கிறது. (2பேது. 1:15) அப்போஸ்தலராகிய பவுல், ''காலம் குறுகியதாயிருக்கிறது'' என்று அறிவிக்கும்போது எவ்வளவு குறுகியதாயிருக்கிறது என்று கூறுவதைப் போல பாவனை செய்யவில்லை. உண்மையாகவே ஏழாயிரம் வருட நாட்கள் என்ற ஒரு வார கணக்கில் பார்க்கும் போது– அதில் ஏழாவது பாகம் ராஜ்யத்தைக் கொண்டு வரும்– ஏற்கெனவே ஆறில் நான்கு பங்கான காத்திருப்பு காலம் கடந்துவிட்டது. இதே முறையில்தான் பூலோகக் காரியங்கள் சம்பந்தப்பட்டவைகளைப் பற்றிப் பேசினோம். வியாழக்கிழமையன்று வாரம் சீக்கிரமாக முடிந்து விடும் என்று கூறுகிறோம். பவுலும் கூட அவர் மரிக்கப்போவதைக் குறித்தும், அவருடைய ஜீவியத்தைப் பலி கொடுக்க ஆயத்தமாயிருப்பதைக் குறித்தும், அப்படிச் செய்ய அவர் விரும்புவதைக் குறித்தும் சொன்னார். ஆண்டவருடைய நாள் இரவிலே திருடனைப் போல் வரும் என்று பவுல் சுட்டிக் காட்டினார். இந்த விஷயத்தைக் குறித்த சில தவறான எண்ணங்களைச் சரிபடுத்தும்படியாக அவர் ''ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாக தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருப்பதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்'' என்று கூறினார். ''மேலும் எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச

துரோகம் முந்தி நேரிட்டு பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்தநாள் வராது'' என்பது போன்றவைகளைக் கூறினார். மேலும் ''நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே'' என்றும் சொன்னார்.

(4) ''இதோ நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் ஒரு பிரயோஜனமும் இராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (கலா. 5:2) என்று பவுல் சொன்னதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. அது தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணுவதற்கு வழி வகுத்தது. (அப். 16:3) ஆகவே, அவர் தவறாக போதிக்கவில்லையா, அவருடைய சொந்த சாட்சியை மறுப்பது போல் இல்லையா என்று நாம் கேட்கப்படுகிறோம். நாங்கள் அப்படியில்லை என்று பதில் கூறுகிறோம்; தீமோத்தேயு ஒரு யூதன், அவனுடைய தாயார் யூத பெண்ணாக இருந்தபடியாலும் (அப்.16:1) யூதர்கள் மத்தியில் விருத்தசேதனம் தேசிய அளவிலான சடங்காச்சாரமாக இருந்தபடியினாலும், இது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்னரே ஆரம்பித்திருந்தபடியாலும், கிறிஸ்து தன் சிலுவையின் மேல் ஆணியடித்து நியாயப்பிரமாணத்திற்கு(உடன்படிக்கைக்கு) முற்றுப்புள்ளி வைத்த பின்னரும் அது வழக்கத்தில் இருந்தது. சீனாய் மலையில் இஸ்ரேல் தேசத்திற்கென நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருடங்களுக்குக முன்னரே விருத்தசேதனம் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்கப்பட்டது. பேதுரு விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படியானார் (அதாவது– யூதர்களுக்கு) பவுல் விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு ( அதாவது புறஜாதியாருக்கு) அப்போஸ்தலனாக்கப்பட்டார். (கலா. 2:7,8)

கலா. 5:2 ல் உள்ள அவரது வாக்கு யூதர்களுக்கு அல்ல, அவர் புறஜாதியினருக்குக் கூறினார். ஏனெனில் அவர் விருத்தசேதனத்தைப் பற்றி நினைத்ததற்கு உண்டான ஒரே காரணமே, சில கள்ள போதகர்கள் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும், அதோடு கூட கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் குழப்பி, அவர்கள் கிருபையின் உடன்படிக்கையை அலட்சியப்படுத்தும்படியாக வழி நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்படுவது (இப்படி எந்த காரணத்தினாலும்)





கிருபையின் உடன்படிக்கையை மறுப்பதாகும், ஆகவே அது கிறிஸ்துவின் முழு கிரியையுமே மறுப்பதாகும் என்று அப்போஸ்தலர் இங்கே காட்டுகிறார். யூதர்கள் தங்கள் தேசிய முறைமைகளின்படியான விருத்தசேதனத்திற்கு மறுப்பு தெரிவிக்கக் காரணம் காணவில்லை. இது 1கொரி. 7:18,19 ல் உள்ள அவருடைய வார்த்தைகளிலிருந்தும், தீமோத்தேயுவோடு அவர் தொடர்புகொண்டதிலிருந்தும் தெரிகிறது. தீமோத்தேயுவோ அல்லது வேறு எந்த யூதனோ விருத்தசேதனம் பண்ணப்படுதல் அவசியம் என்றபடியல்ல, ஆனால் அது முறைமைக்கு மாறானதல்ல, மேலும் ஓர் அளவுக்கு யூதர்கள் மத்தியிலே அவர் செல்ல வேண்டியிருந்தபடியால், அது அவருக்கு நன்மையாயிருந்தது. யூதர்களின் நம்பிக்கையை அவர் பெற்றார். ஆனால் இதைத் தவறாகப் புரிந்து கொண்ட சிலர் முழுவதும் கிரேக்கனாயிருந்த தீத்துவையும் விருத்த சேதனத்திற்கு வழி நடத்தவேண்டும் என்றபோது பவுல் இந்த விஷயத்தில் முழு எதிர்ப்பைத் தெரிவித்தார் என்று காண்கிறோம். (கலா. 2:3–5)

(5) அப். 21:20–26 ல் சொல்லப்பட்ட பிரகாரமாக பவுல் செய்தது, சத்தியத்தைக் குறித்து அவர் போதித்ததற்கு மாறாகப் பிரதிபலிப்பது போல் எடுத்துக்கொள்ளப்படுகிறது; அது உபதேசங்களையும், முறைமை களையும் குறித்த விஷயங்களில் அவருடைய தவறு என சுட்டிக்காட்டு கிறது என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது; மாத்திரமல்ல, இந்த இடத்தில் இழைத்த தவறினால் பவுல் கைதியாக அதிகமாக உபத்திரவம் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டார் என்றும், கடைசியில் ரோமாபுரிக்கு அனுப்பப் பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளிலிருந்து இப்படியான கருத்தைக் கொள்ள முடியாது. குறிப்புகள் காட்டுகிறபடி இந்த அனுபவத்தின்போது பவுலுக்கு மற்ற அப்போஸ்தலர்களுடைய அனுதாபமும், ஆதரவும் இருந்தது. ஆனல் இதற்கும் மேலாக, ஆண்டவருடைய சலுகை தொடர்ந்து இருந்தது. அவர் மற்ற அப்போஸ்தலர்கள் சொன்னபடி நடந்தார். அவர் எருசலேமுக்குச் செல்வதற்கு முன்னால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது (அப். 21:10–14) என்னவெனில் கட்டுகளும், சிறைவாசமும் அவரை எதிர்நோக்கியிருப்பது என்பதாகும். அவர் தன்னுடைய ஊழியத்தி னிமித்தம் கீழ்ப்படிதலோடு முன்கூட்டியே சொல்லப்பட்ட துன்பங்களைத் தைரியமாக நோக்கினார். இந்த துன்பத்தின் நடுவிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று ''பவுலே திடன்கொள், நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல ரோமாபுரியிலும் சாட்சிக் கொடுக்க வேண்டும்''

என்றார். பின்னர் நாம், ஆண்டவர் மறுபடியும் பவுலுக்குச் சிலாக்கியமாக இப்படியாகக் கூறினார் என்று வாசிக்கிறோம். ''என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர் என்னிடத்தில் வந்து நின்று பவுலே, பயப்படாதே நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகின்ற யாவரையும் தேவன் உனக்கு தயவு பண்ணினார்.'' (அப். 23: 11; 27:23,24)

இந்த விஷயங்களிலிருந்தும், பவுலின் ஒரே மாதிரியான துணிச்சலான நல் நடத்தையிலிருந்தும், ஊழியத்தையும் சாட்சியையும் பெரிதாக எண்ணியதிலிருந்தும், தேவன் ஆட்சேபிக்காமல் ஆதரித்தார் என்று பார்க்கும்போது நாம் இதை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். அப். 21:21–27 வசனத்தை நாம் தியானிக்கும்போது, பவுல் ஆண்டவரை ஏற்றுக் கொண்ட யூதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்று அவர் போதியாமல் இருந்தது மாத்திரமல்ல, மோசேயின் நியாயப்பிரமாணத்தை மறுக்கவுமில்லை, ஆனால் அதற்கு மாறாக அவ்வளவு பலவந்தமாக உன்னதமான உண்மைகளை நிழலாட்டமாய் காட்டின மோசேயின் நியாயப்பிரமாணம் சுட்டிக்காட்டுவதை காட்டி அதைக் கனப்படுத்தினார் என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, மோசேக்கு மறுப்பு தெரிவிக்காமல், அதற்குப் பதிலாக நியாயப்பிரமாணம் நலமானதாயும் பரிசுத்தமுள்ளதுமா யிருக்கிறது என்று கூறி மோசேயைக் கனப்படுத்தினார். மேலும் அதனால் பாவத்தின் கொடிய தன்மையைக் குறித்ததான அறிவு அதிகரித்துள்ளது, நியாயப்பிரமாணம் அவ்வளவு உன்னதமானதாக இருந்தபடியால் பூரணமில்லாத எந்த மனிதனும் அதற்குக் கீழ்ப்படிய முடியாது என்று சுட்டிக்காட்டியதோடு கிறிஸ்து அதை கடைப்பிடித்ததால் அதனால் வரும் பலன்களைப் பெற்றார் என்றும், இப்பொழுது கிருபையின் உடன்படிக்கையின் கீழாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியாதவர்களுக்கு நித்திய வாழ்க்கையையும், ஆசீர்வாதங்களையும் இலவசமாகத் தருகின்றார் என்றும், ஆனால் விசுவாசத்தினால் அவருடைய பூரணமான கீழ்ப்படிதலையும், பலியையும் அவர்களுடைய பூரணமற்ற நிலையை மூடுவதாக ஏற்றுக்கொண்டவர்கள், நீதியின் பாதையில் அவரைப் பின்பற்றுகிறவர்கள் ஆனார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

யூத யுகத்தின் சடங்காச்சாரங்களாகிய, உபவாசங்கள், மாதப்பிறப்பு, ஓய்வு நாட்கள், பண்டிகைகளைக் கொண்டாடுவது





போன்றவைகள் சுவிசேஷ யுக ஆவிக்குரியகாரியங்களுக்கு நிழலாக இருந்தன. அப்போஸ்தலர் தெளிவாகக் காட்டுகிறது என்னவெனில் புது உடன்படிக்கையின் சுவிசேஷம் இவைகளை கட்டளையிடவோ, தடை செய்யவோ இல்லை. (ஆண்டவருடைய இராப்போஜனமும், முழுக்கு ஞானஸ்நானமும் மாத்திரமே நமக்கு அடையாளமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டது, அவைகள் புதியவைகளாகும்). (கொலோ. 2:16,17; லூக். 22:19; மத். 28:19)

நாம் இப்பொழுது பார்க்கின்ற யூதர்களுடைய அடையாளமான சடங்காச்சாரங்களில் ஒன்றான ''சுத்திகரிப்பு'' என்பது பவுலாலும் நான்கு யூதர்களாலும் கடைபிடிக்கப்பட்டது. யூதர்களாக இருந்தபடியால், அவர்கள் தெரிந்துகொண்டால் அவர்களை கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு தங்களை அர்ப்பணம் செய்யும் உரிமை மாத்திரம் அல்லாது இந்த அடையாளமாய் இருக்கிற சுத்திகரிப்பையும் செய்ய அவர்களுக்கு உரிமை இருந்தது. இதைதான் அவர்கள் செய்தார்கள். பவுலோடு இருந்த மனிதர்கள் ஆண்டவருக்கும் ஜனங்களுக்கும் முன்பாக, தங்கள் தலைகளை சவரம் பண்ணிக்கொள்வதன் மூலம் அதிகமாக தாழ்த்தும்படி ஒரு பொருத்தனை செய்து கொண்டார்கள். இந்த அடையாளமான சடங்காச்சாரங்களுக்கு பணச்செலவு உண்டு, இதற்கான செலவு ஒரு வேளை தேவாலயத்தின் செலவுகளைச் சந்திக்கும்படியாக ஒவ்வொருவருக்கும் என ஏற்படுத்தப்பட்ட காணிக்கைப் பணமாகும்.

அப்போஸ்தலராகிய பவுல் ஒரு போதும் யூதர்கள் நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள் என்று கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அவன் ஜீவிக்கும் காலம்வரை அவன் மேல் அதற்கு ஆதிக்கம் உண்டு என்று கற்றுக்கொடுத்தார். இருந்தபோதிலும் ஒரு யூதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரோடு மரிப்பானாகில், இப்படிப்பட்ட யூதன் மேல் உள்ள நியாயப் பிரமாண உடன்படிக்கையின் உரிமை முற்றுபெறும். மேலும் அவனை கிறிஸ்துவுக்குள் தேவனுடைய விடுதலையாக்கப்பட்ட மனிதனாக ஆக்கிற்று. (ரோம. 7:1–4) ஆனாலும் மனமாற்றம் அடைந்த புறஜாதியினருக்கு, அவர் அவர்கள் ஒருபோதும் யூத நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டவர்களாக இருந்ததில்லையாதலால், யூத நியாயப்பிரமாண சடங்காச்சாரங்களையும் பண்டிகைகளையும் கைக்கொள்ள முயற்சி செய்வார்கள் என்றால் அது அவர்கள், தங்களுடைய இரட்சிப்புக்கு அந்த அடையாளங்கள் மேல்

நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் கிறிஸ்துவின் பலியினால் வரும் புண்ணியத்தின் மேல் முழுமையாக சார்ந்திருக்கவில்லை என்று பொருள்படும் என்றும் அவர் கற்றுக்கொடுத்தார். இதற்கு அப்போஸ்தலர்கள் இசைவு தெரிவித்தார்கள். (அப். 21:25; 15:20, 23–29 ஐப் பார்க்கவும்)

நாங்கள் முடிவாகக் கூறுவது என்னவெனில் பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் தேவன் ஆச்சரியமாக உபயோகப்படுத்தினார். அவர்களை அவர் அவருடைய சத்தியத்திற்காக மிகவும் திறமையுள்ள ஊழியக்காரர்களாக்கி அவர்கள் எழுதிய விஷயங்களில் அவர்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழி நடத்தினார். ஆகவே, தேவனுடைய மனிதனை தேறியவனாக்கும் எந்த ஒரு காரியமும் விடப்படவில்லை. அவர்களுடைய ஆதிகால எழுத்துகளில் அப்போஸ்தலர்களேகூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஒரு கரிசனையும், ஞானமும் இருந்தன. நம்முடைய விசுவாசத்தின் நிச்சயமான இந்த அஸ்திபாரத்திற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

## அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகிறவர்களல்ல

எந்த விதத்திலாவது அப்போஸ்தலர்கள் சபையில் பிரபுக்கள் என்று எண்ணப்பட முடியுமா? அல்லது இன்னொரு வகையில் சொல்லப் போனால், சபையின் ஆண்டவரும் தலையானவரும் சென்ற பின்னர் அவர்களில் யாராவது தலைமை இடத்தை எடுத்தார்களா? அல்லது, அவர்கள் ஆண்டவருடைய இடத்தை எடுக்கவும் ஆட்சி செய்யும் பொறுப்பை எடுக்கவும் எல்லாரும் ஒருமித்து இணைந்து தலைமையை உண்டாக்கினார்களா? இல்லையெனில் அவர்கள் யாராவது ரோமாபுரியின் போப்புக்கள் சொல்லிக் கொள்ளுகிறபடி அந்த இடத்துக்கு அவர்களாகவே வந்துவிட்டார்களா– பிரதி குருவாக அல்லது சரீரமான சபைக்கு கிறிஸ்துவுக்கு பதிலாக வந்தார்களா?

இந்த அனுமானங்கள் மத்தியில் (எபே. 4:4,5) ''ஒரே சரீரமும்,'' ''ஒரே கர்த்தரும் உண்டு'' என்ற பவுலின் தெளிவான அறிக்கை நமக்கு இருக்கிறது. ஆகவே அந்த சரீரத்தின் பலவேறு அங்கங்கள் மத்தியில், சில அங்கங்களின் முக்கியத்துவம் எப்படிப்பட்ட தாயிருந்தாலும் ஒரே





கர்த்தரும், தலைமையானவருமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதைத்தான் ஆண்டவரும், திரளான ஜனங்களின் மத்தியிலும் சீஷர்களுக்கும் தெளிவாக இப்படியாக போதித்தார்: ''வேதபாரகரும், பரிசேயரும் ரபி, ரபி என்று அழைக்கப்பட விரும்புகிறார்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.'' (மத். 23:1, 2, 6–8) மறுபடியும் அவர் அப்போஸ்தலர்கள் மத்தியில் இவ்வாறு கூறுகிறார்: ''புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும் அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்து இருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.'' (மாற்கு 10: 42–45)

ஆதிகால சபை எப்போதாகிலும் அப்போஸ்தலர்களை பிரபுக்கள் என்று எண்ணினது என்பதற்கோ அல்லது அப்போஸ்தலர்கள் இப்படியான அதிகாரத்தை அல்லது கனத்தை எடுத்துக் கொண்டார்கள் என்பதற்கோ நமக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. அவர்கள் நடந்து கொண்ட விதம் போப்புக்களும், எல்லா கிறிஸ்தவ சபை பிரிவினரும் கொண்டிருக்கும் பிரபுத்துவம் என்பதைக் குறித்தான எண்ணத்திற்கு மிகவும் மாறுபட்டதாயிருந்தது. போப்புக்கள் வருணிப்பது போல பேதுரு ஒருபோதும் தன்னை அப்போஸ்தலர்களில் ராஜா என்று கூறியது கிடையாது. அப்படி இல்லாவிடினும், அவரோ மற்றவர்களோ ஒருபோதும் ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டதில்லை, அல்லது இப்படியான மரியாதையை சபையிலிருந்து பெற்றதும் கிடையாது. அவர்கள் ஒருவருக்கொருவர் அழைத்தது, அல்லது குறிப்பிட்டது சாதாரணமாக பேதுரு, யோவான், பவுல் போன்றுதான்; இல்லையெனில் சகோதரர் பேதுரு, சகோதரர் யோவான் போன்றுதான்; மேலும் அதுபோன்று சபையில் உள்ள அனைவரும் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகள் என்றுதான் அழைக்கப்பட்டார்கள். (அப். 9:17;

*21:20; ரோம. 16:23; 1 கொரி. 7:15; 8:11; 2கொரி. 8:11; 2கொரி. 8:18; 2தெச. 3: 6,15; பில. 7,16)*

ஆதி சபையில் முன்னணியில் உள்ள இந்த தேவ ஊழியர்கள் குருமாருக்கான அங்கிகளையோ, அல்லது சிலுவையுடன் கூடிய ஜெபமாலையுடன் ஜனங்களுடைய கனத்தையும், மரியாதையையும் பெறுவதற்காகச் செல்லவில்லை; ஏனெனில் ஆண்டவர் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்திருந்தபடி, அவர்களில் முதன்மையானவர் யாரென்றால் அதிகமாக ஊழியம் செய்தவர்தான். இப்படியாக, உதாரணமாக, உபத்திரவம் சபையை தாக்கியபோது சபையினரை எருசலேமை விட்டு வெளியே விரட்டினபோது, பதினோரு பேரும் அங்கேயே தைரியமாக நிலைத்திருந்தார்கள், ஏனெனில் இப்படியாக கஷ்டமான காலத்தில் வேறு இடங்களில் இருந்தவர்கள் ஆதரவுக்காக, உதவிக்காக எருசலேமை நோக்கிப் பார்த்தார்கள். அவர்களும் ஓடியிருந்தால் முழுச் சபையும் திகைப்பு அடைந்திருப்பார்கள், பயத்தால் பீடிக்கப்பட்டிருப்பார்கள். யாக்கோபு ஏரோதின் பட்டயத்தால் மடிவதைப் பார்க்கிறோம். பேதுருவும், இந்த மாதிரியான ஆபத்து எதிர் நோக்கி இருக்கையில், சிறைச்சாலையில் தள்ளப்பட்டு இரண்டு சேவகர்களோடு சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார். (அப். 12:1–6) மேலும் பவுலும், சீலாவும் அவர்களுடைய ஊழியத்தில் அனேக தரம் அடிபட்டார்கள், அதன் பின் உட்காவலரையில் அடைக்கப்பட்டு, அவர்கள் கால்கள் தொழு மரத்தில் மாட்டி வைக்கப்பட்டன. பவுலும் அதிகமான உபத்திரவங்களை அனுபவித்தார். (அப். 16:23,24; 2கொரி. 11:23–33) அவர்கள் பிரபுக்களைப் போன்று காணப்பட்டார்களா அல்லது பிரபுக்களாக நடந்து கொண்டார்களா? நிச்சயமாக கிடையாது.

இந்த விஷயத்தில் பேதுரு மிகவும் தெளிவாக இருந்தார். மூப்பர்களுக்கு ஆலோசனையாக சொல்லும்போது, ''தேவனுடைய மந்தையை மேய்ப்பாயாக'' என்று சொன்னார். அவர் உங்களுடைய மந்தை என்று கூறவில்லை, இன்றைக்கு அநேக ஊழியக்காரர்கள் சொல்வது போன்று உங்களுடைய ஜனங்கள், உங்களுடைய சபை என்று கூறவில்லை, ஆனால் தேவனுடைய மந்தை என்றார்கள், சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகிறவர்கள் போன்று இல்லாது, தாழ்ச்சிக்கு, உண்மைக்கு, வைராக்கியத்திற்கு, தேவ பக்திக்கு மாதிரியாக இருந்தார்கள். (1பேது. 5:1–3) மேலும் பவுல் கூறுகிறார், ''தேவன் அப்போஸ்தலராகிய எங்களை





மரணத்திற்கு குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாகக் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்......... நாங்கள் பலவீனர்.......பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், கட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலை செய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம்; தூஷிக்கப்பட்டு வேண்டிக்கொள்ளுகிறோம்; உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவுமானோம்.'' (1கொரி. 4:9–13) இவைகள் எல்லாவற்றிலும் இருமாப்பாய் ஆளுகிறவர்கள் போல் இருக்கிறார்களா? ஆண்டவருடைய சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகை செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற சில சகோதர்ர்களுக்கு பவுல் திட்டவட்டமாய் கூறுகிறார்: ''இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்போது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே. எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே;'' இந்த விஷயத்தில் ''என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்.'' மறுபடியும், ''இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும் (வேலைக்காரர்கள்), தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்'' என்றார். (1கொரி. 4:8, 16,1)

மறுபடியும் பவுல் தொடர்ந்து கூறுகிறார்: ''சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாக, தேவன் எங்களை உத்தமரென்று எண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்கு பாரமாயிருக்கக்கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல பட்சமாய் நடந்து கொண்டோம்.'' (1தெச. 2:4–7) அப்போஸ்தலர்கள் கட்டளையோ, சாபமோ இடாமல் தாங்கள் கூறுவதை வேண்டுதல் மூலம் தெரிவிப்பதைப் பின் வறுமாறு பார்க்கிறோம்: ''தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்.''

''அன்றியும், என் உத்தம கூட்டாளியே, .........உன்னையும் வேண்டிக்கொள்கிறேன்.'' ''முதிர் வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல்........புத்தி சொல்லு.'' (1கொரி. 4:13; பிலி. 4:3; 1தீமோ. 5:1)

ஆதி சபை சரியான விதத்தில், அப்போஸ்தலருடைய தெய்வ பக்திக்கு கனத்தை அளித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய உயர்வான வேத அறிவையும், ஞானத்தையும் கனப்படுத்தி, அவர்களுக்கென்று தேவன் விசேஷமாகத் தெரிந்துகொண்ட பிரதிநிதிகளாக இருந்தபடியால், அவர்களுடைய பாதத்தண்டையில் அமர்ந்து, வெறுமையாக கேள்வி கேட்காத மனதுடன் இல்லாமல், ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியும் மனதுடன் இருந்தார்கள். (1யோவா. 4:1; 1தெச. 5:21; ஏசா. 8:20) அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதில் இந்த மனநிலையை கட்டளையிட்டு, அவர்களுடைய நம்பிக்கைக்கு ஒரு காரணம் இருப்பதைக் கண்டு, அதை ஊக்குவித்தார்கள். ஆனால் சபையானது மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு மனுஷ ஞானத்திற்குரிய (மனுஷீக தத்துவம், கோட்பாடுகள்) நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தும்படியாக அப்படியான நிலையை சந்திக்க ஆயத்தமாயிருந்தார்கள். (1கொரி. 2:4,5) அவர்கள் தங்களுக்கென ஒரு குருட்டாட்டமான, மூட நம்பிக்கையுடன் கூடிய மரியாதையை வளர்க்கவில்லை.

''பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளா யிருந்தார்கள்'' என்று நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள், அவர்கள் பிரசங்கித்த சுவிசேஷம், ஆதிகாலத்து தீர்க்கதரிசிகள் மறைமுகமாக அறிவித்த அதே சுவிசேஷம்தான் என்று அறிவிப்பதில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ''தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே (கிறிஸ்துவின் சரீரமான சபைக்கு) இவைகளைத் தெரிவித்தார்கள் என்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்போது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது;''





(1பேது. 1:10–12) ஆண்டவராலேயே வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்ட ஜீவனும் அழியாமையும் உள்ள அதே சுவிசேஷமாயிருந்தது. அவர்களால் சபைக்கு கொடுக்கப்பட்ட அதிகமான விவரங்களும், விஸ்தாரமான குறிப்புகளும் விசேஷ வெளிப்பாடுகள் மூலமாகவோ அல்லது இயற்கையான முறையில் கிடைத்ததோ, ஆனால் எல்லாம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படியும், ஏவுதலின்படியும் கிடைத்தவை களாகும். ''இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்'' என்ற ஆண்டவரின் வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக அவைகள் அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் மூலமாக சபைக்கும் கொடுக்கப்பட்டதாகும்.

ஆகவே பெரோயா பட்டணத்தார் வேதங்களை ஆராய்ந்து அப்போஸ்தலருடைய சாட்சிகள் நியாயப்பிரமாணத்தோடும் தீர்க்கதரிசிகளோடும் ஒத்து இருந்ததா என்று பார்த்தார்கள், மேலும் ஆண்டவருடைய போதனைகளோடு ஒத்துப் பார்ப்பதும் நலமானதாக இருந்தது. நம்முடைய ஆண்டவரும், ''வேதத்தை ஆராய்ந்து பாருங்கள் .........என்னைக்குறித்து சாட்சி கொடுப்பவைகளும் அவைகளே'' என்று கூறி, அவருடைய சாட்சியை இவ்விதமாக நிரூபிக்கும்படியாக அழைப்பித்தார். முழு திவ்விய சாட்சியானது, அது நியாயப் பிரமாணத்தினாலோ, தீர்க்கதரிசிகளாலோ, ஆண்டவராலோ அல்லது அப்போஸ்தலர்களாலோ கொடுக்கப்பட்டதோ, எப்படியாயினும் அது இசைவாயிருக்க வேண்டும். அவர்களுடைய முழு சாட்சியும் அவர்களுடைய திவ்விய ஊக்குவித்தலுக்கு ஆதாரமாகும். ஆகவே பழைய, புதிய ஏற்பாடுகள் ''தேவ சுரமண்டலமாக'' (வெளி.15:2) அமைந்திருக்கின்றன என்று ஆண்டவர்தானே கூறுகிற அளவுக்கு அதே இணக்கம் நிலைத்திருப்பதைக் காண்கிறோம், தேவனுக்கு ஸ்தோத்திரம்! நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் பல்வேறு சாட்சிகள் அந்த தேவ சுரமண்டலத்தின் நரம்புகளாக உள்ளன. அவைகள் நம் உள்ளத்தில் தங்கியுள்ள பரிசுத்த ஆவியினால் மீட்கப்படும்போது, திவ்விய சத்தியத்தை நாடுகின்ற வைராக்கியமான ஊழியக்காரர்களின் விரல்களினால் மொத்தமாக இசைக்கப்படும்போது, அந்த மிகவும் வசீகரமான தொனிகள் நம்முடைய அழிந்து போகிற காதுகளில் மிக அருமையாக தொனிக்கிறது. ஆசீர்வதிக்கப்பட்ட உன்னத சங்கீதமான ''மோசேயின் பாட்டுக்கும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டுக்கும்'' ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

இதை நாம் அவருடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் சாட்சிகளின் மூலம் கற்றுக்கொள்ளுகிறோம். இவர்களுக்கு ஆண்டவராகிய இயேசுவே தலையாயிருக்கிறார்.

ஆனால் ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய சாட்சி நியாயப்பிரமாணத்தோடும், தீர்க்கதரிசிகளோடும் இசைந்திருக்க வேண்டியிருந்தாலும், நாம் அவைகள் பழையதும் புதியதுமானவைகளையும் சாட்சியாக அறிவிக்க எதிர்பார்க்க வேண்டும். (மத். 13:35; சங். 78:2; உபா. 18:15,18; தானி. 12:9) ஆகவே, அவைகள் ஆதிகாலத்து தீர்க்கதரிசனங்களில் மறைந்திருந்த உண்மைகளை விளக்கிக்கூறுவது மாத்திரமல்ல, சத்தியத்தின் புதிய வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன.

## அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள்

பொதுவாக கிறிஸ்தவ உலகில் காணப்படுகின்ற எண்ணம் என்னவெனில், ஆண்டவர் உருவாக்கிய சபை அமைப்பை முழுமையாக்காமல் விட்டு விட்டார் என்பதாகும். மேலும் அவருடைய ஜனங்கள் இந்த அமைப்பு சம்பந்தமாக தன்னுடைய சொந்த ஞானத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார் என்றும் எண்ணுகிறார்கள். பலதரப்பட்ட மனதுடைய அநேக மனிதர்கள் அதிக அல்லது குறைவான கண்டிப்புடன் கூடிய அமைப்புகளை விரும்பியிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள், பலதரப்பட்ட முறைகளில், குறைந்த அல்லது கண்டிப்பான முறையில் தங்கள் சபையை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். மேலும் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சபை பிரிவோ அல்லது ஆளுகை செய்யும் விதமோதான் மேன்மையானது என்று கூறுகிறார்கள். இது தவறானது. உலகம் உண்டாவதற்கு முன்னரே, தன்னுடைய புது சிருஷ்டியை முன்னறிந்த தேவன், தன்னுடைய சொந்த ஜனங்கள் தன்னுடைய சொந்த வேலையைக் குறித்த அவருடைய சித்தத்தைப்பற்றிய தெளிவான நோக்கம் இல்லாதபடிக்கும், அவரவருடைய நலனுக்கென தகுதியான அமைப்பு இல்லாமல் விட்டுவிடும்படிக்கும் தேவன் கரிசனையற்றவராக இருந்திருப்பார் என்று நினைப்பது நியாயமானதல்ல. மனிதனுடைய மனது ஒருபுறம் அராஜகத்திற்கு நேராக இருக்கும் அல்லது





மறுபுறம் கடினமான அமைப்பு அல்லது அடிமைத்தனத்தை நோக்கியிருக்கும். திவ்விய ஒழுங்கானது இந்த இரண்டு உச்ச அளவையும் தவிர்த்து அடிமைத்தனத்திற்கு ஏதுவான எல்லாவற்றையும் தவிர்த்து வெளிப்படையாக சாதாரணமாகக் காணப்படும் ஓர் ஒழுங்கு முறையை புது சிருஷ்டிக்குக் குறிப்பிடுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்மையிலேயே வேதம் கட்டளையிடுகிறதாவது: ‘‘ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்’’ என்பதாகும். (கலா. 5:1)

இந்த திவ்விய ஒழுங்கை முன்னால் வைக்கும்போது, நாம் நம்மை முற்றிலுமாக திவ்விய முறைகளுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலருடைய நாட்களிலே ‘‘விழுந்து போகுதல்’’ முன்னால் சொன்னபடியே கிரியை செய்யத் துவங்கிவிட்டது என்பதையும், அப்போஸ்தலர்கள் மரித்த பின்னர் துரிதமாக இது முன்னேறி முதலாவது போப்பாண்டவரின் ஒழுங்கு முறையில் முடிவடைந்தது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வேதாகமத்தில் கூறப்பட்ட கருத்தில் கொள்ளும்போது, புதிய ஏற்பாட்டில் உள்ள குறிப்புகளோடு அதே மாதிரியாக நியாயப்பிரமாணத்தின் கீழாக இருந்த ஒழுங்குகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் அந்த மாதிரிகள் இந்த சுவிசேஷ யுகத்திலுள்ள காரியங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதாக மாத்திரமல்ல, வருகின்ற ஆயிர வருட அரசாட்சியின் ஒழுங்கு முறைகளையும் மாதிரியாகக் காட்டியது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, நாம் பார்த்திருக்கிறபடி மீட்பரின் நாளும் அதன் கிரியையும் இந்த சுவிசேஷ யுகத்திற்கு பிரதிநிதித்துவம் அளிப்பதாக இருந்தது. அந்த நாளிலே பிரதான ஆசாரியன் தன்னுடைய மகிமையான வஸ்திரங்களை உடுத்தவில்லை, ஆனால் சாதாரணமாக பரிசுத்த வஸ்திரங்களை அல்லது சணல்நார் வஸ்திரம் அணிந்திருந்தான். இந்த சுவிசேஷ யுகத்தில் ஆண்டவரோ அல்லது சபையோ ஒரு முக்கியமான இடத்தையோ அல்லது மனிதரின் பார்வையில் மகிமையான இடத்தையோ ஆக்கிரமிக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக அப்படிச் செய்தார்கள்; அவர்கள் எடுத்துக்கொண்ட நிலையானது சாதாரணமானது, ஆனால் சணல்நார் வஸ்திரம் தூய்மையையும் நீதியையும் காட்டுவதாக இருக்கிறது; சபையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தலையாயிருக்கிற ஆண்டவரின்

நீதியைக் காட்டுவதாக உள்ளது. பாவ நிவாரண நாளுக்குப் பின்னரே பிரதான ஆசாரியன், தன்னுடைய மகிமையான வஸ்திரங்களை உடுத்தினான்; அது ஆயிர வருட அரசாட்சியின்போது கிறிஸ்துவின் அதிகாரத்தையும் வல்லமையையும் காட்டுகின்ற மகிமைகளுக்கும், கனத்திற்கும் அடையாளமாக இருந்தது. அந்த மகிமைகளில் சபையானது அதனுடைய ஆண்டவரோடுகூட இணைத்துக் காட்டப்பட்டுள்ளது; ஏனெனில் பிரதான ஆசாரியனின் தலை நம்முடைய கர்த்தருக்கும் ஆண்டவருக்கும் அடையாளமாக காட்டப் பட்டிருக்கிறபடியே, ஆசாரியனின் சரீரம் சபைக்கு அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது. மேலும் மகிமையான வஸ்திரங்கள், அதன்படியே மேன்மைப் படுத்தப்படும் காலம் வரும்போது, முழு இராஜரீக ஆசாரியத்துவத்தின் கம்பீரத்திற்கும் கனத்திற்கும் அடையாளமாக இருக்கும். போப்புக்கள் கிறிஸ்துவின் ஆட்சியானது அவர்களால் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படுகிறது என்று பொய்யாகக் கூறிக்கொள்வதுடன், போப்புக்கள் ஆண்டவரின் பிரதிநிதிகள் என்றும், மேலும் கார்டினல்கள் (cardinals), ஆர்ச் பிஷப்புக்கள் (arch bishops ), பிஷப்புக்கள் ( bishops) மகிமையிலும், வல்லமையிலும் சபையின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் என்றும் பொய்யாக கூறுகிறார்கள். இதனால் அவர்கள் சமுதாய, மத சம்பந்தமான கட்டுப்பாட்டை உலகத்தார்மேல் செலுத்தும்படியாக முயற்சித்து, அவர்கள் பதவியினிமித்தம் அணிகின்ற அலங்காரமான வஸ்திரங்களினால், தெரிந்தெடுக்கப்பட்ட புது சிருஷ்டிக்குரிய மகிமைகளையும், கம்பீரங்களையும் தங்களுக்கென எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையான இராஜரீக ஆசாரியர்கள் இன்னமும் பலியாகிய வெண்வஸ்திரங்களை அணிகிறார்கள்; மாத்திரமல்ல சபையின் உண்மையான ஆண்டவருக்குக் காத்திருக்கிறார்கள்; மேலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் கடைசி அங்கத்தினர் பலியில் தனது பங்கை நிறைவேற்றி முடிக்கும் வரை ''மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும்'' உயர்த்தப்படுவதற்காகக் காத்திருக்கிறார்கள்.

சபை துன்புறுத்தப்படுதல் மற்றும் பலியின் காலத்திற்கான சட்டதிட்டத்திற்கும் சபை அமைப்பைக் குறித்து உள்ள நம்முடைய வழி நடத்துதலுக்கும் நாம் குறிப்பாக புதிய ஏற்பாட்டைத்தான் பார்க்க வேண்டும். சட்ட திட்டங்கள் ஒரு கச்சிதமான முறையில்





அளிக்கப்படவில்லை என்பதால், அவை ஒரு முழுமையான முறைமை என்பதை கண்டுகொள்வதிலிருந்து நாம் பின்வாங்கிவிடக்கூடாது. பிரமாணங்களைப்பற்றிய நம்முடைய இயல்பான நெறிதவறிய எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக நாம் போராட வேண்டும்; அதோடு தேவனுடைய குமாரர்களாகிய சபைக்கு ''பூரணப் பிரமாணமாகிய சுயாதீன பிரமாணம்'' கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் இனி ஒருபோதும் வேலைக்காரர்களல்ல, ஆனால் புத்திரராயிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் புத்திரருக்குரிய சுயாதீனத்தை உபயோகிக்க கற்றுக்கொள்ள வேண்டும்; அதன்படியாக குறிப்பாக பிரமாணத்திற்கும், அன்பின் நியமங்களுக்கு அவர்களுடைய முழுமையான கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும்.

அப்போஸ்தலர் நமது மனங்களுக்கு முன்னால் ஒரு புது சிருஷ்டியின் படத்தை வைக்கிறார்; அது முழு விஷயத்தையும் விளக்குகிறது; அந்தப் படம் ஒரு மானிட உருவத்தைக் குறிக்கிறது. அதன் தலை ஆண்டவரையும், பல்வேறு சரீர அங்கங்கள் சபையையும் குறிக்கிறது. 1கொரி. 12 ஆம் அதிகாரத்தில் இந்த விஷயம் அருமையாக விளக்கப்படிருக்கிறது. ''சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அனேகம், ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அனேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கிறார் (ஒரு சரீரம் அல்லது கூட்டம், அனேக அங்கங்களை உள்ளடக்கியது). எல்லோரும் (யூதரானாலும், புறஜாதியாரானாலும் அடிமையானாலும், சுயாதீனரானாலும்) ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்.'' அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகையில் ஒரு மானிட சரீரம் நன்றாக இருப்பது அதன் அங்கங்கள் எல்லாம் பொதுவாக ஒன்றோடொன்று ஒற்றுமையிலும், ஒரு மனதுடனும், கூட்டுறவுடனும் இருப்பதைப் பொறுத்தது என்று நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார், அதோடுகூட கிறிஸ்துவின் சரீரமான சபையோடும் அப்படியே இருக்கிறது என்கிறார். ஒரு அங்கம் வேதனையையோ, அல்லது தாழ்மையையோ அல்லது அவமானத்தையோ அனுபவித்தால் எல்லா அங்கங்களும் விரும்பியோ, விரும்பாமலோ பாதிக்கப்படுகின்றன. மேலும் ஓர் அங்கம் விசேஷமாக ஓர் அளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டால், அல்லது ஆறுதல்படுத்தப்பட்டால், அல்லது புத்துணர்வு ஊட்டப்பட்டால், எல்லா அங்கங்களும் அந்த ஆசீர்வாதத்தில் பங்கு பெறுகின்றன. அவர் (23ம் வசனம்) நம்முடைய

இயற்கையான சரீரத்தின் பலகீனங்கள், கறைகள் போன்றவைகளை மூடவும் மறைக்கவும் முற்படுகிறோம் என்றும், மேலும் அவைகளிலிருந்து விடுதலை பெற உதவி செய்கிறோம் என்றும் கூறுகிறார்; அதே போன்று கிறிஸ்துவின் சரீரமான சபையும் இருக்க வேண்டும்–அதிகமாக கறைபட்ட அங்கங்கள் அதிகமான பராமரிப்பைப் பெற்று, இரக்கத்தினாலும் அன்பினாலும் மூடப்படல் வேண்டும் என்றும், ''சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படி,'' மிகவும் தாழ்மையுள்ள அங்கத்திற்கும் அதிக கனத்துக்குரிய அங்கத்திற்கும் ஒரே அளவில் கரிசனை காட்டப்பட வேண்டும் – என்றும் குறிப்பிடுகிறார். (வச. 24)

இதன்படியாக, ஆண்டவருடைய அமைப்பாகிய சபையானது உண்மையாகவே முழுமை உள்ளதாக இருக்கிறது; அது இயல்பில் இருக்கிறபடியே கிருபையிலும் இருக்கிறது; எங்கெல்லாம் அமைப்பானது முழுமையாக உள்ளதோ அங்கெல்லாம் சிம்புகளும் காயம் கட்டும் துணியும் குறைவாய் காணப்படும்; ஒரு மரமானது நுனியிலிருந்து வேர்வரை நன்றாக அமைந்து ஒன்றாக நிலைத்து இருக்கிறது; ஆனால் அதன் கிளைகள் வெளிப்படையான கட்டுகளினால் அல்லது கயிற்றினால் அல்லது திருகு ஆணியினால் அல்லது எழுத்தில் உள்ள சட்ட திட்டங்களினால் நிற்கவில்லை; அப்படியாகத்தான் கிறிஸ்துவின் சரீரமான சபையும் இருக்கிறது; ஆண்டவர் கொடுத்திருக்கிற பிரகாரம் சரியாகப் பொருத்தி ஒற்றுமைப்படுத்தி இணைக்கப்பட்டிருந்தால் எல்லா அவயவங்களையும் ஒன்றாக நிறுத்தும்படி கயிறுகளுக்கும், ஆப்புக்களுக்கும், திருகு ஆணிகளுக்கும் தேவையிருக்காது; அவைகளை ஒன்றாகக் கொண்டுவரும்படியாக அல்லது நிலைநிறுத்தும்படியாக சட்டதிட்டங்களுக்கோ, சமயக் கோட்பாடுகளுக்கோ அவசியம் இருக்காது; ஒரே ஆவி ஐக்கியத்தின் இணைப்பாக இருக்கிறது. உயிர் இருக்கும்வரை, ஒற்றுமை, சரீரத்தின் ஒரே தன்மையும் நிலைத்திருக்க வேண்டும். தேவனுடைய ஆவி நிறைந்திருப்பதைப் பொறுத்து இது ஒரு உறுதியான அல்லது பெலவீனமான ஐக்கியமாக இருக்கும்.

அப்போஸ்தலர் தொடர்ந்து, தேவனே ஏற்படுத்திய புது சிருஷ்டி என்ற அமைப்பின் காரியங்களுக்கு அவரே அதிகாரியாக இருக்கிறார் என்று சுட்டிக் காட்டுகிறார். அவருடைய வார்த்தைகளாவன: ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள்.





தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவிதமான பாஷைகளையும் ஏற்படுத்தினார்.'' அவருடைய வசனத்தின்படியும் ஆவியின்படியும் நடத்தப்படுபவர்கள், வழி நடத்துதலுக்காக அவரை நோக்கி பார்ப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மத்தியில்தான் இந்த காரியங்களுக்கு அதிகாரியாயிருப்பவர்களை வைத்திருக்கிறார் என்பது அவருடைய வாக்குத்தத்த மாயிருக்கிறது. தங்களையும், ஒருவருக்கொருவரையும் சபையில் மகிமை, கனம், நம்பிக்கை, ஊழியம் போன்ற ஸ்தானங்களுக்கு அமர்த்திக்கொள்ளும் அநேகருக்கு, இது ஒரு புதிய சிந்தனையாகக் காணப்படும்.

இது புரிந்து கொள்ளப்படுமென்றால் எவ்வளவு குறைவானவர்கள் பிரதான ஆசனங்களை நாட ஓடுவார்கள், மாத்திரமல்ல கனம் உள்ள பதவிகளுக்காக அரசியலில் காணப்படுகிறபடி செல்வாக்கைப் பயன்படுத்திப் பார்ப்பார்கள். உண்மையான சபையின் மேல் உள்ள திவ்விய பராமரிப்பை உணர்ந்து கொள்வது என்பது, முதலாவது சாதாரண பெயர் அளவில் உள்ள ஸ்தாபனங்களிலிருந்து உண்மையான சபையைக் கண்டு பிடிப்பதுதான். அதன் பிறகு உண்மையான சபையின் எல்லா ஒழுங்கு முறைகள், ஊழியங்கள், ஊழியக்காரர்களைக் குறித்த திவ்விய சித்தத்தைப் பணிவோடும் பயபக்தியோடும் தேடுவதாகும்.

அப்போஸ்தலர் கேட்கிறார்: ''எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா?'' அவர் கூற்றின்படி பொதுவாக இவ்விஷயம் இப்படியாகப்பட்டதல்ல என்று ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் அவர் இதில் ஏதாவது ஒரு பதவியை நிரப்புவதில் தெய்வீக நியமனத்தை நிரூபிக்கிற வகையிலும், மனிதனை பிரியப்படுத்துகிற மாதிரியாக இல்லாமல் சபையின் மாபெரும் மேற்பார்வையாளராக இருக்கிற அதன் தலைமையானவராகிய ஆண்டவரைப் பிரியப்படுத்துகிறதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் சபையில் காணப்படுகிற இந்த வித்தியாசங்கள் இயற்கையான சரீரத்தில் உள்ள அங்கங்களுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்திற்கு ஒத்திருக்கிறது என்றும், ஒவ்வொரு அங்கமும் அவசியமாயிருக்கிறபடியால் ஒன்றும் உதாசீனப்படுத்தப்படக் கூடாது என்ற கருத்துக்கு நமது கவனத்தை ஈர்க்கிறார். கண்ணானது

காலைப்பார்த்து எனக்கு வேண்டுவதில்லை என்றும், காதைப் பார்த்து எனக்கு வேண்டுவதில்லை என்றும், கையானது எனக்கு வேண்டுவதில்லை என்றும் கூற முடியாது. ''எல்லாம் ஒரே அவயவமாயிருந்தால் சரீரமெங்கே?'' ஏனென்றால், ''சரீரமும் ஒரே அவயவமாய் இராமல் அநேக அவயவங்களாக இருக்கிறது.'' (வச.19,14)

உண்மைதான், இப்பொழுது சபையிலே இதே மாதிரியான பல்வேறு அங்கங்கள் இல்லை. எப்படியெனில் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியபடி ''அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.'' அப்படியாகத்தான் அற்புதங்களும் இருந்தன. ஆவியின் வரங்களைக் கொடுக்கும் வல்லமையை பெற்றிருந்த அப்போஸ்தலர்களும், அவர்களிடமிருந்து அந்த வரங்களைப் பெற்றவர்களும் மரித்தபோது, இந்த அற்புதங்களும், வரங்களும் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி சபையில் ஓய்ந்துவிட்டது. இருந்தபோதிலும், சபையில் ஒவ்வொரு மனிதனுக்கும், ஸ்திரீக்கும் ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும், கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ள உடன் அங்கத்தினர்களுக்கும் சேவை செய்யும் தருணம் அவனவன் இயற்கையான திறமைக்கு ஏற்ப அளிக்கப்படும். இந்த அற்புதங்கள் ஓய்ந்துபோனபோது, சத்தியத்தை அறிகிற கல்வியும், ஆண்டவரைப்பற்றிய அறிவும், ஆவியின் கிருபைகளும் அவைகளின் இடங்களைப் பிடித்துக்கொண்டன. சுகமாக்குதல், அந்நிய பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், அற்புதங்கள் போன்ற சாதாரண வரங்கள் சபையில் இருந்த போதும் அப்போஸ்தலர் சகோதரரிடத்தில் ''முக்கியமான வரங்களை நாடுங்கள்'' என்று உற்சாகப்படுத்தினார்.

அப்போஸ்தல ஸ்தானத்தை அவர்கள் நியாயமாக நாடவோ எதிர்பார்க்கவோ முடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் பன்னிருவர் மாத்திரமே; ஆனுல் அவர்கள் நாடவேண்டியது அல்லது வாஞ்சிக்க வேண்டியது தீர்க்கதரிசிகளாக (விளக்குகிறவர்களாக– வியாக்கியானம் பண்ணுகிறவர்களாக) இல்லையெனில் போதகர்களாக இருக்கும்படியாக மட்டுமே. அப்போஸ்தலர் மேலும் ''இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்'' என்று கூறுகிறார்; (வச. 31) தொடர்ந்து அவர், இந்த வரங்களில் மேலானது அல்லது சபையில் ஊழியம் செய்வதைக்காட்டிலும் மேலான கனமுள்ளது, அதிக அளவில் மேலான அன்பின் ஆவியை உடைமையாக்கிக் கொள்வதுதான் என்று காட்டுகிறார்;





அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் சபையில் பரிபூரண அன்பை உடைய தாழ்மையுள்ள அங்கத்தினர், ஆண்டவருடைய பார்வையில், அன்பு என்னும் கிருபையில் குறைவுபட்டுள்ள எந்த ஒரு அப்போஸ்தலர் அல்லது தீர்க்கதரிசி, அல்லது போதகரைக்காட்டிலும் மேலான இடத்தை அடைந்து விட்டார் என்பதாகும்; அவர் கூறும்போது, வரங்கள் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும் அன்பில் குறைவு பட்டால் ஆண்டவருடைய பார்வையில் முழு விஷயமும் முற்றிலும் திருப்தியற்றதாகவும் காணப்படும். ஒருவர் பூரண அன்பின் நிலைக்கு வராவிட்டால் அந்த நிலைக்குக் குறைந்த பட்சம் முயற்சி பண்ணியிருந்தாலொழிய ஆண்டவருடைய ஆமோதிப்பைப் பெற்று, சபையில் அப்போஸ்தலர், அல்லது தீர்க்கதரிசி அல்லது போதகர் என்ற நியமனத்தை வெகுகாலம் தக்கவைத்துக் கொள்ளமுடியாது என்பதை உண்மையாகவே நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். இல்லையெனில் அவர் நிச்சயமாக அந்தகாரத்திற்குள் மெல்ல மெல்ல செல்ல அனுமதிக்கப்படுவார், இல்லையெனில் ஒருவேளை சத்தியத்தை போதிப்பவராக இல்லாமல் தப்பறைகளைப் போதிப்பவராக, சாத்தானின் வேலைக்காரராக சகோதரரை சலிக்கும்படியாக அனுமதிக்கப்படுவார்.

எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் (எபே. 4:1–16) அப்போஸ்தலர் பவுல் இந்த பாடத்தை இப்படியாக வலியுறுத்துகிறார்; சபையின் ஒருமைப்பாடு, ஒரே சரீரம் அநேக அவயவங்களை உடையதைப் போல் இருக்கிறது; அது ஒரு தலையாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பு என்னும் ஒரே ஆவியினால் இணைக்கப்பட்டிருக்கிறது; இப்படிப்பட்ட அவயவங்கள் எல்லாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான் களாக நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாய் இருங்கள் என்று புத்திமதியாகக் கூறுகிறார். இந்த அதிகாரத்தில் சரீரத்தின் பல்வேறு அங்கங்கள் அதற்குரிய விசேஷமான வேலைகளுக்கென நியமிக்கப்பட்டிருக்கின்றன என்றும், அதன் குறிக்கோள் என்ன என்றும் பின்வருமாறு கூறுகிறார். ''மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் (அவர்கள் மகிமையான ஊழியத்திற்கு, அல்லது ஆயிரம்

வருட இராஜ்யத்தில் ஊழியத்திற்கு ஆயத்தம் பண்ணும்படியாக) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனி........ அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகின்றவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.'' ( எபே 4:11–16.)

நமக்காக அப்போஸ்தலர் வரைகின்ற படத்தைக் கவனிக்கிறோம்; அது மானிட உருவத்தைக் குறித்ததாகும், உருவம் சிறியதாகவும் பூரண வளர்ச்சி பெறாததாகவும் இருக்கிறது. எல்லா அவயவங்களும் பூரண வளர்ச்சி பெற வேண்டும், முழு பலத்தையும், வல்லமையையும் பெற வேண்டும், ''பூரண புருஷராக'' வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்று அவர் அறிவிக்கிறார். இப்படியான படம் சரியான விதத்தில், முழுமையான நிலைமையில் சபை இருப்பதைக் காட்டுகிறது என்கிறார். அந்த உருவத்தை, காலாகாலமெல்லாம் கடந்து இந்த யுகத்திற்குக் கொண்டுவரும் போது, ஒரு அவயவத்திற்கு பிறகு இன்னொன்றாக முதலாவது உயிர்த்தெழுதலில் உன்னதமான அமைப்பான ஆயிரம் வருட காலை வேளையை எதிர்பார்த்து நித்திரை அடைந்ததையும், அந்த இடம் தொடர்ந்து நிரப்பப்பட்டதால் சபையானது ஒரு போதும் முழுமை இல்லாமல் இருந்ததில்லை என்பதையும், இருந்தாலும் சில சமயங்களில் ஒரு அவயவத்தில் அதிக பெலனும் இன்னொன்றில் அதிக பெலகீனமும் இருக்கக் கூடும் என்பதையும் காண்கிறோம். இருந்த போதிலும், எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு அவயவத்தின் முயற்சி தன்னால் இயன்றவரை சரீரத்தை பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்; மேலும், '' நாம் அனைவரும் ...........விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகும் வரை'' அவயவங்களை பெலப்படுத்தவும், ஆவியின் கிருபைகளில் பூரணம் அடையும்படி செய்யவும் வேண்டும்.

விசுவாசத்தின் ஒருமைப்பாடு என்பது வாஞ்சிக்கப்படத்தக்கது. அதை முயற்சியினால் பெறவேண்டும். இருந்தபோதிலும் அது பொதுவாக





நோக்கப்படுகிற ஒருமைப்பாடு போன்றதல்ல. விசுவாசமானது, ''பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைப்'' போன்று, பரிசுத்தத்திலும் எளிமையிலும் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு அங்கத்தினரும் சிறு விஷயங்களைக் குறித்து பல்வேறு கருத்துக்களை உடையவர்களாயிருக்க முழு சுயாதீனம் இருக்க வேண்டும். இதில் அவர்கள் மனுஷீக யூகங்கள், அல்லது தத்துவங்களின்படி கட்டளைகளைப் பெறக்கூடாது. வேதாகமத்தின்படியான ஒருமைப்பாடு என்பது சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து இருக்கிறது.

(1) நம்முடைய மீட்பு விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலமாகவும், நாம் அதிலே காட்டுகிற விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுமாக இருக்கிறது.

(2) நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதல், ஆண்டவருக்கென்று பிரித்தெடுத்தலும், சத்தியமும், அதனாலுண்டான ஊழியமும், சகோதரருக்கான ஊழியமும் உள்ளடங்கியதுமாயிருக்கிறது.

(3) மேற்கூறிய முக்கியமானவைகளைக் கொண்டுதான் ஒற்றுமை வேண்டப்படல் வேண்டும், இவையல்லாமல் வேதத்தின்படியான ஐக்கியம் இருக்க முடியாது. இருந்த போதிலும், திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு விசேஷ அம்சத்தையும், விபரத்தையும், பார்க்கும்படியாக வாஞ்சிக்கவும், மற்றவர்கள் பார்க்க உதவி செய்யும்படியாகவும், மற்ற விஷயங்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் முழு சுயாதீனம் அளிக்கப்படல் வேண்டும். இப்படியாக கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினரான ஒவ்வொருவரும் தன்னுடைய சுயாதீனத்தை தக்க வைத்துக் கொண்டு, இதன்படியாக தலைக்கும் அதன் எல்லா அங்கங்களுக்கும் முற்றுமாக விசுவாசமுள்ளவராக இருக்கிறபடியால், அவர்கள் தனக்கென உள்ள எல்லாவற்றையும் விட்டுவிடவும், தன் ஜீவனையே கொடுப்பதும் சந்தோஷமான காரியமாக இருக்கும்.

நாம் ஏற்கனவே அப்போஸ்தலர்களின் விசேஷ வேலையையும், அவர்கள் ஒரு அளவான எண்ணிக்கையிலேயே இருந்தார்கள் என்றும், இன்றைக்கும் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையின் மூலமாக அவரின்

வாயாக இருந்து அவருடைய ஜனங்களோடே பேசுகிறதனால், அவர்களுடைய ஊழியம் சபையில் இன்றும் நடக்கிறதைப் பார்க்கிறோம். இப்பொழுது நாம் பொது சபைக்குக் கொடுக்கப்பட்ட ஆண்டவருடைய வரங்கள் என்று அப்போஸ்தலர்கள் குறிப்பிடுகிற மற்ற சபை ஊழியங்களைக் குறித்து ஆராய்ந்து பார்க்கலாம்.

பொது சபையானது ஆசீர்வதிக்கப்படும்படியாகவும், தற்காலத்திலும், நித்தியகாலத்திற்குரிய நன்மைகளைப் பெறுவதற்காகவும் ஆண்டவர் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர் களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் தருகிறார். ஆண்டவரை தலையாகவும், போதகராகவும், அவருடைய சரீரமாகிய சபையின் வழிகாட்டியாகவும், எண்ணி ஆண்டவர் மேல் ஊக்கத்துடன் சார்ந்து இருப்பவர்கள், இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் அவருடைய வரங்களைக் கவனித்து எதிர்பார்த்து நோக்கியிருக்க வேண்டும். அவர்களுக்கு அவருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் இருக்குமென்றால், அந்த வரங்களை ஏற்கவும், உபயோகிக்கவும் முடியும். இந்த வரங்கள் சபையின் மேல் பலவந்தப்படுத்தப்படுவதில்லை, அவைகள் கொடுக்கப்படும் போது உதாசீனப்படுத்துபவர்கள், அதற்கேற்றபடி ஒரு இழப்பை அனுபவிப்பார்கள். ஆண்டவர் ஆரம்பத்திலேயே இவைகளைச் சபையில் வைத்து, இப்படியாக நமக்குப் பொருத்தமான ஒழுங்கு முறையைக் கொடுத்து, அதன்படியாக அவருடைய ஜனங்கள் நடந்து, அதற்கேற்றபடியான ஆசீர்வாதம் பெறுகிற காரியத்தை அவருடைய ஜனங்களிடத்திலேயே விட்டுவிட்டார்; அல்லது இந்த ஒழுங்கு முறையை ஒதுக்கிவிட்டு அதற்கேற்றபடியாகக் கஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் அனுபவிப்பதை அவர்களிடத்திலேயே விட்டுவிட்டார். ஆகவே, ஆண்டவரால் வழி நடத்தப்படவும், அவரால் போதிக்கப்படவும் வாஞ்சிக்கிறவர்களாகிய நாம், எப்படி ஆதியிலே அவர் பல்வேறு அங்கங்களை வைத்தார் என்பதையும், அக்காலத்திலிருந்து இந்த மாதிரியான வரங்களில் எவைகளை அவருடைய ஜனங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் கற்றுக் கொள்ளும்படியாக நாம் நாட வேண்டும்; இதன் மூலமாக நம் பட்சத்திலிருக்கும் இப்படியான குணாதிசயங்களை உடைய வரங்களை நாம் அறியலாம்; எதிர்காலத்திற்கென்று அதிக வைராக்கியத்துடன் அவைகளை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.





சரீரமான சபையில் அபிப்பிராய பேதங்கள், பிரிவுகள், பிரிவினைகள் இல்லாது இருப்பது ஆண்டவருக்கு விருப்பமானது என்று அப்போஸ்தலர் கூறுகிறார் . மனுஷீக முறைமைகளில் பிரிவினைகள் தவிர்க்க இயலாததாகும். ஆனால் போப்பரசின் வெற்றிகரமான காலத்தின் போது, பெயரளவுக்கு இருந்த ஒழுங்குமுறை வலிமை பெற்று, அதனோடு முற்றுமாய் ஒத்துப் போகாதவர்களை ஒடுக்குவதில் கடுமையான முறைகளைக் கையாண்டது. அது பலவந்தத்தினால் ஏற்பட்ட ஒற்றுமையாகும்; அது வெளிப்புறமான ஒற்றுமையே தவிர இருதயத்தின் ஒரு ஒற்றுமையல்ல. குமாரனால் விடுதலையாக்கப் பட்டவர்கள் ஒருபோதும் இதய பூர்வமாக இப்படிப்பட்ட சங்கமங்களில் பங்கேற்க முடியாது; இப்படிப்பட்டவைகளில் தனிமனிதனின் சுயாதீனம் முற்றிலுமாக அழிக்கப்படுகின்றது. புராட்டஸ்டன்ட் (protestants ) சபைப் பிரிவுகளில் உள்ள கஷ்டம், அவர்கள் அதிகப்படியான சுதந்திரத்தினால் அனேக சிறு சிறு சபைகளாகப் பிரிந்துவிட்டன என்பதல்ல, அதற்கு மாறாக தாய் ஸ்தாபனம் ஒரு காலத்தில் சுயாதீன சிந்தனையை அடக்கவும் ஒடுக்கவும் உபயோகித்த அதிகாரத்தைத் தவிர, தாய் ஸ்தாபனத்தின் அதிகமான ஆவியை இன்னும் அவைகள் கொண்டுள்ளன. இப்பொழுது எங்கும் காணப்படுகின்ற அதிகபட்சமான பிரிவினைகளையும் பிளவுகளையும் கொண்டிராதபடி, கிறிஸ்துவின் சபைக்கு உண்மையான தேவை என்னவெனில், ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் எல்லா விதமான மனுஷீக கட்டுகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள் போன்றவை களிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக நிற்கும் அதிகமான சுயாதீனம்தான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடிமைத்தனத்தின் நுகத்திலிருந்து ஆண்டவர் உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலை கொண்டு, (கலா. 5:1; யோவா. 8:32) ஆண்டவருடன் விசுவாசத்திலும், வசனத்திலும் இணைக்கப்பட்டு இருக்கும்போது, வேதாகமம் கற்பிக்கிற ஆதியிலுண்டான ஒற்றுமை, எல்லா உண்மையான ஆண்டவரின் பிள்ளைகளிடத்திலும், புது சிருஷ்டியின் எல்லா அங்கங்களிடத்திலும் வெகு துரிதமாகக் காணப்படும்; அவர்களும் இதே மாதிரியாக சுயாதீனமாயிருக்கிற ஒவ்வொரு அங்கத்திற்கு நேராக ஈர்க்கப்படுவார்கள், மாத்திரமல்ல உலக ஒழுங்குகள், மற்றும் சமுதாயத்தினால் கட்டப்பட்டுள்ள மனிதர்களைக் காட்டிலும், அதிக வலிமையுடன் ஒருவரோடு ஒருவராக அன்பின் கயிற்றினால் கட்டப்படுவார்கள். ''கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது.'' (எங்களை ஒன்றாக வைத்திருக்கிறது – youngs - யங்ஸ் என்பவரின் வேத அகராதி) 2 கொரி. 5:14.

ஆரோனின் குடும்பத்தினர் எல்லோருமே ஆசாரியத்துவத்திற்கு தகுதி உள்ளவர்களாய் இருந்தார்கள்; இருந்த போதிலும், இந்த ஊழியத்தில் சில வரம்புகள், தடைகள், தகுதியின்மைகள் இருந்தன; அதுபோலவே உண்மையான ''இராஜரீக ஆசாரியத்துவத்திலும்'' இருக்கிறது. எல்லோருமே ஆசாரியர்கள்தான், எல்லாருமே அபிஷேகம் பண்ணப்பட்ட சபையின் அங்கத்தினர்கள்தான்; மேலும், ''கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார், தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்'' என்று எழுதியிருக்கிறபடி, அபிஷேகமானது ஒவ்வொருவருக்கும் பிரசங்கிக்கவும், நற்செய்தியைக் கற்றுக்கொடுக்கவும் ஒரு முழுமையான அதிகாரத்தை குறிப்பிடுகிறது. இந்த வார்த்தைகள் விசேஷமாக கிறிஸ்துவின் தலை, புது சிருஷ்டி, இராஜரீக ஆசாரியத்துவத்திற்குப் பொருந்துமென்றாலும் அவைகள் எல்லா அங்கத்தினர்களுக்கும் பொருந்துகிறதாயிருக்கிறது. ஆகவே, பொதுவாக தேவனுடைய பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படி ஒரு முழு அதிகாரம் அல்லது நியமனம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ''நம்மை அந்தகாரத்தினின்று, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக'' கொடுக்கப்பட்டிருக்கிறது. (1பேது. 2:9)

ஆனால், நிழலான ஆசாரியர்கள் சில குறிப்பிட்ட கறைதிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களாயிருக்க வேண்டும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியிருக்க வேண்டும் என்றிருந்தபடியே, இராஜரீக ஆசாரியத்துவத்திலும் பொதுவான ஊழியத்திற்கென்று மற்றவர்கள் அடைந்திருக்கிற தகுதியில் குறைவுபடுகிறவர்கள் சிலர் இருக்கின்றனர். ''உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.'' (ரோம. 12:3,6) அப்படியே எல்லா அவயவங்களும், ஒவ்வொரு அவயவத்தின் இயற்கையான, ஆவிக்குரிய தகுதிகளையும், அடைந்திருக்கிற நிலைமையையும் கவனத்தில் கொண்டு, அதன்படியாக திவ்விய சித்தத்தை நிதானிக்க வேண்டும். நிழலில் வயது ஒரு காரணமாயிருந்தது; ஆனால், இது நிஜமான ஆசாரியர்களிடத்தில், அனுபவத்தையும் குணாதிசயத்தை அபிவிருத்தி





செய்வதையும் குறிக்கிறது. நிழலில் மாறுகண் என்கிற கறை, நிஜமான ஆசாரியத்துவத்தில் தீர்க்கமான மனதில்லாதிருப்பதையும், ஆவிக்குரிய விஷயங்களைக்குறித்துத் தெளிவான எண்ணம் இல்லாதிருப்பதையும் குறிக்கும். இது சபையின் பொது ஊழியத்திற்குப் பெரிதான ஒரு தடையாக இருக்கும். அதுபோலவே நிஜமான ஆசாரியத்துவத்திற்குத் தடையாயிருந்த பலவிதமான கறைதிறைகள், நிழலாயிருந்த ஆசாரியத்துவத்தின் மத்தியில் காணப்பட்ட பலவிதமான ஒழுக்கக் கேடுகள், சரீரப்பிரகாரமான மற்றும் உலகப்பிரகாரமான குறைபாடுகள் ஆகியவைகளைக் குறிக்கும்.

இருந்த போதிலும், நிழலில் குறைபாடுள்ள ஆசாரியர்கள் மற்றவர்களுக்குரிய எல்லா சலுகைகளையும்– சமூகத்து அப்பத்தைச் சாப்பிடுவது, பலி செலுத்துவது போன்றவைகளை அனுபவித்தார்கள்; அதுபோலவே நிஜத்தில் நமக்குள்ளேயும் இருக்கிற அப்படிப்பட்ட குறைபாடுகள், கிறிஸ்துவின் சரீரமான சபையின் ஒரு அங்கம், சபையின் பொது ஊழியக்காரனாயும், சத்தியத்தின் ஊழியக்காரனாயும் இராதபடி தடைபண்ணவும், அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியிலும், ஆண்டவருடைய ஆவிக்குரிய போஜனத்திலும், கிருபையின் சிங்காசனத்திலும், மற்றவர்களைப்போன்றே அவனுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்று அறியப்படாதபடி தடை பண்ணவும் அவசியமில்லை. பிரதான ஆசாரியனின் அலுவல்களை, ஒருவன் சரீரப்பிரகாரமாக குறைவுள்ளவனாயிருந்து, குறிப்பட்ட வயதை அடையாதவனாயிருந்தால், அவனால் நிறைவேற்ற முடியாது; அது போன்றே, ''திருவசனத்திலும் உபதேசத்திலும்'' சத்தியத்தின் ஊழியக்காரனாக ஊழியம் செய்பவர்கள், கற்றுக் குட்டிகளாக இருக்கக் கூடாது; ஆனால் சபையின் அங்கத்தினர்களாக (அங்கங்களாக) அவர்கள் இருக்கும் போது, அவர்களது குணாதிசயத்தில் உள்ள முதிர்ச்சி, அறிவு, மேலும் ஆவியின் கனிகள் அவர்களை இப்படியான ஊழியத்திற்கு தகுதிப்படுத்தும். இப்படிப்பட்டவர்கள் மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படவேண்டும்; ஆனால் மூப்பர்கள் வயதில் மூத்தவர்களாக இருக்கவேண்டும் என்பதில்லை, ஆனால் சத்தியத்தைப் பொறுத்தவரையில் முதிர்ச்சி பெற்றவர்களாக, மேலும் ஆலோசனை சொல்லக் கூடியவர்களாக, ஆண்டவருடைய திருவசனத்தின்படியாக சகோதரரை சீர் பொருந்தப்பண்ணுகிறவர்களாக இருக்கவேண்டும்.

மூப்பர் என்கின்ற வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்ளும்போது, சத்தியத்தின் ஆவிக்குரிய ஊழியங்கள் செய்கின்ற அனைவரையும் வேதாகமம் மூப்பர்கள் என்று அழைப்பது சரியானதே என்றும், அப்படி இல்லாத பட்சத்தில் அவர்கள் ஒரு அப்போஸ்தலராக அல்லது தீர்க்கதரிசியாக, அல்லது சுவிசேஷகராக, அல்லது போதகராக, அல்லது மேய்ப்பராகப் பணியாற்றிக்கொண்டிருப்பார்கள் என்றும் உணருகிறோம். இந்த ஊழியங்களில் ஏதாவதொன்றை ஒருவர் செய்வதற்கு, அவர் சபையில் மூப்பர் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விதமாக அப்போஸ்தலர்கள் தங்களை மூப்பர்கள் என்று அறிவித்தார்கள். *(1 பேது. 5:1 ; 2 யோவா.1)* மேலும் சபையின் ஊழியக்காரர்களைக் குறித்தும் (வேலையாட்கள்) அவர்கள் தெரிந்துகொள்ளப்படுதலைக் குறித்தும் நம்முடைய பொதுவான மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் அவர்கள் மூன்று விதமான பெயர்களால் குறிப்பிடப்படுகிறார்கள்.

## கண்காணிகள், மூப்பர்கள், மேய்ப்பர்கள்

பல்வேறு சபை பிரிவுகளில் இந்த மூன்று சொற்களும் தவறாக உபயோகிக்கப்படுவதால் தவறான அர்த்தத்தைக் காட்டுகிறது; ஆகவே கண்காணி என்கிற வார்த்தை மேற்பார்வையாளர் என்றுதான் பொருள்படுகிறது என்று நாம் விளக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது; ஆகவே நியமிக்கப்பட்ட ஒவ்வொரு மூப்பரும் ஒரு சிறிதான அல்லது பெரிதான ஒரு வேலையை மேற்பார்வையிடுகிறவர் என்று அங்கீகரிக்கப்பட்டார். இவ்விதமாக உதாரணமாக ஒரு முறை அப்போஸ்தலர் எபேசு சபையின் மூப்பர்களால் சந்திக்கப்பட்ட போது, அவர் பிரிவின் அறிவுரையாக ''பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்'' என்று கூறினார். *(அப். 20:28 )*

இருந்த போதிலும், ஆண்டவருடைய அனுக்கிரகத்தினால், இந்த மூப்பர்களில் சிலருக்கு சபையில் ஒரு விஸ்தாரமான செல்வாக்கு, அல்லது மேற்பார்வை கொடுக்கப்பட்டதினிமித்தம், அவர்களைப் பொதுவான மேற்பார்வையாளர்கள் என்று அழைப்பது பொருத்தமாயிருக்கும். எல்லா அப்போஸ்தலர்களும் இப்படியாக இருந்தார்கள். ஆசியாவிலும் (Asia Minor) தெற்கு ஐரோப்பாவிலும், பொதுவாக புறஜாதி தேசங்களில்





ஆரம்பிக்கப்பட்ட சபைகளில் பவுலுக்கு அதிக விஸ்தாரமான மேற்பார்வைக்கான வாய்ப்பு இருந்தது. ஆனால் இந்த பொதுவான மேற்பார்வை என்ற நிலைமை அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் என்றில்லை, ஆண்டவர் தன்னுடைய அனுக்கிரகத்தினால் இப்படியாக சபையில் ''இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும் தீர்க்கமான மனதை உடையவனுமாயிருந்து,'' ஆண்டவருக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்ய வாஞ்சையுடைய அநேகரை எழுப்பினார். முக்கியமாக தீமோத்தேயு, அப்போஸ்தலர் பவுலுக்குக்கீழ், அவருடைய பிரதிநிதியாக அமர்த்தப்பட்டார்; அவர் ஆண்டவருடைய ஜனங்களுடைய பல்வேறு கூட்டங்களுக்கு அல்லது சபைகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டார். ஆண்டவர் அன்று இருந்தது போலவே இன்றும் அவருடைய விருப்பத்தின்படி, தொடர்ந்து இப்படிப்பட்ட மேற்பார்வையாளர்களை அனுப்பி, அவருடைய மந்தைக்கு ஆலோசனையும், அறிவுரையும் கூற வல்லவராக இருக்கிறார். ஆண்டவருடைய ஜனங்களும், இப்படியான மேற்பார்வையாளர்களால் அளிக்கப்படும் ஆலோசனையின் தராதரத்தை நிறுத்துப்பார்க்க முற்றிலும் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள். அது தேவ பக்தியுள்ள வாழ்க்கையினால், தாழ்மையான நடத்தையால், தியாகம் செய்யும் ஆவியால், கனத்தையும் இழிவான ஆதாயத்தையும் தேடும் முயற்சிகளும் தவிர்க்கப்பட்டு, சாட்சி பகருகிறதாயிருக்க வேண்டும். மேலும் போதனைகள் ஆழமான வேதபாடங்களின் சோதனைக்கு நிலைநிற்க வேண்டும். எப்படியெனில் அனுதினமும் வேதத்தை ஆராய்ந்து பார்த்து, அவர்களால் அளிக்கப்பட்ட போதனைகள் திருவசனத்தின்படி ஒத்துள்ளதா என்று பார்க்க வேண்டும். இது நாம் பார்த்தவண்ணமாக அப்போஸ்தலருடைய உபதேசங்கள் ஒத்துப்பார்க்கப்பட்டன, அவர்கள் விசேஷமாக அதிகமாகக் குற்றம் கண்டு பிடிக்காதவர்கள், குறை கூறாதவர்களாக, ஆனால் இப்படியாக ஜாக்கிரதையாக இருந்த சகோதரருக்கு அழைப்பு விடுத்து அவ்வாறு செய்து பார்க்குமாறு வேண்டினார்கள். *(அப்.16: 11)*

இருந்தபோதிலும், சபையின் சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொண்டது: போட்டி மனப்பான்மையும், பதவி ஆசையும், எளிமையான பயபக்தி மற்றும் தியாக மனப்பான்மையின் இடத்தை எடுத்துக்கொண்டன; உடனே நம்பிவிடும் தன்மையும், முகஸ்துதியும் வேதாகம ஆராய்ச்சியைக் காட்டிலும் முக்கியத்துவம் பெற்றன; இதனிமித்தமாக மேற்பார்வையிடுகிறவர்கள் படிப்படியாக சர்வாதிகாரம்

பெற்றார்கள்; படிப்படியாக அப்போஸ்தலர்கள் போன்றவர்களோடு சமநிலை வேண்டினார்கள்; கடைசியில் அவர்களிடையே ஒரு போட்டி வந்து, அவர்களில் சிலர் முதன்மை ஸ்தானத்தைப் பெற்று ஆர்ச் பிஷப் என்ற பட்டங்களின் மூலம் அறியப்பட்டார்கள். இப்படியிருக்க, இந்த ஆர்ச் பிஷப்புகளின் மத்தியிலும் எழுந்த போட்டியினால், அவர்களில் ஒருவர் போப் என்ற நிலைக்கு உயர்ந்த வழி வகுத்தது. அதே மனப்பான்மைதான் போப்பரசில் மாத்திரமல்ல, அதனுடைய உதாரணத்தினால் ஏமாற்றப்பட்டு, வழிநடத்தப்பட்டவர்கள் மத்தியிலும் வந்து புராதன காலத்தில் உள்ள ஒழுங்குமுறைகளின் எளிமையிலிருந்து வெகு தூரத்திற்கு கொண்டு சென்றுவிட்டது. இதன் விளைவாக, இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட ஒரு ஒழுங்குமுறை (சபை), புராதன காலத்தில் காணப்பட்டதுபோல, சபை பிரிவு பெயரில்லாமலும், கனமும் மகிமையும் இல்லாமலும், எண்ணிக்கையில் சிறு தொகையினர் பெரும்பான்மையோர் மீது அதிகாரம் செலுத்தாமலும், குருகுல வகுப்பார், சபையார் என பிரிவினை இல்லாமலும் இருக்கக்கூடிய ஒரு சபை, அப்படிப்பட்டது ஒரு சபையே கிடையாது என்று கருதப்படுவதை காண்கிறோம். இருந்தாலும் இப்படி தாழ்வாக எண்ணப்படுபவர்கள் மத்தியில் நம்முடைய நிலையை எடுத்துச்சென்று, புராதன சபையின் உதாரணத்தை கடைப்பிடிப்பதும், அதனால் காணப்பட்ட இதே மாதிரியான சுயாதீனங்களையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பதும் நமக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

சபையின் மூப்பர்கள், எல்லாருமே மேற்பார்வையிடுகிறவர்களும், பொறுப்பு வைப்பவர்களும், சீயோனின் நலன்களை கவனிப்பவர் களாகவும், சிலர் அதே இடத்திலும், சிலர் பொதுவான, ஆனால் பரந்த கருத்தின்படியாக அப்படி இருக்கிறார்கள். அப்படியே ஒவ்வொருவரும் தன்னுடைய தாலந்தின்படியும், திறமையின்படியும், மந்தைக்கு ஊழியம் செய்யலாம். ஒருவர் தனது தகுதியின்படி, தனது நிலை அனுமதிக்கிறபடி, நற்செய்தி போன்றவைகளை கேட்கக் கூடிய காதுள்ளவர்களை கண்டுகொண்டு ஒரு சுவிசேஷகனாக, ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு சத்தியத்தை பிரசங்கித்துச் செல்லலாம். இன்னொருவர் அவருக்கு சமுதாயத்தை பார்க்கிற விசேஷமான தகுதியிருப்பதால், தனிப்பட்ட முறையில், தனிநபர் என்ற முறையில் ஆண்டவருடைய ஜனங்களின் நலன்களைப் பார்க்கும்படியாக, அவர்களை அவர்களுடைய வீடுகளில் சந்திப்பது, அவர்களை உற்சாகப்படுத்துவது, அவர்களை திடப்





படுத்துவது, அவர்களை ஐக்கியத்தில் வைத்திருப்பது, ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்களிலிருந்து அவர்களை பாதுகாப்பது போன்ற காரியங்களின் மூலம் பாஸ்டர் (மேய்ப்பர்) என்ற முறையில் மந்தைக்கு ஊழியம் செய்யலாம். ''தீர்க்கதரிசிகளுக்கும்'' ஊழியத்திற்கென அவர்களுக்கு விசேஷமான தகுதி இருக்கிறது.

''தீர்க்கதரிசி'' என்ற வார்த்தை, பழங்காலங்களில் உபயோகப் படுத்தப்பட்டது போல இன்றைக்கு பொதுவாக உபயோகப் படுத்தப்படுவதில்லை. ஆனால் அது வருங்கால காரியங்களை முன்கூட்டியே சொல்லக்கூடிய ஒருவரைக் குறிக்கிறது. இருந்தாலும் தீர்க்கதரிசி என்கின்ற வார்த்தையை சரியானபடி சொல்ல வேண்டுமென்றால் ஒரு சிறந்த பேச்சாளர் அல்லது நாவன்மையுள்ளவரைக் குறிக்கிறது. தரிசனங்களைக் காண்கின்றவரும் அல்லது வெளிப்பாட்டைப் பெறுகிறவரும்கூட ஒரு தீர்க்கதரிசியாக இருக்கலாம், அதை அறிவிக்கிறவரும் அப்படி கருதப்படலாம். இருந்தாலும் இரண்டுமே துல்லியமாக வித்தியாசமானவைகள். மோசேயையும் ஆரோனையும் எடுத்துக்கொண்டால் மோசேதான் உயர்ந்தவர். ஏனெனில் அவர் திவ்விய பிரதிநிதியாக இருந்தார், ஆனபடியால் தேவன் அவரிடத்தில் சொன்னார்: ''பார், உன்னை நான் பார்வோனுக்குத் தேவனாக்கினேன், உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான்'' –பேசுகிறவராக, வாயாக இருப்பான். (யாத். 7:1) ஒரு விதத்தில் அப்போஸ்தலர்களில் பலர் வரப்போகின்ற காரியங்களை முன்கூட்டியே காண்கிறவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்; வரப்போகிற காரியங்களைக் குறித்த ஒரு அறிவு அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தது; அவர்கள் அனேகரும் தீர்க்கதரிசிகளாகத்தான் இருந்தார்கள் என்று நாம் கூறுகிறோம்; அதாவது அவர்களில் பேதுருவும் பவுலும் சிறந்த பொதுப் பேச்சாளர்களாக அல்லது தீர்க்கதரிசிகளாக இருந்தனர். ஆனாலும் அனேக சிறந்த பொதுப் பேச்சாளர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் இருந்தனர் என பார்க்கிறோம், உதாரணமாக பர்ணபாவைச் சொல்லலாம். மேலும் ''யூதா, சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாக இருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்தி சொன்னார்கள்'' (அப். 15:32) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எந்த ஒரு நபரும் செய்யப்பட வேண்டிய வேலைக்கு தகுதியற்றவர் என்று தீர்மானிக்கப்படும்போது, அந்த நிலைமைக்கு அவர் விசேஷமான பொருத்தம் இல்லாதவராக இருக்கும்போது, அவர் ஆண்டவரின் நியமனம்

பெற்றவர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வேதாகமத்தில் ஆதாரம் கிடையாது. ஆனால் அதற்குப் பதிலாக, ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய தாலந்தின்படி, திறமையின்படி மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்பது கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்திற்கு ஒரு கடமையாகும். ஒவ்வொருவரும் ஆண்டவர் தனக்கு அளித்துள்ள தாலந்துகளின் உண்மையான மதிப்பின் பிரகாரமாத்திரமேயன்றி, அதற்கு மேலாக ''தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்'' நிதானத்துடன் நினைக்கும்படி அடக்கமுடன், தாழ்மையுடன் இருக்க வேண்டும். சபையும் கூட அப்படியாக பெரியவர்களாக இருக்க எண்ணுபவர்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதற்கு மாறாக அவர்கள் மூப்பராக இருப்பதற்கோ, அல்லது எந்த ஒரு பகுதியிலாவது ஊழியம் செய்வதற்குத் தாழ்மை முக்கியமான தகுதிகளில் ஒன்று என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, இரண்டு சகோதரர்கள் ஒரே அளவு தாலந்துகளை உடையவர்கள்போல் காணப்பட்டால், அவர்களில் ஒருவர் முன்னேற வேண்டும் என்ற எதிர்நோக்குடனும், மற்றவர் தாழ்மையுடனும் எளிமையுடனும் இருக்கும்போது, ஞானமும் தெளிந்த புத்தியும் என்று அழைக்கப்படுகின்ற தேவ ஆவி, ஆண்டவருடைய ஜனங்களுக்கு, தாழ்மையுள்ள சகோதரனை அதிக முக்கியமான ஊழிய ஸ்தானத்தில் வைக்க ஆண்டவர் விரும்புவார் என்பதைக் கற்றுக்கொடுக்கும்.

ஆண்டவருடைய மந்தையில் வெள்ளாடுகளும், வெள்ளாடு போன்ற செம்மறியாடுகளும் முதன்மையான இடத்திற்கு ஆசைப்படுகின்றன; எஜமானனுடைய சத்தத்தை அறிந்து கொள்ளக்கூடிய, அவருடைய ஆவியை அறிந்திருக்கிற, அவருடைய சித்தத்தை செய்யும்படியாக வாஞ்சிக்கிற உண்மையான ஆட்டை விட, அப்படியாக காணப்படுகிற வெள்ளாடுகளையும் வெள்ளாடு போன்ற செம்மறியாடு களையும் முதன்மையான இடத்தை எடுத்துக்கொள்ளும்படி சுலபமாக அனுமதிப்பதும் சரியானது அல்ல என்று தோன்றுகிறது. எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பது நல்லதுதான், ஆனால் சமாதானத்துக்கென்று ஆண்டவருடைய திருவசனத்தையும், ஆவியையும் உதாசீனப்படுத்துவது நிச்சயமாக தீமையையே விளைவிக்கும். எல்லோரும் செம்மறியாட்டைப்போன்று சாதுவான சுபாவம் உடையவர்களாயிருப்பது நல்லதுதான்; ஆனால் செம்மறியாட்டிற்குரிய குணாதிசயமும் தேவையான ஒன்று, அப்படியில்லா விட்டால் அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக





முடியாது; அவர்களுக்கு நல்ல குணாதிசயம் இருந்தால், அவர்கள் பிரதான மேய்ப்பனின் வார்த்தையை நினைவு கூறுவார்கள். அவருடைய திருவசனம் சொல்கிகிறது: ''என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது ( அதற்கு கீழ்ப்படிகின்றன)..... அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது.'' ''அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்கு பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம்.'' (யோவா. 10:5,27) ஆகவே, ஒவ்வொரு சகோதரனையும் உள்ளூர் சபைக்கோ, அல்லது பொதுசபைக்கோ ஒரு மேற்பார்வையாளராக்குவதற்கு முன்பாக அந்த சகோதரனின் தூதையும், நடத்தையையும் கவனித்துப் பார்ப்பது ஒவ்வொரு ஆட்டினுடைய கடமையாகும். முதலாவது அவனுக்குச் சபையில் மூப்பராவதற்குத் தகுதி உள்ளதா என்றும், அவன் சுவிசேஷத்தின் அடிப்படை உபதேசத்தில் – பாவநிவாரணம், இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் உண்டான ஈடுபலி ஆகியவற்றில் – தேறினவனா என்றும், அவனுக்கு முழு அர்ப்பணிப்பு இருக்கிறதா என்றும், அவனுடைய தூது, அவனுடைய சகோதரர்கள் அவனுடைய ஊழியம் என்பவைகளைக் குறித்தும் தீர்க்கமாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள், ஆவியிலும் நன்னெறியிலும் பலவீனமுள்ள எல்லா ஆட்டுக்குட்டிகளின் மேலும் இரக்கமும் அனுதாபமும் உடையவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட குணமில்லாதவர்களை அவர்களுடைய தலைவர்களாக அல்லது மூப்பர்களாக தெரிந்து _கொள்வது திவ்விய ஒழுங்கு முறைக்கு ஊறு விளைவிப்பதாகும். சபையில் ஒரு முக்கிய இடத்திற்கும், அதிகாரத்திற்கும் முயற்சிக்கிற வெள்ளாடுகளுக்கும், ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டு வருகிற ஓநாய்களுக்கும் அவர்கள் இரக்கம் காட்டக்கூடாது.

தங்களுடைய இருதயங்களை நிச்சயமாக தேவனுடைய அன்புக்கு நேராக வழி நடத்தாமல், தந்திரமாக தவறான வழியில் கொண்டுசெல்லும் பொன் போன்ற நாக்குடைய (பேச்சுத்திறமையுடைய) ஒருவர் தலைவராக சபையில் இருப்பதைக் காட்டிலும், சபைக்கென ஒரு பொது ஊழியக்காரர் கூட இல்லாதிருப்பது சபைக்கு மிகவும் நல்லது என்று எண்ணப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்களைக் குறித்து, நம்முடைய ஆண்டவர் முன்கூட்டியே சபையை எச்சரித்திருந்தார். இதைத்தான் அப்போஸ்தலர் பின் வருமாறு கூறுகிறார். ''உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களை தங்களிடத்தில் (தந்திரமாக மற்றவர்களை தன் பக்கமாக) இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் (தவறான, தவறான வழிக்கு

நடத்துகிற உபதேசங்கள்) போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.'' அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார், ''அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.'' (அப். 20:30; 2பேது. 2:2)

இன்று நாம் அதைக் காண்கிறோம். அநேகர் இராஜ்யத்தின் நற்செய்திகளைப் பிரசங்கிக்காமல் தங்களையே பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் சீடர்களை, ஆண்டவருடைய சரீரமான சபைக்கு ஈர்த்து ஆண்டவருடன் மாத்திரமே இணைக்காது, சீடர்களைத் தங்கள் பக்கமாகவும், தங்கள் சபைப் பிரிவுகளுக்கும் நேராக ஈர்க்கிறார்கள்; சபையின் எல்லா அங்கங்களும் நேரடியாக ஆண்டவரையே தங்கள் தலைவராக நோக்கும்படி செய்யாமல், அவர்களே சபைகளின் தலைவர்களாக இருக்க பிரயத்தனம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாரிடமிருந்து நாம் விலக வேண்டும்; உண்மையான ஆடு அவர்களுடைய தவறான வழிக்கு எந்த ஆதரவும் கொடுக்கக் கூடாது. இப்படிப் பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். ''தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.'' (2தீமோ. 3:5) அவர்கள் நாட்கள், முறைகள், சடங்காச்சாரங்கள், சபை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் போன்றவைகளை கடுமையாகக் கைக்கொள்ளுவார்கள். இப்படிப் பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் அவர்கள் மனிதருக்குள் மேன்மையாக எண்ணப்பட்டாலும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானவர்கள் என்று கூறுகிறார். உண்மையான ஆடு உண்மையான மேய்ப்பனின் சத்தத்தை அறிந்து கொள்ளுவதில் ஜாக்கிரதையாயிருந்து அவரைப் பின்பற்றுவது மாத்திரமல்ல, தங்கள் சுயநலனையே தேடுபவர்களுக்கு, உதவி செய்யாமலும் உற்சாகப்படுத்தாமலும் இருக்க மாத்திரமல்ல, பின்பற்றாமலும் இருக்க நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சபையில் மூப்பராயிருக்கத் தகுதியுள்ளவர் என்கிற நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிற ஒவ்வொருவரும், இதற்கு முன்பதாகவே, இப்படிப்பட்ட நம்பிக்கையை நிரூபிப்பதற்கு முன்பதாகவே சபைக்கு நன்று அறிமுகமாயிருக்க வேண்டும். ஆகவேதான் ''கற்றுக்குட்டியாக'' இருக்கக் கூடாது என்கிறார். ஒரு கற்றுக்குட்டி பெருமிதம் அடைந்து இதனால் ஆண்டவரை விட்டு வழி விலகவும், சரியான ஆவியின்றியும், இராஜ்யத்திற்குச் செல்லுகின்ற





குறுகலான பாதையை விட்டு வழி விலகி சபைக்கு ஊறு விளைவிப்பது மாத்திரமல்லாது, தனக்கும் ஊறு விளைவித்துக் கொள்வர்.

அப்போஸ்தலராகிய பவுல், யார்யாரெல்லாம் சபையின் மூப்பர்களாகச் சரியாகத் தெரிந்து கொள்ளப்படலாம் என்பதைக் குறித்து வெகு தெளிவான ஆலோசனையைக் கூறுகிறார். (1தீமோ. 3:2; 5:17; 1தெச. 5:12; யாக். 5:14) அவர் அவர்களுடைய குணாதிசயம் போன்றவைகள் எப்படிப்பட்டவைகளாக இருக்க வேண்டும் என்பதையும் விளக்கமாக கூறுகிறார். இந்த விஷயத்தைக் குறித்து, தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், (1தீமோ. 3:1–7) சற்று வேறு விதமாக மறுபடியும் கூறுகிறார். இன்னொரு மேற்பார்வையாளராக இருந்த தீத்துவுக்கு அவர் எழுதும்போது சபைக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்து விபரமாகக் கூறுகிறார். (தீத். 1:5–11) அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த விஷயத்தைக்குறித்து எழுதும்போது, ''உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும் ......நான் புத்தி சொல்லுகிறதென்னவெனில், உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனத்தோடும், சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்.'' (1பேது. 5:1–3)

அவர்கள் அந்நியரை உபசரிக்கிறவர்களாகவும், குற்றம் சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும் தன் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தனது பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும்; ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை அவனால் விசாரிக்க முடியாது. அவன் இரு நாக்குள்ளவனாய் இருக்கக் கூடாது; மாத்திரமல்ல, ஏமாற்றுகிறவனாயும், சண்டை போடுகிறவனாயும் வாக்குவாதம் பண்ணுகிறவனாயும் இருக்கக் கூடாது; சபைக்கு வெளியே இருக்கிறவர்களிடத்திலும் அவன் நன்மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும்; உலகம் பரிசுத்தவான்களை எப்பொழுதும் நேசிக்கும் அல்லது பாராட்டும் என்று அல்ல, ஆனால் குறைந்தபட்சம் உலகமானது அவர்களுடைய நேர்மையைக் குறித்தும், நீதிமானாய் இருப்பதைக்குறித்தும், ஒழுக்கத்தைக் குறித்தும், உண்மையைக் குறித்தும் இழிவானதொன்றையும்

சொல்ல இயலாமல் இருக்க வேண்டும். சபையில் இந்த எண்ணிக்கை அளவில்தான் மூப்பர்கள் இருக்க வேண்டும் என்று வரையறுக்கப் படவில்லை.

மேற்கூறிய தகுதிகளோடு கூட, ஒரு மூப்பன் போதிக்க சமர்த்துள்ளவனாய் இருக்க வேண்டும். அது எப்படியெனில் அவர் ஒரு ஆசிரியராக, விவரித்துச் சொல்பவராக, திவ்விய திட்டத்தை வியாக்கியானம் பண்ணத் திறமையுள்ளவராக இருந்து, இப்படியாக ஆண்டவருடைய மந்தைக்கு வசனத்திலும், உபதேசத்திலும் உதவி புரிகிறவராக இருக்க வேண்டும். மூப்பராயிருப்பதற்கு தாலந்தோ, அல்லது ''தீர்க்கதரிசி'' அல்லது சிறந்த பொது பேச்சாளர் என்கிற தகுதிகள் உள்ளவராக இருக்கவேண்டும் என்பதோ அவசியமில்லை. ஒரு மூப்பருக்குரிய தகுதிகளான கற்றுக்கொடுக்கும் திறமை, போதகத்திறமை, இன்னும் மற்ற தகுதிகளுடைய அனேகர் அதே சபையில் இருக்கலாம்; இருந்தபோதிலும், அவர்களில் எவருமே ஒரு பொதுப்பேச்சாளருக்குரிய திறமையோ அல்லது திவ்விய திட்டத்தை எடுத்துக்கூறக்கூடிய திறமையோ இல்லாதவர்களாக இருக்கலாம். தேவைப்படுகிற இப்படியான ஊழியக்காரரை எழுப்பும்படியாக ஆண்டவரை நம்ப வேண்டும்; ஒருவருமே கிடைக்காவிட்டால் உண்மையாகவே தேவை உள்ளதா என்கிற சந்தேகம் எழும்பலாம். இங்கே நாம் குறிப்பிட விரும்புகிறதென்ன வென்றால், நல்ல விருந்தியடைந்த சபைகள் சிலவற்றில், பொதுப்பேச்சாளருக்கு அதிகமான வாய்ப்பு இருப்பதில்லை. இதனிமித்தமாக இப்படிப்பட்ட இடங்களில் வேத பாடங்கள் கட்டாயம் வேண்டும் என்பதற்காக நடத்தப்படாமல் கடமைக்காக நடத்தப்படுகின்றன. வேதாகமம் தெளிவாகக் காட்டுகிறபடி ஆதி சபையில் கூட இது வழக்கமாக இருந்தது. மேலும் எல்லாரும் கூடி வந்தபோது சரீரமான சபையில் தாலந்துகள் பெற்றிருக்கிற பல்வேறு அங்கங்களுக்கு, அவர்களது தாலந்துகளை உபயோகிக்கும்படியாக, ஒருவர் பேசவும், மற்றவர் ஜெபிக்கவும், எல்லோருமே பாடாவிட்டாலும், அநேகர் பாடவும் ஒரு தருணம் அளிக்கப்பட்டது. அனுபவம் காட்டுகிறபடி, இந்தவிதமான ஒழுங்கை நன்கு பின்பற்றுகிற ஆண்டவருடைய ஜனம் அதிகமான அளவுக்கு ஆசீர்வாதத்தைப் பெறுவதுடன் மிக உறுதியான குணாதிசயங்களையும் அபிவிருத்தி பண்ணிக்கொள்ளுகிறார்கள். ஒரு தனி நபர் தன்னுடைய திறமையை நன்றாக உபயோகித்து, எப்படி நன்றாக பேசினாலும், அது எவ்வளவு





நல்லதாக இருந்தாலும், அது சாதாரணமாக காதினால் கேட்கப்பட்டு, இருதயத்தில் அவ்வளவாக பதியாததுபோல், நன்றாக நடத்தப்பட்ட வேதபாட வகுப்பிலும் நிச்சயமாக இருக்கக் கூடும்; ஆகையால் அதில் எல்லோருமே பங்கெடுக்கும்படி உற்சாகப்படுத்தப்படல் வேண்டும்.

மற்ற மூப்பர்கள் சமர்த்தனாயில்லாதபோது, அவர்கள் ஜெபத்திலும், சாட்சி கூறுகிற கூட்டங்களிலும், தங்களுடைய ஆரம்ப நிலையில் இருக்கலாம். ஆண்டவருடைய ஜனங்கள் கூடிவருகின்ற பல்வேறு கூட்டங்களில் இது ஒரு விசேஷ அம்சமாக இருக்க வேண்டும். புத்தி சொல்லுகின்ற தாலந்து தனக்கு இருக்கிறது என்று உணருகிற ஒருவர் அதை செயலற்றவிதத்தில் விட்டுவிடாதபடி உபயோகிக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் தனக்கு விசேஷமான ஒரு தாலந்து இல்லாதிருக்கும்போது அதை உபயோகிக்கும்படி முயற்சி செய்யவும் கூடாது. அப்போஸ்தலர் கூறுகிறார்: ''புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுவதிலும் தரித்திருக்கக் கடவன்.'' அவன் தன்னுடைய திறமையையும், சேவையையும் அதற்கென்று கொடுக்கட்டும். ''போதிக்கிறவன்( விளக்கிச் சொல்லும் திறமையுள்ளவன்– சத்தியத்தை எளிமையாகக் கூறக்கூடியவன்) போதிக்கிறதிலும் தரித்திருக்கக்கடவன்.''

பிஷப் அல்லது கண்காணி என்ற வார்த்தைக்கு அதிகமான அர்த்தம் உள்ளது போன்றே போதகர் என்ற வார்த்தைக்கும் உள்ளது. ஒரு மூப்பரைத் தவிர வேறு எவரும் போதகராக, அல்லது மேற்பார்வையாளராக அல்லது மேய்ப்பராக இருப்பதற்குத் தகுதியுள்ளவரல்ல. ஒரு போதகர் அல்லது மந்தையின் மேய்ப்பர்தான் மந்தையை மேற்பார்வையிடுகிறவர் ஆகும். இந்த இரண்டு வார்த்தைகளுமே ஒரே அர்த்தம் உடையதாக இருக்கின்றன. வேத வாக்கியத்தின்படி கர்த்தராகிய யேகோவாதான் நம்முடைய பெரிய போதகராக அல்லது மேய்ப்பராக இருக்கிறார். *(சங். 23:1)* நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவுக்கும் எல்லா இடத்திலுள்ள மந்தைக்கும் மேய்ப்பராகவும் கண்காணியாகவும் இருக்கிறார். பொதுவான கண்காணிகளும், ''பிரயாண ஊழியக்காரர்களும்'' பொதுவான மந்தையின் நலனைப் பார்க்கிற மேய்ப்பர்களாக அல்லது போதகர்களாக இருக்கிறார்கள். மேலும், அந்தந்த இடத்தில் உள்ள ஒவ்வொரு மூப்பரும் ஒரு போதகராக, மேய்ப்பராக அல்லது கண்காணியாக அவரவரது தகுதிக்கேற்ப இருக்கிறார்கள். அப்படியென்றால் சபையில் உள்ள மூப்பர்கள்,

முதலாவது மூப்பராயிருப்பதற்குப் பொதுவான தகுதி உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இரண்டாவதாக, இயற்கையாகவே அவர்களுக்கு இருக்கின்ற விசேஷ தகுதிகள், எப்படிப்பட்ட ஊழியத்தில் ஆண்டவருக்காக அவர்கள் பயன்படுத்தப்படலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சிலர் சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியத்திலும், சிலர் ஏற்கெனவே சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட ஆடுகளின் மத்தியில் (ஏற்கெனவே அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் மத்தியில், ஏற்கெனவே மந்தையில் உள்ளவர்கள் மத்தியில்) மேய்ப்பனின் ஊழியத்திலும், சிலர் உள்ளூரிலும் , சிலர் வெளியூர் ஊழியத்திலும் ஈடுபடலாம்.

''நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராய் எண்ண வேண்டும்'' (1தீமோ. 5:17,18) என்று நாம் வாசிக்கிறோம். இந்த வசனத்தின் வலிமையைக் கருத்தில் கொண்டு, உலகப்பிரகாரமான சபை விசாரணை செய்யும் மூப்பர்கள் என்ற ஒரு வகுப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது சகோதரர் மத்தியில் சர்வாதிகார முறையில் இல்லாவிடினும் எல்லா மூப்பர்களுக்கும் ஒரு விசாரணை செய்யும் அதிகாரம் வேண்டும் என்று கோரியிருக்கிறது. இப்படியான ''விசாரணை'' செய்வது என்பது இந்த விஷயத்தைக் குறித்து வேதாகமத்தில் காணப்படுவதற்கு எல்லாம் எதிர்மாறாக உள்ளது. ஒரு பொதுவான மேற்பார்வையாளர் அல்லது மூப்பர் என்ற ஸ்தானத்தில் உள்ள தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார். ''முதிர் வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளாமல் அவனை ஒரு சகோதரனைப்போல பாவித்து புத்தி சொல்லு.'' ''கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்த குணமுள்ளவனாயிருக்க வேண்டும்.'' இங்கே அதிகார பூர்வ விசாரணையோ, அல்லது சர்வாதிகார தோரணையோ நிச்சயமாக அனுமதிக்கப்படவில்லை. மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படுகிறவர் களுக்கு முக்கியமான குணாதிசயங்களாக இருக்க வேண்டியவைகள் சாந்தம், நீடிய பொறுமை, சகோதர அன்பு, அன்பு ஆகியவைகளாகும். அந்த வார்த்தையின் பிரகாரம் மந்தைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் சர்வாதிகாரம் உடையவர்களாயிருந்தால், மந்தைக்கு உள்ள உதாரணம் அவர்கள் எல்லாரும் சர்வாதிகாரம் உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள் சாந்தம்,





நீடிய பொறுமை, பொறுமை, தயவு உள்ளவர்களாய், நேசிக்கிறவர்களாய் இருப்பார்களென்றால், எல்லோரும் பெற்றுக்கொள்ளுகின்ற உதாரணம் இப்படியாகத்தான் இருக்கும்.

## உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள்

கண்காணி என்கிற வார்த்தை மேற்பார்வையிடுகிறவர் என்றுதான் பொருள்படுகிறது; மேலும், அது ஒரு விதத்திலும் இருமாப்பாய் ஆளுகிறவர்களையோ அல்லது எஜமானனையோ குறிக்கவில்லை; ஆனாலும் படிப்படியாக மேற்கூறியபடி ஜனங்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. அதுபோலவே உதவிக்காரர் என்ற வார்த்தையும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது; உதவிக்காரர் என்ற வார்த்தை சரியான அர்த்தத்தின்படி வேலையாள் அல்லது ஊழியக்காரரைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் தன்னையும் தீமோத்தேயுவையும் ''தேவ ஊழியக்காரர்'' என்கிறார். (2கொரி. 6:4) இங்கே சொல்லப்படுகிற ஊழியக்காரர்கள் என்கிற வார்த்தை diakonos என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது, அது வேலையாட்களைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் மறுபடியும் கூறுகிறதாவது: ''புது உடன்படிக்கையின் ஊழியக்காரராய் இருக்கும்படி, அவரே எங்களை தகுதியுள்ளவர் களாக்கினார்.'' (2கொரி. 3:5,6) இங்கே diakonos என்கிற கிரேக்கப் பதம் ஊழியக்காரர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது வேலையாட்களைக் குறிக்கிறது. உண்மையாகவே அப்போஸ்தலர் கூறும்போது, தானும் தீமோத்தேயுவும் தேவனுடைய ஊழியக்காரர்களாய் (வேலையாட்களாய்) இருந்தோம் என்றும், மேலும் புதிய உடன்படிக்கையின் – புதிய ஏற்பாட்டின் கண்காணிகளாக (வேலையாட்களாய்) இருந்தோம் என்றும் கூறுகிறார். அப்படியென்றால், நாம் பார்க்கும்போது, சபையின் உண்மையான மூப்பர்கள் எல்லோரும் இப்படியாக உதவிக்காரர்களாகவும், தேவனுக்கும், சபைக்கும், சத்தியத்துக்கும் ஊழியக்காரர்களாகவும் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்கள் மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படவே கூடாது.

நாங்கள் ஆதி சபையில் ஊழியத்தைக் குறித்து எந்த விதமான வேறுபாடும் இருந்ததில்லை என்கிற யோசனையைக் கொடுக்க

விரும்பவில்லை. ஆனுல் இதற்கு மாறாகவே இருந்தது. இங்கே நாங்கள் சொல்லுகிற குறிப்பு என்னவெனில், சபையில் மூப்பர்களாக இருந்த அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் கூட உதவிக்காரர்களாய் அல்லது வேலையாட்களாய் இருந்தார்கள் என்பதாகும்; ‘‘உங்களில் பெரியவனாய் இருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்’’ என்று ஆண்டவர் கூறியபடியே இருந்தார்கள். (மத்.23:11) ஊழியக்காரரின் குணாதியசயமும், விசுவாசமும் புதுச் சிருஷ்டியின் சபையில் உள்ள எவருக்கும் கனத்தையும் மரியாதையையும் காட்டுகிற அளவுக்கு இருக்க வேண்டும். தாலந்துகள் போன்றவைகளால் தகுதியுள்ளவர்கள் என்று சொல்லக்கூடாத வேலையாட்கள் மூப்பர்கள் என்று அறியப்படும்படிக்கு, சபையில் இருந்தார்கள். அவர்கள் போதக சமர்த்தில், அல்லது அனுபவத்தில் குறைவுபட்டவர்களாய் இருந்தபடியால், சபையில் எந்த நியமனமும் பெறுவதோடுகூட, அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் (போதகர்கள்) அனேக சமயங்களில், சில பேரை அவர்களுடைய வேலையாட்களாக அல்லது உதவியாளர்களாகத் தெரிந்தெடுத்தார்கள். உதாரணமாக, பவுலும் பர்ணபாவும் ஒன்றாக இருந்தபோது அவர்கள் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானை சிறிது காலத்திற்கு அவர்களுடைய வேலையாளாக அல்லது உதவியாளராக வைத்திருந்தார்கள். மறுபடியும் பர்ணபாவும் பவுலும் பிரிந்தபோது பர்ணபா யோவானை கூட்டிச் சென்றார். பவுலும் சீலாவும் லூக்காவை தங்களுடைய உதவியாளராக கூட்டிச் சென்றார்கள். இந்த உதவியாளர்கள் தங்களை அப்போஸ்தலருக்கு சமமாகவோ அல்லது அவர்களைக் காட்டிலும் அதிக தாலந்துகளும் அனுபவமும் உள்ளவர்களுக்கு ஊழியத்தில் சமமாக இருப்பதாகவோ எண்ணவில்லை. ஆனால் அவர்களைத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணி, தேவனுக்கும் சத்தியத்திற்கும் ஊழியக்காரர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர் களுடைய வழிநடத்துதலுக்கு உட்பட்டு உதவியாளர்களாக அல்லது வேலையாட்களாக இருக்க கிடைத்த சிலாக்கியத்தில் களிகூர்ந்தார்கள். சபை தனது வேலையாட்கள் அல்லது உதவிக்காரரைத் தெரிந்து கொண்டது போல, அப்போஸ்தலர்களுக்கு இப்படி ஒரு ஊழியம் செய்வதற்கு அவர்கள் சபையினால் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அப்போஸ்தலர்கள் தங்களுக்கு வேண்டியவர்களைத் தாங்களே தெரிந்தெடுத்தார்கள். அது கட்டாயத்தினால் அல்ல, ஆனால் விருப்பத்தின்படியாகும். ஒரு வேளை





யோவானும் லூக்காவும் தங்களுக்கு இருந்த மற்ற எந்த வாய்ப்பைக் காட்டிலும், இப்படியாக ஆண்டவருக்கு நன்றாக ஊழியம் செய்ய முடியும் என்று நினைத்திருக்கக் கூடும் என்று நாம் யூகிக்கலாம். ஆகவே, அது அவர்களுடைய சுய விருப்பத்தின்படியே ஆயிற்று. மாத்திரமல்ல, எவ்விதமான கட்டாயம் இல்லாமல் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுடைய தாலந்துகளை வேறு எந்த வழியிலாவது அதிக உண்மையுடன் உபயோகித்திருக்கலாம் என்று நம்பியிருந்தால், அதே உரிமையுடன் அந்த ஊழியம் வேண்டாம் என்று கூறியிருக்கலாம்.

இருந்த போதிலும், உதவிக்காரர் என்கிற இந்த வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சரீரமான சபைக்கு உதவியாளராகவும் பிரயோஜனமாகவுமிருந்த ஒரு சகோதர வகுப்பினருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அதன்படியே அவர்கள் கனப்படுத்தப்பட்டார்கள்; ஆனால், அவர்கள் மூப்பர் பதவிக்கு மற்றவர்களைப் போன்று அவ்வளவாக தகுதி பெற்றிருக்கவில்லை. ஆனுலும், சபையில் ஒரு விசேஷமான ஊழியத்திற்கென்று அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது அவர்களது நல்ல ஒரு குணாதிசயத்தையும், சத்தியத்தில் அவர்களது விசுவாசத்தையும், ஆண்டவருக்கும் அவரது மந்தைக்கும் ஊழியம் செய்யும்படியாக அவர்களுக்குள்ள வைராக்கியத்தையும் குறிப்பதாக இருந்தது. இப்படியாக ஆதிகால சபையில் உள்ள எளியவர்களுக்கு உணவு போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் அந்த வேலையைச் செய்தார்கள்; ஆனால், பின்பு சிலர் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற முணுமுணுப்பு எழுந்தபோது, இந்த வேலைக்கென தகுதியான மனுஷரை உங்களுக்குள்ளேயே தெரிந்து கொள்ளுங்கள், எங்களுடைய நேரத்தையும், அறிவையும், தாலந்துகளையும் வேதவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திற்கென செலவழிப்போம் என்று அப்போஸ்தலர்கள் சொன்னபோது, அவர்கள் இந்த வேலையை விசுவாசிகளிடத்தில் ஒப்புவித்தார்கள். (அப்.6: 2–5)

ஏழு உதவிக்காரர்கள் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்பது நினைவிருக்கலாம்; அந்த ஏழு பேரில் ஒருவராயிருந்தவர் மரணபரியந்தம் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறபடியாக கனத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது நபரான ஸ்தேவான் ஆகும், பின்னர் இவர் முதலாவது இரந்த சாட்சியானார். ஸ்தேவான் சபையினால் தெரிந்து கொள்ளப்பட்டார் என்பதினிமித்தம், அவர் தனக்கு கிடைத்த

எல்லா தருணங்களிலும் எப்படியாவது வேத வசனத்தை போதிப்பதிலேயே கவனமாயிருந்தார். இப்படியாக புராதன காலத்தில் சபையில் இருந்த முற்றிலுமான சுயாதீனத்தைக் காண்கிறோம். முழுச் சபையானது, சபையின் அங்கமாயிருந்த எவரிடத்திலாவது தாலந்துகள் காணப்பட்டால், அவரை ஊழியம் செய்யும்படியாக கேட்டுக் கொள்ளலாம். ஆனால், அவர் அதை ஏற்றுக்கொண்டபோது அந்த வேண்டுகோள் அவரை ஒரு விதத்திலும் கட்டுப்படுத்த வில்லை, மாத்திரமல்ல அவருக்குக் கிடைக்கிற வேறு எந்த சந்தர்ப்பத்திலும் அவருக்குப் பிடித்தமான வழியில் அவருடைய தாலந்துகளைப் பிரயோகிப்பதைத் தடைபண்ணவில்லை. உதவிக்காரராய் இருந்த ஸ்தேவான், பந்தி விசாரிப்பில் உண்மையுள்ளவராய், சபையின் பண சம்பந்தமான காரியங்கள் போன்றவைகளைக் கவனித்துக்கொண்டபோது, ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டு, வேத வசனத்தை வெளிப்படையாக பிரசங்கிக்கும்படியாக, அவருடைய வைராக்கியத்தையும், தாலந்துகளையும் உபயோகிக்கும்படி சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டார். அவருடைய ஊழியம், சகோதரர்கள் அவருடைய திறமையை புரிந்து கொள்ளுவதற்கு முன்னரே ஆண்டவர் அவரை சபையில் ஒரு மூப்பராகத் தெரிந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்தியது. அவர் இன்னும் அதிக காலம் ஜீவித்திருந்தால், காலாகாலத்தில் அவர் மூப்பராவதற்கு இருந்த தகுதிகளையும், வேத வசனத்தை அவர் விளக்கிச் சொல்லக்கூடிய திறமையுள்ளவர் என்பதையும் அறிந்து கொண்டிருப்பார்கள்.

நாங்கள் இங்கே வற்புறுத்திச்சொல்ல விரும்புவது என்னவெனில், ஒருவர் தன்னுடைய திறமைக்கேற்ப, ஒருவேளை ஒரு சுவிசேஷகராக புது சிருஷ்டியின் சபையினால் நேரடியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது நியமிக்கப்படாதிருந்தாலும் தன்னுடைய தாலந்துகளை தன் விருப்பப்படி உபயோகிக்க ஒவ்வொருவருக்கும் முழு சுயாதீனம் இருந்தது என்பதேயாகும். (சபையினால் இந்த ஊழியத்திற்கென்று தெரிந்தெடுக்கப் பட்டிராவிடில் ஸ்தேவான் சபையில் போதிக்கத் தகுதியுள்ளவராக இருந்திருக்கமாட்டார்.) ஒரு தனி நபரின் மனசாட்சிக்கும், தாலந்துகளுக்கும் இருந்த முழுமையான சுதந்திரம், மேலும் தடை பண்ணும்படியாக எந்தவிதமான அதிகாரமோ அல்லது கட்டுப்பாடோ இல்லாதிருந்தது, ஆதிகால சபையில் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சமாயிருக்கிறது; இதை நாம் வார்த்தையிலும் செய்கையிலும்





பின்பற்றுவது மிகவும் நல்லது. சபைக்கு தகுதியுள்ள, திறமையுள்ள மூப்பர்கள் போதிப்பதற்கும், சுவிசேஷகர்கள் பிரசங்கிக்கவும் தேவைப்படுகிறார்கள். இவர்கள் தேவனுக்கும் சபைக்கும் ஊழியம் செய்பவர்கள், அவர்களுடைய ஊழியத்திற்கேற்ப அவர்கள் கனப்படுத்தப் படுகிறார்கள்; மூப்பர்களும், ஊழியக்காரர்களும் வார்த்தையிலும், போதனைகளிலும் ஊழியம் செய்வதினால், அவர்களுடைய ஊழியம் இன்னும் சற்று உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

## சபையில் போதகராயிருப்பவர்கள்

நாம் இப்போது பார்த்திருக்கிறபடி, போதக சமர்த்தனாயிருப்பது சபையில் மூப்பர்களாக அந்த நிலையில் அல்லது ஊழியத்தில் இருப்பதற்குத் தேவையான ஒரு தகுதியாகும். பரிசுத்த பவுலே, தன்னை ஒரு அப்போஸ்தலனாகவும், ஒரு மூப்பராகவும், வேலையாளாகவும், மாத்திரமல்ல ஒரு போதகராகவும் கூறிக்கொண்டதற்கு நாம் பல்வேறு பகுதிகளை வேதாகமத்திலிருந்து எடுத்துக்கூறலாம். பவுல் போதகராக பின் வருமாறு கூறினார்: ''நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசுகிறோம்.'' (1கொரி. 2:13) அவர் பாஷைகளையோ, கணிதத்தையோ, வான சாஸ்திரத்தையோ அல்லது எந்த விஞ்ஞானத்தையோ கற்றுக் கொடுக்கிற ஆசிரியராக இல்லாமல், ஆண்டவருடைய சுவிசேஷம், அல்லது நற்செய்திகள் குறிப்பிடுகிற ஒரு பெரிய விஞ்ஞானத்தைத் தவிர வேறொன்றையும் கற்றுக் கொடுக்கிறவராக இருந்ததில்லை. இப்பொழுது அப்போஸ்தலரின் மேற்கூறப்பட்ட வார்த்தையிலுள்ள முக்கியத்துவம் இதுதான். இதை ஆண்டவருடைய மக்கள் அனைவரும் உறுதியாக மனதில் வைத்துக்கொள்ளுவது மிகவும் நல்லது. போதிக்கிறவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் மாத்திரமல்ல, செவி சாய்க்கிறவர்களுமாக இருக்கிறவர்கள்; இவர்கள் மனுஷ ஞானத்தினால் அல்ல திவ்விய ஞானத்தினாலேயே போதிக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படியாக அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு புத்தி சொல்லும்போது, ''திருவசனத்தை பிரசங்கம் பண்ணு'' என்கிறார்; (2தீமோ. 4:2) ''இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக் கொண்டிரு'' என்கிறார்; (1தீமோ. 4:11) ''இந்தப்படியே போதித்து புத்தி சொல்லு'' என்கிறார்; (1தீமோ. 6:2). இது மாத்திரமல்ல, மேலும், அப்போஸ்தலர் சபையும், மூப்பர்களும்கூட கள்ள உபதேசங்களையும் தத்துவங்களையும்

போதிக்கிறவர்களையும், ''ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கைகளை'' போதிக்கிறவர்களையும் சபையின் போதகர்கள் என்று அங்கீகரித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் சிபாரிசு செய்கிறது என்னவெனில், ''ஒருவன் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவனானால்'' அவனை விட்டு விலகு, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினால், அவர்களால் உங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டதைத் தவிர வேறொரு சுவிசேஷம் உங்களுக்கு பிரசங்கிக்கப்பட்டால் அதை ஆதரிக்காதீர்கள் என்பதாகும். (1தீமோ. 6:3–5; கலா. 1:8)

ஆனாலும், தனிப்பட்ட முறையில் மற்றவர்களுக்கு திவ்விய திட்டத்தை எளிமையான முறையில் எடுத்துக்கூறக்கூடியவர்கள் சிலர் இருக்கலாம்; ஆனால் இவர்களுக்கு பேச்சுத்திறமை, பொதுபேச்சுத் திறமை, தீர்க்கதரிசன வரம் போன்றவை இல்லாதிருக்கலாம். ஆண்டவரைப்பற்றியும், அவருடைய காரியங்களைக் குறித்தும் தனிப்பட்ட விதத்தில் ஒரு வார்த்தையாவது கூறக்கூடிய இப்படிப்பட்டவர்களை அதைரியப்படுத்தக்கூடாது. ஆனுல் அதற்கு மாறாக அவர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செவி சாய்க்க ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு ஊழியம் செய்யவும், நம்முடைய ஆண்டவரும் இராஜாவுமாயிருக்கிறவரின் துதிகளைச் சொல்லிவருமாறும் உற்சாகப்படுத்தப்படல் வேண்டும். மறுபடியும், நாம் ''உபதேசித்தலுக்கும், பிரசங்கித்தலுக்கும்'' இடையில் உள்ள வித்தியாசத்தைக் காண வேண்டும். ( அப்.15:35) பிரசங்கிப்பது என்பது வெளிப்படையாய், பகிரங்கமாய் மற்றவர்கள் மத்தியில் செய்வது; போதிப்பது என்பது, முக்கியமாக ஒரு வேதபாட வகுப்பிலோ அல்லது தனிப்பட்ட சம்பாஷணையின் மூலமாகவோ தனிப்பட்டவிதத்தில் நல்ல முறையில் பொதுவாக செய்யக்கூடிய ஒன்றாகும். மேலும் நல்ல திறமையுள்ள பிரசங்கிமார்கள், பொதுப்பேச்சாளர்கள் அல்லது தீர்க்கதரிசிகளும்கூட சில சமயங்களில் தெரிந்துகொள்வது என்னவெனில், ஆழமான தேவகாரியங்களை சிறு கூட்டங்களுக்கு எடுத்துச்சொல்லி, அவைகள் அதிகமாக பகிரங்கமான விதத்தில் அல்லாமல் சாதாரணமாக பிரசங்கிக்கப்பட்டு, அதன் மூலம் அவர்களுடைய ஊழியம் தாங்கப்படும்போது அது நன்றாக விருத்தியடைகிறது என்பதாகும்.





சுவிசேஷகர்களுக்குக் கிடைக்கப்பெற்ற வரமானது, சத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படியாக மனிதருடைய மனதையும் இருதயங்களையும் எழுச்சியுறப் பண்ணுவதாகும்; இது ஆதிகால சபையில் இருந்தவர்களிடம் இருந்ததைக்காட்டிலும், தற்போது எல்லோரிடத்திலும் இருக்கக்கூடிய விசேஷமான வரமாகக் காணப்படவில்லை. மேலும் மாறிவிட்ட நிலமைகள், ஏறத்தாழ இந்த வேலையின் தன்மையையும் மாற்றிவிட்டது; ஜனங்கள் மத்தியில் பொதுவான கல்வியறிவு இருக்கிறதினிமித்தம், அச்சடிக்கப்பட்ட பிரசுரங்கள் மூலமாக அதிக அளவிற்கு சுவிசேஷ வேலையைச் செய்ய முடியும் என்பதைக் காண்கிறோம். இந்த காலத்தில் இப்படியாக துண்டு பிரதிகளை விநியோகிப்பதிலும், வேதபாட தொடர்களை கொடுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த சுவிசேஷகர்கள் கடந்த கால முறையின்படியல்ல, இந்த காலத்து முறைகளின்படி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த வேலைக்கு எதிரான வாக்குவாதமல்ல; அப்படியாகவே அவர்கள், கால்நடையாக அல்லது ஒட்டகங்கள் மூலமாக செய்யாமல் நீராவி அல்லது மின்சார சக்தியின் வண்டிகளில் பிரயாணம் செய்கிறார்கள் என்பதும் வாக்குவாதத் திற்குரியதல்ல. சுவிசேஷ ஊழியம் என்பது, சத்தியத்தை– யுகங்களுக்கான திவ்விய திட்டத்தை– தேவனுடைய திவ்விய வார்த்தையை – ''மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை'' எடுத்துக்கூறுவதாகும். எங்களுடைய கணிப்பின்படி இதைப்போன்று பெரிய பலன்களைத் தருகின்ற வேறு எந்த சுவிசேஷ வேலையும் இன்று கிடையாது. இந்த வேலையில் மற்ற விஷயத்தில் நாட்டம் செலுத்தாதபடி, இந்த வேலையையே செய்யும்படியாக தாலந்து பெற்ற, தகுதிகளைப் பெற்ற அநேகருண்டு. திராட்சைத் தோட்டத்திற்குள் இன்றும் செல்லாத அநேக அறுவடையாட்கள் உண்டு, இவர்களின் சார்பாக தொடர்ந்து நாங்கள், அறுப்புக்கு ஆண்டவர் அவர்களை அனுப்பும்படியாகவும், இந்த சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடும்போது அவர்களுக்குள்ளான சிலாக்கியங்களையும், சந்தர்ப்பங்களையும் அவர்கள் காணச்செய்தருளும் என்றும் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம்.

சமாரியாவிலுள்ள ஜனங்களுக்கு பிலிப்பு தன்னால் இயன்றதையெல்லாம் செய்து முடித்த பின்னர், பேதுருவும் யோவானும் அவர்களிடத்திற்கு அனுப்பட்டார்கள். (அப். 8:14) ஆகவே சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் நம்முடைய சுவிசேஷகர்கள், அதை கேட்கிறவர் களுடைய சுத்தமான மனங்களை எழுப்பிவிட்ட பின்னர், அவர்களை

ஆசிரியர்கள் போன்று, ஆண்டவருடைய வழிகளைப்பற்றி இன்னும் அறிந்து கொள்வதற்கு வேதத்தைக் கற்றுக் கொள்ளும்படி வேதபாடங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். ஆண்டவருடைய தூதர்களாக, பிரதிநிதிகளாக பேதுருவும், பவுலும், யாக்கோபும், யோவானும் விசுவாச வீட்டாருக்கு நிருபங்களை எழுதினார்கள்; அதனிமித்தமாக அவருடைய மந்தையை மேய்த்து ஆலோசனையைச் சொல்லி, உற்சாகப்படுத்தினார்கள். ஆகவே, இப்பொழுது சத்தியசுவிசேஷ புத்தகங்கள் தனிப்பட்ட முறையிலும், பரவலாகவும் நண்பர்களைச் சந்திக்கின்றது; அது அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அவர்களுடைய குணாதிசயங்களை ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் ஏற்படுத்திய வழிப்பிரகாரம் பளிங்கு போன்று ஆக்குவதற்கும் தேடி வருகின்றது.

## அனேகர் போதிக்க சாமர்த்தியம் உள்ளவர்களாயிருக்க வேண்டும்

அப்போஸ்தலர் சிலருக்கு பின்வருமாறு எழுதினார், ''காலத்தைப் பார்த்தால் (நீங்கள் சத்தியத்திற்குள் இருந்த காலம்) போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு (ஆண்டவருக்கென ஒரு வைராக்கியத்தில் குறைவுபட்டதாலும், உலகப்பிரகாரமான ஒரு ஆவிக்கு உட்பட்டதின் விளைவாகவும்) தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது.'' (எபி. 5:12) பொதுவான கருத்தின்படியாக, இது எதைக் குறிக்கிறது என்றால் குறைந்த பட்சம், முழு சபையும், முழு ஆசாரியத்துவமும், புது சிருஷ்டியின் அங்கங்கள் எல்லோரும் ''அவர்களிடத்தில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து அவர்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும் படியாக'' அவர்களுடைய பிதாவின் வார்த்தையில் தேறினவர்களாக வேண்டும் என்பதையே. (1பேது. 3:15) இப்படியாக நாம் மறுபடியுமாக பார்ப்பது என்னவெனில், வேதாகமத்தை போதிப்பது என்பது ஒரு குருமார்களின் வகுப்பினரை மட்டும் சார்ந்ததல்ல, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கமாக, பிரசங்கிக்கும்படியாக ''அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள்.'' ஆகவே இதன்படி, ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய திறமைக்கேற்ப





உண்மையாகவும், தெளிவாகவும் செவிசாய்க்க விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் நற்செய்திகளை எடுத்துச்சொல்லும்படியாக அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இந்த இடத்தில் இன்னொரு அப்போஸ்தலர் ஒரு விசித்திரமான ஒரு காரியத்தைக் கூறுவதைக் காண்கிறோம்.

## ''சகோதரரே, உங்களில் அனேகர் போதகராகாதிருப்பீர்களாக''

**–யாக். 3:1–**

இது எதைக் குறிக்கிறது? அப்போஸ்தலர், ''அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து'' என்று கூறுகிறார். கிறிஸ்துவின் சரீரமான சபையில் மேன்மைக்கேதுவான ஒவ்வொரு படியெடுத்து வைத்து முன்வரும்போது , சோதனைகளும் பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. ஒருவரும் போதகராகக் கூடாது என்று புத்திமதியாக சொல்லவில்லை. ஆனால் போதிப்பதற்கான தாலந்து தனக்கு உண்டு என்று தனக்குள் நினைக்கிற ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், தேவனுடைய வாயாக இருக்க எவ்விதத்திலும் முயற்சி எடுத்துக்கொள்ளுவது ஒருபொறுப்புள்ள காரியம் என்கிறார். அந்த பொறுப்பு என்னவெனில் தேவனுடைய திவ்விய குணாதிசயத்தையும் திட்டத்தையும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் எந்த ஒரு வார்த்தையும் உச்சரிக்கப்படாமல் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி ஜாக்கிரதையாக இருப்பதினால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாமலும், கேட்கிறவர்களுக்கு தீமை விளைவிக்காதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பரத்திலிருந்து வருகின்ற ஞானத்திற்கும், இந்த ஆலோசனைக்கும் கீழ்ப்படிய எல்லோரும் அறிந்து கொள்வார்களென்றால் அது சபைக்கு நல்லது. இப்பொழுது இருக்கிறதைக் காட்டிலும் அதிக குறைவான போதனை இருக்கக் கூடும். ஆனால் போதிக்கிறவர்கள் மற்றும் போதிக்கப்படுகிறவர்மேல் வருகின்ற காரியம் என்னவெனில் ஆண்டவருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் அதிகமான கனத்தை காண்பிக்கும்படியாக உணர்வு மாத்திரமல்ல, குழப்பம் உண்டு பண்ணக்கூடிய தவறுகளிலிருந்து இன்னும் அதிகமான விடுதலையையும் கொடுக்கிறது. இதற்கிசைவாக நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் குறிப்பிடுகிற வண்ணம் திவ்விய திட்டத்தோடு முற்றுமாக

*ஒத்துப்போகாத வண்ணம் போதித்த சிலருக்கு இராஜ்யத்தில் ஒரு பங்கு உண்டு; ஆனுல் இதன் விளைவாக, இராஜ்யத்தில் அவர்கள் சிறிய அந்தஸ்தையே பெறுவார்கள்; திவ்விய செய்தியைத்தவிர வேறு ஒன்றையும் போதிக்காமலிருக்க அதிக கவனம் எடுத்துக்கொண்டிருந்தால் இந்த நிலை வராது. அவருடைய திருவசனம் கூறுவது என்னவென்றால், ''ஆகையால், இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றை யாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகத்தில் எல்லாரிலும் சிறியவன் எண்ணப்படுவான்.'' (மத். 5:19)*

## ''ஒருவனும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை''

*''நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக் கிறது, ஒருவனும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத் திருப்பீர்களாக.''*

*''நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.'' –1 யோவா. 2: 27, 20*

*சபையானது கற்றுக் கொள்ளவும், கிருபையிலும் அறிவிலும் வளரவும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் பலப்படுத்தவும், மேலும் ஆண்டவர் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள் போன்றவர்களை எழும்பப்பண்ணுவார் என்று எதிர்பார்க்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிற வேத பகுதிகள் அனேகம் இருக்க, அப்போஸ்தலராகிய யாக்கோபின் இந்த அறிக்கை, சரியான விதத்தில் புரிந்து கொள்ளப்படும்வரை மிக விசித்திரமானது போலத் தோன்றுகிறது. இது ஒரு சிலருக்கு ஒரு தடைக்கல்லா யிருந்திருக்கிறது, ஆனாலும் ஆண்டவரோடு நல்ல இருதய நோக்கோடு இருந்தவர்களின் இருதயங்கள் இதனால் பாதிக்கப்படும்படி ஆண்டவர் அனுமதிக்கவில்லை என்பதை நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். இந்த வேத பகுதி குறிப்பிடுவது வார்த்தைக்கு வார்த்தை, கட்டளைக்கு கட்டளை எதிர்மாறாக இருப்பதுபோல் தோன்றுகிறது, இதைக்காட்டிலும் வாழ்க்கையின் அனுபவங்களும் கூடத் தாழ்மையான மனதுள்ள எந்த மனுஷனையும், இந்த பகுதி மொழிபெயர்க்கப்பட்ட விதத்தில் ஒன்று*





*தவறாக இருக்கிறது, அல்லது இந்தப் பகுதியிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய கருத்து தவறாக இருக்கிறது என்று மெய்ப்பித்துக்காட்ட போதுமானதாயிருக்கிறது. இது தீமை விளைவித்தது என்று சொல்பவர்கள் பொதுவாக தன்னைக்குறித்து அதிகமாக யோசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய தற்பெருமை, ஆண்டவர் தங்களை மற்ற எல்லா புது சிருஷ்டிகளைக் காட்டிலும், வித்தியாசமாக நடத்த வேண்டுமென்று யோசிக்கும்படி வழி நடத்துகிறது. ஆனாலும் இப்படிப்பட்டவர்கள், வேதாகமம் பொதுவாகப் போதிக்கின்ற சபையானது ஒரே சரீரமாயிருக்கிறது, அனேக அவயவங்கள் அதோடு இணைக்கப்பட்டுள்ளன; அதற்கு கிடைக்கப்பெறுகின்ற ஊட்டச்சத்தானது, அதன் அங்கங்கள் ஊட்டம் பெறும்படியாகவும், பலம் பெறும்படியாகவும், ஒவ்வொரு அங்கத்திற்கும் மற்ற அங்கங்கள் மூலமாக அல்லது ஒன்றாக இணைந்து எடுத்துச் செல்லப்படுகின்றது என்ற கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். இப்படியாக ஆண்டவர், சரீரமான சபையில் எந்த பிரிவினையும் இல்லாதிருக்கட்டும் என்கிற நோக்கோடு அவருடைய ஜனங்கள் ஒருவரையொருவர் சார்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணினார். இப்படியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சபை கூடி வருதலை விட்டுவிடாதிருங்கள் என்றும், ஒவ்வொரு இடத்திலும், ஒரு சிறு எண்ணிக்கையாகிலும், அவருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்று பேராக, சரீரமான சபை கூடுவதில் அவர் சந்தோஷமுள்ளவராக இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலர்கள் மூலம் புத்திமதி கூறியுள்ளார்.*

*இந்த பகுதியை ஆராய்ந்து பார்க்கும்போது, அவருடைய நாட்களில் இருந்த ஒரு தவறை, சத்தியத்தின் பெயரில், கிறிஸ்தவத்தின் பெயரில், ஆண்டவருக்கு சீஷத்துவம் என்ற பெயரில் வெளியாக்கப்பட்ட எல்லாவற்றையும் ஒன்றுமில்லாததாக்கிக்கொண்டிருந்த பெரிய தவறை மறுத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த தவறான முறை உண்மையான சபைக்கோ அல்லது அதன் உபதேசத்திற்கோ எவ்விதத்திலும் பங்குள்ளதாக இருக்கக்கூடாது என்றும், ஆனால் அதற்கு மாறாக அந்திகிறிஸ்து அல்லது கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள், அவருடைய நாமத்தை உபயோகித்துக்கொண்டே, இப்படியாக தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். இப்படிப்பட்டவர்களைக் குறித்து அவர் கூறும்போது, ''அவர்கள்*

நம்முடையவர்களாயிராதபடியால் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், (ஒன்று அவர்கள் ஒருபோதும் உண்மையான கிறிஸ்தவர்களாக இருந்ததில்லை, இல்லையென்றால் இப்படிப்பட்டவர்களாக இல்லாமல் போய்விட்டார்கள்) அவர்கள் நம்முடையவர்களாக இருந்திருந்தால் நம்மோடு தரித்திருப்பார்கள் என்கிறார்.'' *(1 யோவா. 2: 19)* மேசியாவைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் எல்லாம் வெறும் உவமைகள்தான், மனுக்குலம் மூலமாக அவைகள் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களுடைய இந்த தவறை சுட்டிக்காட்ட, இது தேவ குமாரன் மாம்சமானார், அவருடைய ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியால் மேசியாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு நம்மை மீட்டார் என்று சுவிசேஷம் அறிவிப்பதை முற்றிலுமாக மறுப்பதாகும் என்று அறிவித்தார்.

அப்போஸ்தலருடைய எண்ணம் என்னவெனில், கிறிஸ்தவர் களானவர்களும், குறைந்த அளவிற்காவது திவ்விய திட்டத்தைப் புரிந்து கொண்டவர்களும், முதலாவது, அவர்கள் எல்லோரும் முன்பு பாவிகளாக இருந்தார்கள் என்பதையும், ஒரு இரட்சகர் அவர்களுக்குத் தேவைப்பட்டார் என்பதையும் கருத்தில் கொண்டு வர வேண்டும்; இரண்டாவதாக, அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுவானவர், தன்னுடைய சொந்த ஜீவனையே பலியாக செலுத்தி அவர்களை மீட்டுக்கொண்டார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் மேலும் கூறும்போது எந்த மனிதனும் இந்த அடிப்படைச் சத்தியத்தை கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை என்கிறார். மேலும், வேதாகமத்தின்படி கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதும், அவர்களை நீதிமான்களாக்கும்படி மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்பதும், நாம் நீதிமானாக்கப்படுதலும், அதன் விளைவாக பரிசுத்தமாக்கப்படுதலும் மகிமையின் நம்பிக்கையும், எல்லாமுமே அவர்கள் சார்பில் செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் பலியினாலும், அதற்கான கிரயத்தினாலும் வருகின்றது என்கிற, கிறிஸ்துவத்தின் இந்த அடிப்படை காரியங்ளையும் அறிந்து கொள்ளாமல் கிறிஸ்தவர்களாக இருக்கவே முடியாது என்கிறார். குமாரன் வெளிப்படுவதற்கு முன்பாக, குமாரன் மேல் விசுவாசம் வைக்காமல் பிதாவை நம்பவும் அவர் மேல் விசுவாசம் வைக்கவும் சாத்தியம் இருந்தாலும்கூட, ஆனால் இப்பொழுது குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையும் மறுதலிக்கிறான் என்றும், அதே வேளையில் ஒருவரும் பிதாவையும், பிதாவே மையமாயிருக்கிற, அவரால் நிறைவேற்றப்படுகிற அவரது திட்டத்தையும் அறிக்கை செய்யாமல் குமாரனை அறிக்கை செய்ய முடியாது என்றும் கூறுகிறார்.





ஆகவே இன்றைக்கு அப்போஸ்தலர் என்னக் கூறினார் என்பதைச் சரியாகப் பார்க்க முடியும்; பரிசுத்த ஆவியினால் பிறந்த எவனும் முதலாவதாக ஆண்டவராகிய இயேசுவில் ஒரு விசுவாசியாக இருந்திருக்க வேண்டும்; அதாவது அவர் பிதாவின் ஒரே பேரான குமாரன் என்றும், அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்றும், அவர் பரிசுத்தராயிருந்தார் என்றும், குற்றமற்றவராக, பாவிகளிடத்தில் விலகினவராயிருந்தார் என்றும், நமக்காகத் தம்மையே ஈடு பலியாக கொடுத்தார் என்றும், அவருடைய பலி பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், மகிமையான இராஜாவாகவும் மீட்பராகவும் இருக்கும்படியாக அவருடைய உயிர்த்தெழுதல் உறுதிபண்ணிற்று என்றும் விசுவாசிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த விசுவாசம் இல்லாமல் ஒருவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க முடியாது, இப்படியாயிருக்க, அபிஷேகம் உடைய ஒருவருக்கு எந்த மனிதனும் இயேசு தேவ குமாரனாக இருந்தாரா இல்லையா என்ற அடிப்படைக் கேள்வியை மேற்கொண்டு விவாதிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது; மாத்திரமல்ல, அவர் மீட்பராக இருந்தாரா இல்லையா என்பதையும், தேவனுடைய ஏற்றகாலத்தில், வேதாகமத்தின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நிறைவேற்று கின்ற அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாக அவர் இருந்தாரா இல்லையா என்பதையும் விவாதிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது. ''நீங்கள் அவரில் நிலைத்திருக்க வேண்டும் என்று அது கற்பித்தது போன்று'' நாம் பெற்றிருக்கின்ற அதே அபிஷேகம் நம்மில் நிலைத்திருந்தால், இந்த காரியங்களில் உள்ள சத்தியத்தை நமக்கு விளக்கும். திராட்சை செடியாகிய அவரில் நிலைத்திராதவர்களெல்லாம் வெட்டி எறியப்பட்ட கொடி போன்று இருக்கிறார்கள், நிச்சயமாக வாடிப்போவார்கள்; அவரில் நிலைத்திருக்கிறவர்க ளெல்லாம், நிச்சயமாகவே அவருடைய ஆவியில் நிலைத்திருப்பார்கள், அவரை அவர்கள் மறுதலிக்க முடியாது.

''நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.'' யூத யுகத்தில் பரிசுத்த ஆவி பரிசுத்த எண்ணைக்கு ஒப்பிடப்பட்டிருந்தது; அது பிரதான ஆசாரியனின் தலையின் மேல்

ஊற்றப்பட்டபோது சரீரம் முழுதும் வழிந்தோடியது. ஆகவே கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ளவர்களெல்லாம் அபிஷேகத்திற்குக் கீழாக இருக்கிறார்கள், ஆவியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கிறார்கள்; மேலும் ஆண்டவருடைய ஆவி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் அது ஊற்றப்படக் கூடியதாக, மெருதுவாக வழவழப்பாக்குகிறது. அது எல்லா மனிதரோடும் கூடியவரை சமாதானமாக இருக்கும் தன்மையுள்ளது, நேர்மை அனுமதிக்கும் வரம்பிற்கு உண்மையாயிருக்கும்; விரோதத்திற்கும், கோபத்திற்கும், பொறாமைக்கும், எரிச்சலுக்கும், சச்சரவுக்கும் எதிராக இருக்கும். அதன் ஆதிக்கத்திற்குக் கீழாக இருப்பவர்கள், ஆண்டவரால் போதிக்கப்பட சந்தோஷப்படுகிறவர்களாக இருப்பார்கள், மாத்திரமல்ல அவருடைய திட்டத்தோடும் வெளிப்பாடுகளோடும் வாக்குவாதம் பண்ணாமல் எளிதில் அவைகளோடு ஒத்துப்போவார்கள்; இதன் விளைவாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வழவழப்பானவையான, அபிஷேகம், மென்மை, சாமாதனம், மகிழ்ச்சி, பரிசுத்த மனம் ஆகியவற்றை அடைவார்கள்.

இந்த வார்த்தையின் பிரகாரம் ஆண்டவருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள், அவர்களுடைய இருதயங்களில் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், ஒற்றுமையையும் கொண்டு வருவதோடு, ஆண்டவர் அவர்களை நடத்தியதால் இவைகளை அவர்கள் பெற்றார்கள் என்று அறிந்து, ஆண்டவராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து அவரை அபிஷேகம் பெற்றவராக ஏற்றுக் கொண்டபடியால் இவைகள் அவர்களுக்கு கிடைத்தன என்றும் அறிந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அபிஷேகம் அவர்களுக்கு ஒரு அடையாளமாக மாத்திரமல்லாது ஒர் அளவிற்கு, அவர்கள் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருக்கிறார்கள் என்பதற்கு மற்றவர்களுக்கும் அடையாளமாக இருக்கிறது. இந்த சமாதானம், சந்தோஷம் இல்லாதவர்கள், தங்கள் இருதயங்களை விரோதங்கள், எரிச்சல், சண்டைசச்சரவுகள், பெருமை, வாக்குவாதம், தர்க்கம் ஆகியவைகளால் நிறையப்பண்ணியிருக்கிறவர்கள், நிச்சயமாகவே அபிஷேகத்தின் அடையாளத்திலும் ஆண்டவருடைய ஆவியோடு வருகின்ற வழவழப்பிலும், மெருது தன்மையிலும் குறைவுபட்டிருப்பார்கள். நாம் எல்லோரும் ஒன்றுபோலில்லை, உண்மைதான் சிலரில் இருப்பதைப்போன்று மற்றவர்களின் காரியங்கள் வெளிப்புறமாக





வழவழப்பான தன்மை அதிதுரிதமாக வெளிப்படுவதில்லை, ஆனால் கிறிஸ்தவ அனுபவத்தின் வெகு ஆரம்ப நிலையிலே, இந்த வழவழப்பு தன்மை இருதயத்தில் இருக்க வேண்டும். இது நாம் இயேசுவோடு இருந்திருக்கிறோம், அவரில் கற்றறிந்து அவருடைய ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்பதற்கு ஒர் அடையாளமாக இருக்கிறது; இதன்பின் கூடிய சீக்கிரத்திலே நம்முடைய அனுதின வாழ்க்கையிலே மற்றவர்கள் காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

அப்படியென்றால் நாம், போதகர்கள் இருக்க வேண்டியதின் அவசியத்தையும், அவர்கள் மூலமாக ஆண்டவருடைய மனதை அறிந்து கொள்ளுவதற்கும் ஆண்டவருடைய திருவசனம் பொதுவாக கூறுகிறபடி, வேதம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்று காண்கிறோம். ஆண்டவர் போதகர்களைத்தான் சார்ந்து இருக்கிறார் என்று நாம் கூறவில்லை; மாத்திமல்ல அவரால் கட்டளை பிறப்பிக்க, பக்திவிருத்தி அடையப்பண்ண, புது சிருஷ்டியின் அங்கங்களை வேறு வழியில் அல்லது வேறு செயல் முறைப்படி உயர்த்த முடியாதென்றும் நாம் கூறவில்லை; ஆனால் போதிக்கவும் கிறிஸ்துவின் சரீரமான சபையை எழுப்பப் பண்ணவும், இது அவருடைய வழி, செயல் முறை என்று அவருடைய திருவசனம் கூறுகின்றது. இதன்படியாக சரீரமான சபையில் பிரிவினை கிடையாது, ஒவ்வொரு அங்கமும் மற்றவர்களுக்காக இரங்கவும், ஒவ்வொரு அங்கமும் மற்ற அங்கத்திற்கு உதவி செய்யவும், ஒத்துழைக்கவும் செய்கின்றது.

இந்த போதகர்கள் தவறு இழைக்காதவர்கள் என்று நாம் எண்ணக்கூடாது என்பதை ஏற்னெவே பார்த்திருக்கிறோம், ஆனால் அவர்களுடைய வார்த்தைகள் திவ்விய திட்ட அழைப்பிற்கு ஏற்ப இருக்கிறதா என்று எடைபோட்டு, அளந்து பார்க்க வேண்டும். அவைகள் ஆண்டவர், மற்றும் அப்போஸ்தலர், பரிசுத்த தீர்க்கதரிசிகள் ஆகியோரின் வார்த்தைகளின்படி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவர்கள் அந்த வார்த்தைகளை யுகத்தின் முடிவு வந்திருக்கிற நம்முடைய எச்சரிப்புக்கென பரிசுத்த ஆவியின் உந்துதலினால் பேசினார்கள், எழுதினார்கள். இப்பொழுது அப்போஸ்தலரின் வார்த்தைக்கு உங்கள் கவனத்தை சாய்க்க வேண்டும் என்று கேட்கிறோம். ''திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்'' (கலா. 6:6) என்று அவர் கூறினார்.

# ‘‘உபதேசிக்கிறவனும் உபதேசிக்கப்படுகிறவனும்’’

இந்த வேத பகுதி, மற்ற எல்லா பகுதிகளோடும் ஒத்திருப்பதோடு தேவன் தன்னுடைய ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் உபதேசிக்க வேண்டும் என்பதாக வடிவமைத்துள்ளார் என்பதைக் காட்டுகிறது; மேலும் அவர் மந்தையில் உள்ள மிக எளிமையானவனும் தனக்குள்ளாகவே சிந்தனை செய்து இப்படியாக தன் சொந்த விசுவாசத்தையும், தன் சொந்த குணநலனையும் அபிவிருத்தி பண்ண வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அந்தோ பரிதாபம், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவர்கள் மத்தியில் இந்த முக்கியமான விஷயம் பொதுவாக கவனிக்கப்படுவதில்லை. வேதாகமம் உபதேசிக்கிறவனையும், மாணாக்கர்களையும் அங்கீகரிக் கின்றது. ஆனுல் மாணாக்கர்கள் தாங்கள் விவாதிக்கின்ற பொருளைக் குறித்து தங்கள் கவனத்திற்கு வருகின்ற எந்த ஒரு அல்லது எல்லா காரியங்களையும் உபதேசிப்பவருக்கு தன்னிச்சையாக எடுத்துக்கூற சுயாதீனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனாலும் தானே உபதேசியராக வேண்டும் என்ற வாஞ்சையோடு அல்ல, ஆனாலும் ஒரு புத்திசாலியான மாணவனாக, ஒரு மூத்த சகோதரனுக்கு எடுத்துச் சொல்லுவது போல் சொல்ல வேண்டும்; அவர்கள் இயந்திரம் போன்று இருக்கக் கூடாது; மாத்திரமல்ல எடுத்துக்கூறவும் பயந்திருக்கக் கூடாது; ஆனால் கேள்விகள் கேட்பதின் மூலம், வேதாகமம் தவறான முறையில் அப்பியாசப்படுத்தப்படுவது போன்ற உணர்வு தங்களுக்கு வரும்போது , கிறிஸ்துவின் சரீரமான சபையும் அவருடைய உபதேசங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கான தங்கள் பங்கை செய்ய வேண்டும். இதன்படி அவர்கள், குற்றம் இருப்பின் கண்டு பிடிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் இப்படிச் செய்வதினால் அதைரியப்படாமல் உபதேசம் பண்ணுபவரின் வியாக்கியானங்களைக் குறித்து கேள்வி கேட்கக் கூடாது, உபதேசியாரை கேலி செய்யகூடாது என்று மற்றவர்கள் கூறினாலும், அதற்கு மாறாக அவர்கள் எடுத்துரைக்க வேண்டும், குற்றமிருந்தால் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்.

இருந்தாலும், ஆண்டவர் எந்தவிதமான பெருமளவில் குற்றம்காணும் இயல்புள்ள ஆவியையோ, சண்டை போடுகிற அல்லது குற்றம் கண்டு பிடிக்கிற தன்மையையோ ஊக்குவிக்க விருப்பம் உள்ளவர்





என்று நினைத்துவிடக் கூடாது. இப்படிப்பட்ட ஒரு ஆவி பரிசுத்த ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானது; அது மாத்திரமல்ல, அது மிகவும் அபாயகரமானதும் கூட. ஏனெனில் வாக்குவாதம் பண்ண வேண்டும் என்ற நோக்குடன் யாராவது ஒரு மிகைப்படுத்தப்பட்ட, அல்லது உத்தேசமான விஷயத்தை, அவரால் உண்மையானது என்று நம்ப முடியாத விஷயத்தை, அவருக்கு எதிராக இருப்பவரைக் குழம்பப்பண்ண வேண்டும் அல்லது ஒரு விவாதம் எழுப்ப வேண்டும் என்பது போன்ற ஒரு நோக்குடன் மாத்திரம் வருவாரானால் அவர் தனக்கு தீமை விளைவித்துக்கொள்வது மாத்திரமல்ல, இப்படிப்பட்ட ஒரு முறையால், அவர் மற்றவர்களுக்கும் தீங்கு உண்டு பண்ணுவார் என்று நிச்சயமாகவே நாம் நம்பலாம். சத்தியத்தில் நேர்மை அதில் முன்னேறுவதற்கு ஒரு முக்கியமான விஷயமாகும். ஆனால் விளையாட்டுக்கென அல்லது வேறு எந்த காரணத்திற்காகவாவது ஒருவர் சத்தியம் என்று எண்ணுவதை எதிர்ப்பதும், மேலும் ஒருவர் தவறு என்று எண்ணுவதை தற்காலிகமாகக் கூட ஆதரிப்பதும் நிச்சயமாகவே ஆண்டவருக்கு அருவருப்பாய் இருக்கும், மாத்திரமல்ல அதற்கான தண்டனையையும் கொண்டு வரும். ஐயோ! எத்தனை பேர் சத்தியம் என்று தாங்கள் அறிந்திருந்த ஒரு நிலைக்கு எதிராக ‘‘எதைச் செய்யலாம்’’ என்று முயற்சித்து, இப்படியான முறையைப் பின்பற்றினபடியால், சிக்குண்டிருக்கிறார்கள், முற்றிலுமாக அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், மேலும் குருட்டாட்டத்தில் சிக்குண்டிருக்கிறார்கள். ஆண்டவருக்கு அடுத்தபடியாக, முழு உலகத்திலும் சத்தியம் என்பது மிகவும் விலையேறப்பெற்ற தொன்றாகும்; அது அசட்டைபண்ணப்படக் கூடாது; அதோடு விளையாடக்கூடாது, அதோடு கூட யாரெல்லாம் இப்படிச் செய்கிறார்களோ அவர்கள் எல்லாரும் தங்களுக்கு தீமையைத்தான் வரவழைத்துக் கொள்வார்கள். *(2தெச. 2:10,11 ஐப் பார்க்க)*

‘‘செய்தி கொடுத்தல்’’ என்கிற வார்த்தை மிகவும் விசாலமான பொருள் உடையது என்பதைக் கூறுவது நல்லது. அது ஒருவரின் சிந்தனைகள், உள்ளுணர்வுகள் போன்றவைகளை மாத்திரம் உள்ளடக்கியதல்ல, ஆனுல் உபதேசிக்கப்படுகிறவர், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுகிறவர், உபதேசம் பண்ணுகிறவர்களுக்குச் சாதகமாகச் எந்த ஒரு வழியிலாவது அதைத் தெரியப்படுத்த சந்தோஷமுள்ளவர்களாயிருக்க வேண்டும்; அவர்களுடைய தாலந்துகள், முயற்சிகள் ஆகியவைகளினிமித்தம் ஆண்டவருக்கும், சகோதரருக்கும்

சத்தியத்திற்கும் கனி கொடுப்பதின் மூலம் தெரியப்படுத்தலாம். புது சிருஷ்டியின் மிக அடிப்படையான பரிசுத்த ஒழுங்கு முறை இப்படியாக இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப நிலையிலேயே ஒவ்வொருவரும், ''வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்'' என்ற அவர்களது ஆண்டவரின் வார்த்தைகளின் அர்த்தத்தை கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே நல்ல உண்மையுள்ள இருதயங்களில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட அளவின்படி, பூலோக நன்மைகளிலிருந்து, சத்தியத்தின் ஊழியத்திற்கு கொடுப்பதற்கு கொடுக்கும் ஆவியுள்ளவர்கள் சந்தோஷமாகக் கொடுக்கிறார்கள். எப்படிக் கொடுக்க வேண்டும், கொடுப்பதற்கு வேண்டிய ஞானம் பற்றியவைகளை, பின்னர் இன்னொரு தலைப்பின் கீழ் பார்க்கலாம்.

## சபையில் ஸ்திரீயின் பங்கு

இந்த பொருளைப் பொருத்தவரை திவ்விய திட்டத்தில் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள பொதுவான உறவை ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் இதை நன்கு கவனிக்க முடியும்; ஆனால் ஒரு முக்கியமான கருத்தின்படி, இதைக் கூறுவதற்கு இது தகுதியான இடமாயிருக்கிறது. இதை ஆமோதிக்கிற மற்ற கருத்துகள், பின்னால் கூறப்பட்டுள்ளன, அவைகள் இப்பொழுது நாம் கூறுவதற்கு ஆதரவளிப்பதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

புது சிருஷ்டியாகிய அவரது சபையைத் தெரிந்தெடுப்பதில், ஆண் பெண் என்ற பாகுபாடு ஆண்டவரால் புறக்கணிக்கப்பட்டது என்பது மிக தெளிவாக புரிகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தலையாகக் கொண்டிருக்கிற ''ஒரே சரீரமான'' சபையின் அங்கங்களாகும்படி ஆண், பெண் இரு பாலாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே ''அவரோடு பாடுகளை சகித்தால் அவரோடு ஆளுகை செய்வோம்'' என்ற பொதுவான நிலையின்படி, ஆண், பெண் இருபாலாரும் ஒன்றுபோல முதலாம் உயிர்த்தெழுதலிலும் அதன் மகிமையிலும், கனத்திலும் அழியாமையிலும் ஒரு பங்கைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இரு பாலாருமே நம்முடைய ஆண்டவராலும் அப்போஸ்தலர்களாலும் மதிப்புக்குரிய விதத்தில், உற்சாகமான _வார்த்தைகளால் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, குணாதிசயத்திலும் சுவிசேஷ ஊழியத்திலும் ஸ்திரீயின் மேல் வைத்த





எல்லை வரம்பு, தடை எல்லாம் மாம்சத்தில் அவள் இருக்கும் இந்த காலத்திற்கு மட்டும் உரித்தாகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் ஆண்களுக்குத்தான் முன்னுரிமை அளித்தார் என்று எண்ணாமல் எந்த ஒரு காரணத்திற்காக என்று நாம் பார்க்க வேண்டும். நாம் இரு பாலாருக்கும் இடையில் உள்ள பாகுபாடு ஒரு நிழலாக அல்லது உண்மையான முறையில் உள்ளதா என்பதைப் பார்க்க முயற்சி செய்வோம். ஏனெனில் மனுஷன் சபைக்குத் தலையாயிருக்கிற கிறிஸ்து இயேசுவுக்கு ஒப்பாகவும், அதே வேளையில் ஸ்திரீ, திவ்விய நியமனத்தின்படியான தலைக்குக் கீழாக இருக்கிற மணவாட்டிக்கு, சபைக்கு ஒப்பாகவும் கூறப்பட்டுள்ளது.

நம்முடைய ஆண்டவர் அவருடைய தாயாரிடத்திலும், மார்த்தாள், மரியாள் மற்றும் ''தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்துகொண்டு வந்த கனத்துக்குரிய மற்ற ஸ்திரீகளிடத்திலும்'' வைத்த அன்பு, வேத வசனங்களிலிருந்து விளங்குவது மாத்திரமின்றி, அவர்களிடத்தில் ''அன்பாயிருந்தார்'' என்கிற நேரடியான அறிக்கையிலிருந்தும் விளங்குகின்றது. **(யோவா. 11:5)** இருந்த போதிலும், அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பின்னர் எழுபது பேரையும் தெரிந்து கொண்டபோது அவர்களில் ஸ்திரீ யாரையும் சேர்க்கவில்லை. இது கவனக்குறைவால் நடந்தது என்று எடுத்துக்கொள்ள முடியாது; அது அப்படியாக கவனக்குறைவால் இல்லாததுபோன்று, கடந்த பதினாறு நூற்றாண்டுகள் வரை பொதுவான ஊழியங்களைப் பொறுத்தவரை லேவி கோத்திரத்தாரின் ஸ்திரீகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இல்லையென்றால் நம்முடைய ஆண்டவருடைய நண்பர்களின் குடும்பத்தின் ஸ்திரீகள் அவரால் உபயோகப்படுத்தும்படி போதிய கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை என்றும் எண்ண முடியாது; ஏனெனில், தெரிந்து கொள்ளப்பட்டவர் களைக் குறித்து வேதத்தில் ''அவர்கள் பேதமையுள்ளவர்களென்றும் படிப்பறியாதவர்களென்றும்'' எழுதப்பட்டுள்ளது. ஆகவே ''சகோதர, சகோதரிகள்'' மத்தியிலிருந்து ஆண்கள் மட்டுமே விசேஷமான பொதுவான ஊழியக்காரராயிருக்கும்படியாகவும், சுவிசேஷத்தின் தூதுவர்களாக இருக்கும்படியாகவும் திவ்விய திட்டத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று முடிவு செய்ய வேண்டும். இங்கே புரிந்து கொள்ளப்படவேண்டியது என்னவெனில், இந்த திவ்விய ஒழுங்கு

முறையானது சத்துருவின் மாபெரும் திட்டத்திற்கு மாறானது; சத்துரு எப்பொழுதுமே, இரு பாலாரையுமே தன்னுடைய கருவிகளாக உபயோகப்படுத்த ஆயத்தமாயிருந்தாலும், அவன் ஸ்திரீயானவள் தன்னுடைய மிகச் சிறந்த பிரதிநிதியாக இருப்பதைக் கண்டு கொண்டான்.

முதலாவது ஸ்திரீ சாத்தானுடைய முதலாவது பிரதிநிதியாக இருந்தாள்; முதலாவது மனிதனை தவறான வழியில் நடத்துவதில் வெற்றியுள்ளவளாக இருந்து, முழு உலகத்தையும் பாவத்திற்குள்ளும் மரணத்திற்குள்ளும் தள்ளினாள். கடந்தகாலத்தில் இருந்த சூனியக்காரிகள், தற்காலத்தில் ஆவியோடு தொடர்பு கொள்ளுகிறவர்கள், ''கிறிஸ்டியன் சயின்டிஸ்ட்'' ( Christian Scientists )ஆகிய எல்லோரும் இதற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். ஆண்கள் மூலமாக திவ்விய பிரச்சாரம் என்று குறிக்கப்பட்டுள்ளது போன்று சாத்தானின் பிரச்சாரம் ஸ்திரீகள் மூலமாக உள்ளது. மேலும் திவ்விய திட்டமானது, மனிதர்கள் இயற்கையான சுபாவத்தினால் மத ரீதியான காரியங்களில் ஸ்திரீகளை விசேஷமாக உயர்வாகக் கருதுவதற்கு – அந்த பாலாருக்கு உயர்ந்த அளவிலான பரிசுத்தம், ஆன்மீகம், தேவனோடு ஐக்கியம் உண்டென்று கருதுவதற்கு– மாறாக உள்ளது. இந்த உணர்வு கடந்த கால மற்றும் தற்காலத்தில் உள்ள குறிப்பேடுகளின் மூலம் விளங்குகிறது. இதற்கு ஆதாரமாக எகிப்திய தேவதை இஸிஸ் ( Isis), அசீரிய தேவதை அஸ்ரோத் (Asroth ), கிரேக்க தேவதை டயானா (Diana), ஜூனோ (Juno), வீனஸ்(Venus ), பெல்லோனா (Bellona) ஆகியோரை குறிப்பிடலாம். மனிதனை ஆண்டவர் தன்னுடைய சபையில் சந்தேகத்திற்கிடமின்றி அவருடைய வாயாகவும், பிரதிநிதியாகவும் வைத்திருந்த போதிலும், மரியாள் வணக்கம் கிறிஸ்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கானவர்களை அநேக நூற்றாண்டுகளாக தன் ஆதிக்கத்தில் வைத்திருக்கிறது.

மேற்கூறியவைகள் ஒரு அடையாளமாக ஒரு பக்கம் இருந்தாலும், இருபாலாருக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் குறித்து வேறு காரியங்கள் உள்ளனவா என்று ஆண்டவருடைய வார்த்தை நமக்கு அறிவிக்கவில்லை; மேலும் இந்த விஷயத்தைக் குறித்து எங்கள் ஊகங்கள் சரியாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இருந்தாலும் உயர்வாக எண்ணப்படுகின்ற குணாதிசயம் உடைய ஸ்திரீயின் இருதயத்தின், உள்ளத்தின் தன்மைகள் அவளைப் பொதுவான ஆன்மீக ஊழியத்திற்கு தகுதியற்றவளாக்குகிறது. உதாரணமாக, அதிர்ஷ்டவசமாக,





இயற்கையாகவே ஸ்திரீயானவள் பிரியப்படுத்தவும், ஏற்றுக் கொள்ளப்படவும், புகழப்படவும் வாஞ்சையுள்ளவளாக இருக்கிறாள். இந்த குணாதிசயம் வீட்டிற்கு ஒரு அளவிட முடியாத ஆசீர்வாதமாக இருக்கின்றது; அது பலவிதமான வகைகளில் சுவையான உணவுகளை தயார் செய்வதற்கும், வயதான கன்னிகைகள் அல்லது வயதான பிரம்மச்சாரிகள் வசிக்கும் அறைகளைக் காட்டிலும் அழகுற காட்டுகிறபடி வீட்டிற்கு தேவையான அழகு பொருட்களை செய்யவும் உதவுகிறது. உண்மையான மனைவி தன்னுடைய குடும்பத்தை சந்தோஷமாக வைக்க முயற்சிக்கிறாள்; அதே வேளையில், அவளையும் அவளுடைய சமையலையும் பாராட்டுவதை விரும்பி வரவேற்கிறாள். இயற்கையாகவே அவள் விரும்புகின்ற, அவளுக்கே உரிய புகழாரங்களை ஒருபோதும் அவளுக்கு கொடுக்காமல் இருக்கக்கூடாது. இது அவளுடைய தேக ஆரோக்கியத்திற்கும் அவளுடைய முன்னேற்றத்திற்கும் மிகவும் இன்றியமையாதது.

ஸ்திரீயானவள் அவளுடைய நிலையிலிருந்து, மிக முக்கியமான ஒரு பரந்த நிலைமைக்கு உயர்த்தப்படும்போது, இது குறித்து கவிஞர் நன்றாக கூறுகிறார்: ''தொட்டில் ஆட்டுகிற கைதான் உலகை ஆட்டுகிற கை'' என்று; பொதுப்பணியில் அவள் ஆசிரியையாக, ஒரு பேராசிரியையாக அல்லது ஒரு எழுத்தாளராக வந்தால் அவள் ஆபத்தான ஒரு நிலைக்கு வருகிறாள், ஏனென்றால் பெண்மைக்கே உரித்தான சில குணாதிசயங்கள், (அவைகளில் ஒன்றை நாம் குறிப்பிட்டுள்ளோம்) அவளை ஒரு நல்ல ஸ்திரீயாக உருவாக்குகின்றவைகள் உண்மையான மனிதருக்கு கவர்ச்சியாக தோற்றமளிக்கும்போது, மனிதர்கள் இயற்கையான முறையில் இல்லாது, அவளுடைய ஸ்திரீக்கான தன்மைகளைக் கெடுக்கும்படியாக, அவளுடைய தன்மைகள் ''ஆண்களைப்'' போன்று இருக்கும்படியாக சதியாலோசனை செய்வார்கள். இயற்கையானது இருபாலாருக்கும் சரீர உருவகத்திலும், முடி அடுக்குகளில் மாத்திரமல்ல, இருதயத்திலும் தலையிலும் ஒரே மாதிரியான சுபாவங்களைக் கொடுத்திருக்கிறது; அவைகள் ஒன்றோடொன்று நன்றாக இணைந்து செயல்படும்படியாக இருக்கிறபடியால் , இயற்கையின் முறைகளை அலட்சியப்படுத்துவது அல்லது அதில் தலையிடுவது, ஒரு வேளை தற்காலிகமான நன்மையான மாற்றங்கள் இருப்பது போன்று தோன்றினாலும் இறுதியில் நிச்சயமாக தீமை விளைவிக்கும்.

பாராட்டுதலை விரும்பக்கூடிய இப்படிப்பட்ட குணாதிசயத்தை இயற்கையானது ஸ்திரீக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும்போது அவைகள் சரியான முறையில் உபயோகிக்கப்பட்டால், அது அவளுக்கும், அவளுடைய வீட்டிற்கும், அவளுடைய குடும்பத்திற்கும் எவ்வளவோ உதவியாயிருக்கிறது. ஆனால் பொது வாழ்க்கையில் உபயோகிக்கப் படுமானால், சபையின் அல்லது உலகத்தாரின் பாராட்டைப் பெறவேண்டும் என அவள் நினைப்பாளானால் அது அவளுக்கு ஒரு கண்ணியாக மாறுவது நிச்சயம். பிரகாசிக்க வேண்டும் என்கிற நோக்கம், மற்றவர்களைக் காட்டிலும் ஞானவான், திறமைசாலி என்று தோற்றமளிக்க வேண்டும் என்பவைகள் பொது ஜனத்திற்கு முன்பாக நிற்கிற எல்லாரையும் சூழ்ந்து கொள்ளும் ஒரு ஆபத்தாக இருக்கிறது; இது அனேக மனிதரை பெருமையடையப் பண்ணி, இதன் விளைவாக சத்துருவின் ஒரு கண்ணியில் விழப்பண்ணியிருக்கிறது. ஆனால் ஸ்திரீக்கே உள்ள பெண்மையின் குணாதிசயங்கள் அவளை இந்த அபத்தத்திற்குள்ளவளாக விசித்திரமாக ஆக்குகிறது; பிரகாசிக்க வேண்டும் என்ற முயற்சியில் அவள் தடுமாறுகிறது மாத்திரமல்ல, மற்றவர்களையும் தடுமாறப் பண்ணக்கூடும்; ஏனெனில் திசை மாறிப்போகிறவர்களுக்கு, நிச்சயமாகவே சத்துரு போலியான எண்ணையை ஊற்றுவான்; அவனுடைய பொய்யான வெளிச்சத்தினால் ஆண்டவருடைய வழியை விட்டு அநேகர் விலகக் கூடும். இதன்படியாக அப்போஸ்தலர் எச்சரிக்கையாக கூறுகிறதாவது : ''என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.'' (யாக்.3:1) இது சகோதரிகளுக்குச் சொல்லப்பட்டால் இன்னும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும். உண்மையாகவே அவர்களுக்கு ஆபத்து அவ்வளவு அதிகமாக இருப்பதினால், ஒருவரும் உபதேசிக்கிறவர்களாக ஏற்படுத்தப் படவில்லை. மேலும் அப்போஸ்தலர் எழுதுகிறார்: ''உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்.'' (1தீமோ. 2:11, 12)

ஆனாலும் இந்த உறுதியான, தெளிவான அறிக்கையால், பழைய கதையையே திரும்பத் திரும்ப சொல்லுவதினால், புதுச் சிருஷ்டியின் சகோதரிகள் ஒருபோதும் ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரமுடியாது என்று கூற முடியாது. இதே அப்போஸ்தலர் அவருடைய நாட்களில்



இருந்த கனம் பொருந்திய ஸ்திரீகள் ஊழியத்தில் உதவி செய்பவர்களாக இருந்தார்கள் என்று மிக மரியாதையுடன் குறிப்பிடுகிறார். உதாரணமாக, பிரிஸ்கில்லாவையும், அவளுடைய புருஷனையும் ''வேலையாட்களாக'' அல்லது ''உடன் வேலையாட்களாக'' இருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். (ரோம.16:3) இது அப்போஸ்தலர்களை தங்கள் வீட்டில் ஏற்று உபசரிக்கிறவர்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டிலும் அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கிறது. அதன் அர்த்தம் என்னவெனில் அவருடைய வேலையில் அவரோடு வேலை செய்தார்கள், கூடாரத்தொழிலில் மாத்திரமல்ல, ஆனால் விசேஷமாக அவருடைய முக்கியமான வேலையான சுவிசேஷ ஊழியத்தின் வேலையையும் செய்தார்கள். பின்னால் வருகிற வசனத்தில் (வச. 6) மரியாளின் ஊழியத்தை வித்தியாசமாக, '' எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாள்'' என்று கூறுகிறார். இதை பார்க்கும்போது அவள் ஒரு உடன் வேலையாள் இல்லையென்று காண்கிறோம். அவள் அப்போஸ்தலருக்குச் செய்த ஊழியத்தை அவர் பெற்றுக் கொண்டதாக அறிவிக்க விருப்பப்பட்டார். ஒருவேளை அது அவருடைய சொந்த வேலையான, துணி துவைப்பது, அல்லது தைப்பது என்றிருக்கலாம். இதற்கு மாறாக பிரிஸ்கில்லாவினுடைய வேலையை உர்பானுடைய (வச.9) வேலையைப்பற்றிச் சொன்ன அதே விதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆக்கில்லாவுடைய பெயர் பிரிஸ்கில்லாவாகிய அவனுடைய மனைவியின் பெயருக்கு அடுத்தபடியாக சொல்லப்பட்டிருக்கிறபடியால், நாம் முடிவாக எண்ணுகிறதென்னவெனில், இந்த இரண்டு உடன் வேலையாட்களில் மனைவி அதிக திறமைசாலியாயிருந்தாள் என்பதாகும். மற்ற இரண்டு சகோதரிகளான திரிபேனாள், திரிபோசாள் (வச.12) ஆகிய இருவரின் ஊழியத்தைக் குறித்து ''கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற'' வேலை என்று மரியாதையோடு குறிப்பிடப்படுகிறார்.

''கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற'' என்ற அப்போஸ்தலர்களின் வார்த்தையை சகோதரிகளுக்கு ஊழியம் சந்தர்ப்பமே வழங்கக் கூடாது என்று புரிந்து கொள்வது தெளிவாய்த் தெரிகிற தவறாகும். ஆராதிக்கவும், துதிக்கவும், ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி அடையப்பண்ணும்படியாக சபையில் கூடிவந்திருக்கும்போது (இரண்டு அல்லது மூன்று பேர் அல்லது அதிகமாக) சகோதரிகள், உபதேசிக்கிறவர்களாக இருக்க முயற்சி செய்யாமல் ஒரு தாழ்ந்த இடத்தை எடுக்க வேண்டும்; அப்படி யில்லாவிடில், அது மனுஷன் மேல் அதிகாரம் செலுத்துவதாகும்.

இயற்கையாகவும், கட்டளையின்படியாகவும், ஆண்டவர் ஊழியங்களைத் தலைமை தாங்கி நடத்துமாறு மனுஷன் மேல் பொறுப்பை வைத்திருக்கிறார்; இதை நாம் ஒத்துக்கொள்ள முடியுமோ இல்லையோ, ஆனால் சந்தேகத்துக்கிடமின்றி விவேகமான காரணங்களுக்காக அப்படிச் செய்திருக்கிறார்.

அப்போஸ்தலர் விதித்த கட்டுப்பாடுகள், 1 கொரிந்தியர் 14ல் அவர் வருணிக்கிற கூட்டங்களை பற்றி இருப்பது போல் தெரிகிறது; இந்தக் கூட்டங்களில் சகோதரிகளும் இருந்தார்கள்; அவர்கள் பாடல்களையும், கீர்த்தனைகளையும் சேர்ந்து பாடினார்கள்; யாரெல்லாம் ஜெபித்தார்களோ, அந்த ஜெபங்களில் பங்கு பெற்றார்கள்; நிச்சயமாகவே அந்தக் கூட்டத்தில் எல்லா ஆசீர்வாதங்களிலும் பங்கடைந்தார்கள்; அவர்கள் எல்லாரும் பயன் அடையும்படியாகக் கூட்டங்களில் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும் என்பதின் அவசியத்தை அவர்கள் மனதில் பதியவைக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். அவர் தூண்டுதலாக சொல்வதென்னவெனில் ஒரு சமயத்தில் ஒருவருக்குமேல் பிரசங்கிக்கவோ, அல்லது தீர்க்கதரிசனம் சொல்லவோ கூடாது, மற்றவர்கள் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும்; மாத்திரமல்ல, ஒரே வேளையில் வெவ்வேறு காரியங்களில் மனதைச் செலுத்தாமலிருக்க ஒரு கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேருக்குமேல் பேசவோ, தீர்க்கதரிசனம் சொல்லவோ கூடாது என்றும் கூறினார். அதே மாதிரி அந்நிய பாஷையில் பேசுகிறவன் அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் அமைதியாயிருக்கக்கடவன் என்றார்.

இந்தக் கூட்டங்களில் ஸ்திரீகள் அறவே பேசக்கூடாது, கூட்டங்களுக்கு வெளியே அல்லது ''வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்.'' சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் தங்கள் சொந்த மனிதரிடத்தில் கேட்க வேண்டும், அவர்கள் தங்கள் கருத்தை அல்லது கேள்விகளை, அந்த சகோதரர்கள் (மனிதர்கள்) மூலமாக கேட்கலாம்; முடிந்தால், அந்தரங்கமாக நெருங்கிப் பழகியவர்களான தங்கள் புருஷர்கள் மூலமாக, அல்லது கூட்டம் முடிந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் அவர்கள் பேசின அந்தச் சகோதரர்கள் மூலமாகக் கேட்கலாம். இந்தப் பகுதியில் வீடு என்பது குடும்பம் அல்லது பழக்கமான என்ற அர்த்தமுடையதாகும். இதன் கருத்து என்னவெனில் அவர்கள், தங்கள் கேள்விகளை அவர்களுக்கு அறிமுகமான புருஷரிடத்தில் அல்லது



பரிச்சயமானவர்கள் மூலமாகக் கேட்கலாம் என்பதாகும். அப்போஸ்தலர் தொடர்ந்து சொல்கிறதாவது : ''பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது.'' 1 கொரி. 14 : 34–36

கொரிந்து சபையிலே, இருபாலாருக்கும் சபையில் உள்ள உரிமைகள் பாகுபாடுக்கு உட்பட்டதல்ல என்று கூறி ''ஸ்திரீகளின் உரிமைகள்'' என்ற கருத்தை ஆதரித்தார்கள். ஆனால் அப்போஸ்தலர் இந்தக் கருத்தை எதிர்ப்பது மாத்திரமல்ல, ஆனால் அதற்கும் மேலாக, ஆண்டவருடைய ஜனங்களில் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு முறையைத் துவங்கலாம் என்று எண்ணுவதில் அவர்களுக்கிருந்த துணிவைக் கண்டித்தார். அவருடைய வார்த்தைகளாவன: ''தேவனுடைய வசனம் (தூது) உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்திற்கு மாத்திரம் (வேறு இடத்திலிருந்து) வந்ததா? ஒருவன் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்றாவது ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்,'' இவைகள் என்னுடைய சொந்த, அல்லது விசித்திரமான எண்ணங்கள் அல்ல. ஆகவே, நாம் இவ்விஷயத்தில் கொரிந்தியர்களைக் காட்டிலும், நம்முடைய சொந்த விருப்பங்களையும், கருத்துக்களையும் அப்பியாசப்படுத்த வேண்டும், ஆனால் அப்போஸ்தலருடைய அறிக்கைகளை ஆண்டவருடைய கட்டளையென எண்ணி தலை வணங்க வேண்டும். இந்த விஷயத்தில் அப்போஸ்தலரின் போதனையை யாரேனும் ஒத்துக்கொள்ளாவிட்டால், அவள் உறுதியாயிருந்து அவர் அப்போஸ்தலரே கிடையாது என்று முழுமையாக நிராகரிக்கட்டும்.

இந்த விஷயத்தில் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து ஆண்டவர் சபைக்கு கொடுத்த வரங்களைக் குறித்ததான அப்போஸ்தலருடைய வார்த்தையில் கவனத்தை செலுத்துவது நல்லது. அவர் சொல்லுகிறதாவது: ''பரிசுத்தவான்களை சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.'' (எபே. 4:12,13) கிரேக்க மொழியில் இந்த வார்த்தையின் உருபு, ஆண்பாலையும்,

பெண்பாலையும், இருபாலாரையும் சேராதவர்களையும் குறிக்கிறது. ஆண்டவர் பரிசுத்த ஆவியின் மூலம் எப்படி விசேஷமாக அவருடைய சபைக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் ஆண் பெண் பாகுபாட்டிற்கு ஒரு கோடிட்டார் என்பதைப் பார்ப்பதற்கு இந்த பகுதி அருமையானதாகும். மேற்கூறிய பகுதியை குறித்த உண்மைகள் எவை? எந்த ''பால்'' கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது? நாம் பதில் சொல்லுகிறோம் இந்த உருபு ''tous'' (பன்மை - Accus, ஆண்பால்) அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசி களுக்கும், சுவிசேஷகர்களுக்கும், மேய்ப்பர்களுக்கும் முன்பதாக வருகின்றது, ஆனால் போதகர்களுக்கு முன்பாக இந்த வார்த்தை வரவேயில்லை, இந்த இடத்தில் இந்த வார்த்தை ''உதவி செய்பவர்களை'' குறிக்கும்படி வருகிறது போன்றிருக்கிறது, இல்லாவிடில், ஆண் அப்போஸ்தலர்களை, ஆண் பேச்சாளர்களை, ஆண் சுவிசேஷகர்களை, ஆண்கள் எல்லாரையும் போதகர்கள் என்று குறிப்பிடுகின்ற முழுமையான அர்த்தத்துடன் வருகின்ற பதமாயிருக்கிறது.

ஒரு சகோதரி தன்னுடைய சொந்த கருத்தை வெளிப்படுத்தாமல், எந்த ஒரு விஷயத்தைக் குறித்தாவது, ஆண்டவருடைய அல்லது அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை சபைக் கூட்டத்தினரின் கவனத்திற்குக் கொண்டு வருவதை, எப்படியாயினும் போதனை என்று எடுத்துக் கொள்ள முடியாது என்று இங்கு நாம் குறிப்பிடுகிறோம். இல்லாவிடில், மனிதனுக்குள்ள அதிகாரத்தைப் பறித்துக் கொள்வது போன்றும் எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு மாறாக, அவள் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, போதகர்களின் வார்த்தைகளைத் தான் கூறியிருப்பாள். அதே போன்று மற்றவர்களுக்கு எங்களால் பிரசுரிக்கப்பட்ட வேத விளக்க உரைகளிலிருந்து, அல்லது இந்தப் புஸ்தகத்திலிருந்து, வாசிப்பது, அல்லது மேற்கோள் காட்டுவது, அவளைப் பொறுத்த வரையில் அது போதனை செய்வதாகாது. ஆனால் அது குறிப்பிடப்பட்ட ஆக்கியோனுடைய போதனையாக இருக்கும். இங்கு, இப்படியாக, தன் மந்தையைப் பாதுகாப்பதற்காக ஆண்டவர் மேற்கொண்ட ஒழுங்குகளைக் காண்கிறோம். அதே சமயத்தில், ஆண்டவர் அவர்கள் தேவைகள் சந்திக்கப்படத்தக்கதாக அனேக வழிமுறைகளையும் உண்டு பண்ணி வைத்திருப்பதைக் காண்கிறோம்.





எல்லோருமே திவ்விய கட்டளைக்குக் கீழ்ப்படியலாம், ஆனாலும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, ஒரு ஸ்திரீ சபைக்கு அடையாளமாக இருக்கிறாள், ஒரு மனிதன் சபைக்குத் தலையாயிருக்கிற ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறான் என்பதை ஒருவன் அறிந்து கொள்ளாவிட்டால், நிச்சயமாகவே ஒருவனும் அதைப் புரிந்து கொள்ள முடியாது. (பார்க்க, எபே. 5:23; 1கொரி. 11:3) சபையானது ஆண்டவருக்கு போதிக்க முயற்சி செய்யாதது போல, சபைக்கு அடையாளமாயிருக்கிற ஸ்திரீயும் மனிதனுக்குமேல் போதகர் என்கிற பாத்திரத்தை எடுத்துக் கொள்ள கூடாது; ஏனெனில் அவன் ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறான். இந்த சிந்தை நம் மனதிற்கு முன்பாக இருக்க, வேதகாமம் செய்துள்ள இந்த ஏற்பாடுகளினிமித்தம் எந்த ஒரு சகோதரியும் அலட்சியப்படுத்தப் பட்டதாக எண்ண வேண்டிய அவசியம் இல்லை, எந்த ஒரு சகோதரனும் பெருமையினால் நிறையவும் தேவையில்லை. ஆண்டவர் மாத்திரமே போதகர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், சகோதரர்கள் தங்கள் சொந்த ஞானத்திலிருந்து கூறக்கூடாது. ஆனால் அவர்களுக்கு தலையாயிருக்கிறவர் அவர்களுக்குச் சத்தியம் என்று தெரியப்பண்ணி யிருக்கிறதை மற்றவர்களுக்கு அறிவிப்பதை மட்டும் செய்ய வேண்டும். இந்த வசனத்தை (1 தீமோ. 2:11,12) ஆண்டவருக்கும், சபைக்கும் நாம் பொருத்திப்பார்ப்போம். இதன்படியாக சபையானது எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். சபையானது உபதேசம் பண்ணவும் கிறிஸ்துவின் மேல் அதிகாரம் செலுத்தவும் நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; சபை அமைதலாயிருக்க வேண்டும்.

## ''அவள் தலையை முக்காடிட்டுக் கொள்ளக்கடவள்''

நமது பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவுக்கு மாதிரியாயிருந்த பிரதான ஆசாரியன் மாத்திரமே ஆசாரிய வஸ்திரம் தரித்திருந்த போது தலையை மூடாமல் சென்றார் என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அவருக்குக் கீழாக (under-priests) இருந்த ஆசாரியர்கள் எல்லோரும், சபையான இராஜரீக ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாக இருந்தார்கள், அவர்கள் தலையை மூடுவதற்காக தலைப்பாகை (bonnets) அணிந்தார்கள். இப்படியான நிழல்– பொருள்

போதகம் நாம் இப்பொழுது தான் பார்த்திருக்கிறதற்கு முற்றிலுமாக ஒத்திருக்கிறது; எப்படியெனில் புது சிருஷ்டியின் சபைக் கூட்டங்களில், சகோதரர்கள் மெய்யான பிரதான ஆசாரியரான ஆண்டவரையும், அதே வேளையில் சகோதரிகள் சபை அல்லது இராஜரீக ஆசாரியத்தையும் அடையாளப்படுத்துகிறார்கள்; இவர்களைப் பற்றி அப்போஸ்தலர், அந்த பாடத்தைக் காட்டும் வண்ணம் –ஆண்டவருக்கு சபை கீழ்ப்பட்டிருப்பது போல –இவர்கள் ஒரு தலை முக்காட்டை அணிய வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் இதைப்பற்றி 1 கொரி. 11:3–7, 10–15 ல் விளக்கமாகக் கூறுகிறார்.

அப்போஸ்தலர், ஒரு ஸ்திரீயின் நீளமான மயிர் அவளுக்கு முக்காடாக இயற்கையினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால், அவர் இதைக்காட்டிலும் வேறு ஒன்றும் சொல்லவில்லை என்று சிலர் யூகிக்கிறார்கள்; ஆனால் 6 வது வசனம் இதற்கு எதிர்மாறாக தெளிவாக காட்டுகிறது. அவர், ஸ்திரீயானவள் இயற்கை கொடுத்திருக்கிறபடி மயிரை நீளமாக வளர விடுவது மாத்திரமன்றி, மேற்கொண்டும் தலையின் மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்; அதோடு, 10 வது வசனத்தில் அவர் அது ஒரு அடையாளம், அல்லது மனிதனுக்கு கீழ்ப்பட்டு, அல்லது அவனது அதிகாரத்துக்குட்பட்டு இருப்பதற்கு அறிகுறியாக அங்கீகாரம் என்பதோடு, முழு சபையும் பிரமாணத்தின்படி கிறிஸ்துவுக்குக் கீழ் இருக்கிறது என்று அர்த்தப்படும்படி போதிக்கிறார். 4 ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளதை முதன் முறையாகப் பார்க்கும் போது, சபைக் கூட்டங்களில் ஸ்திரீகள் அமைதலோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதற்கு முரணானது போன்றிருக்கிறது. நாம் நினைப்பது என்ன வெனில் பொதுவான சபை ஆராதனையில் ஸ்திரீகள் பகிரங்கமாக பங்கு பெறக் கூடாது, இருந்தாலும், வேத வசனம் போதிக்கப்படும் இடத்தில் தவிர, ஜெபத்திற்கும், சாட்சிக்கும் ஒழுங்கு பண்ணப்பட்ட பொதுவான கூட்டங்களில், சகோதரிகள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக்கொண்டு பங்கு பெறுவதில் எந்த விதமான ஆட்சேபமும் இருக்க முடியாது.

அடையாளமாக இருக்கும்படி சகோதரிகள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்றும், தொடர்ந்து செய்யப்படல் வேண்டும் என்றும் இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தலர் வலியுறுத்தினாலும், அது ஒரு திவ்விய கட்டளை என்று அவர் கூறவில்லை. அதற்கு மாறாக அவர் தொடர்ந்து ''ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ் செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கு அப்படிப்பட்ட வழக்கமில்லை'' என்று கூறுகிறார். அது ஒரு முக்கியமான விஷயம் என்று எண்ணப்படக் கூடாது; இருந்தாலும் ஆண்டவருடைய சித்தத்தைச் செய்ய நாடுகிறவர்கள் எல்லோரும், இதைக் குறித்தும், மற்றவைகளைக் குறித்தும், அது ஒரு ''அடையாளம்'' என்பது சரியானது தான் என்று புரிந்து கொள்ளுகின்ற வேளையிலிருந்து கவனமாயிருக்க வேண்டும். ''தூதர்களினிமித்தம்'' என்ற வார்த்தைகள் சபையின் மூப்பர்களைக் குறிக்கிறது, இந்த மூப்பர்கள் சபையின் தலையாகிய ஆண்டவரைக் குறிக்கிறார்கள். (வெளி. 2:1)



* * * * * * *

சுருக்கமாகக் கூறும் போது, சபையின் காரியங்களில் சகோதரிகளுக்கு உள்ள சுயாதீனத்தைக் குறித்து ஆவியினால் உந்தப்பட்டு எழுதப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குக் கூடுமான வரை மிகவும் தாராளமான முறையில் அர்த்தம் கொடுக்கப்படல் வேண்டும் என்று நாம் ஆலோசனை கூறுகிறோம். நாம் முடிவாக இவ்வாறு கூறுகிறோம்.

1. சபையின் வேலையாட்களாகிய மூப்பர்களையும், உதவிக் காரரையும் தெரிந்தெடுக்கிற விஷயத்தில் சகோதரரைப் போன்றே சகோதரிகளும் ஒரே சுயாதீனம் பெற்றிருக்கிறார்கள்.

2. சபையில் சகோதரிகள் மூப்பர்களாக அல்லது போதகர்களாக ஊழியம் செய்ய முடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறார்: ''உபதேசம் பண்ணவும்.......... ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை.'' (1தீமோ. 2:12) இதன்படி, சகோதரிகள் போதிப்பது, உபதேசம் பண்ணுவது போன்றவைகளில் அல்லாமல் ஜெபம், சாட்சி கூட்டங்கள், பெரோயா வேத பாடக் கூட்டங்கள் ஆகியவைகளில் பங்கு பெறுவதில் தடை பண்ணப்படல் வேண்டும் என்று புரிந்து கொள்ளக் கூடாது; ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறபடி, அவள் ஜெபம்

பண்ணும்போது அல்லது தீர்க்கதரிசனம் (பேசும் போது) சொல்லும்போது அவளுடைய தலையில் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும், இப்படிச் செய்வதன் மூலம் சகோதரர்கள் விசேஷமாக மாபெரும் போதகரான ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறார்கள் என்பதை அவள் ஏற்றுக் கொள்வதாகும். *(1 கொரி. 11:5,7,10)* இந்த மாதிரியாகப் பங்கு பெறுவது போதிப்பது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது, ஏனெனில் பங்கு பெறுகின்ற சகோதரர்களும் போதகர்கள் கிடையாது, எப்படியெனில் ''எல்லோரும் போதகர்களா?'' என்று அப்போஸ்தலர் கேட்கிறார். இல்லை, போதகர்களும், அல்லது மூப்பர்களும் விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் எப்பொழுதுமே ஆண்களிலிருந்து தெரிந்து கொள்ளப்படுகிறார்கள். *(எபே. 4:11; 2 தீமோ. 2:24; 1 கொரி. 12:28,29.)*